விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

30°c - 23°c
தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 81 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 03, திங்கட்கிழமை 15.02.2016

### இன்று ஜேர்மனி பயணமாகிறார் ஜனாதிபதி

கொழும்பு, பெப்.15
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இன்று ஜேர்மனிக்கான மூன்று நாள் உத்தியோக பூர்வ பயணத்தை மேற் கொள்ளவுள்ளார். பக். 25



## இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த பாடுபடுவேன்

### வடக்கின் புதிய ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 15
போரால் பெரிதும் பாதிக்கப் பட்ட வடக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் தாம் அயராது பாடுபடப் போவதாக வடக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.
அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துத் தமிழ்க் கட்சிகளுடனும் இணைந்து மக்களுக்காக சேவையாற்றுவதே தனது இலக்காகும் என்றும் அவர் நேற்று 'உதயனு'க்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டார்.
வடக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநராக ரெஜினோல்ட் கூரே, ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனமுன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் பக். 23



## வடக்கு மாகாண ஆளுநராக ரெஜினோல்ட் கூரே நியமனம்

### நேற்று வழங்கினார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், பெப். 15
வடக்கு மாகாண ஆளுநராக ரெஜினோல்ட் கூரே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றுக் கொண்டார்.
நாளை செவ்வாய்க்கிழமை ரெஜினோல்ட் கூரே தனது கடமையை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் பொறுப்பேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆங்கில ஆசிரியரான ரெஜினோல்ட் கூரே, 1988 ஆம் ஆண்டு அரசியலுக்குள் நுழைந்தார். ஆரம்பத்தில் மேல் மாகாண பக். 24



அப்ப இவரு எல்லாப் பதவிகளிலும் இருந்துதான் வாரார் பாருங்கோ...

## அரசமைப்புக்குக் கருத்துக் கூற வடக்கில் இது இறுதிச் சந்தர்ப்பம்

### இரு நாள் அமர்வு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், பெப். 15
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மக்கள் கருத்தறியும் அமர்வு, யாழ்.மாவட்டச் செயலகத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.
வடக்கு மாகாணத்தில் கடைசியாக இடம்பெறவுள்ள இந்த அமர்வில் பொதுமக்களைப் பங்கெடுத்து தமது கருத்துக்களைப் பகிருமாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக மக்கள் கருத்தறியும் அமர்வு கடந்த மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பித்து இடம் பெற்று வருகின்றது.
வடக்கு மாகா பக். 23

## வடக்கில் படை வசமுள்ள காணிகள் விடுவிப்பு முடிவு இம்மாத இறுதியில்

### வெளியிடுவார் ஜனாதிபதி

கொழும்பு, பெப்.15
வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் மற்றும் சொத்துக்களை விடுவிப்பது தொடர்பான முடிவை இந்த மாத இறுதியில் ஜனாதிபதி அறிவிப்பார்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் மீள் குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா.
இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-
வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்கள் காணிகள் மற்றும் சொத்துக்களை விடுவிப்பது தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதியால், விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டது.
குறித்த விசேட குழுவினர், வடக்குக்குச் சென்று நில விடுவிப்பு தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளனர். குறித்த அறிக்கை இந்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். பக். 25

## அரசியல் கைதிகள் மீதான வழக்கை மீளப்பெற சட்டமா அதிபருடன் பேச்சு

### இவ்வாரம் நடக்கும் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப். 15
தமிழ் அரசியல் கைதிகள் மீதான வழக்குகளை மீளப்பெறுவது தொடர்பில் இந்த வாரம் சட்டமா அதிபருடன் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.
இந்தத் தகவலை வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.
யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதன்போது, அவர் மேலும் கூறுகையில், பக். 23

## வடக்கு அபிவிருத்தி குறித்து அலரிமாளிகையில் கூட்டம்

### பிரதமர் மற்றும் முதலமைச்சரின் இணைத்தலைமையில் இன்று

யாழ்ப்பாணம், பெப்.15
வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் பிரதமர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் தலைமையில் விசேட கூட்டம் இன்று அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கூட்டத்துக்கு வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களின் அரச அதிபர்கள், பிரதம செயலாளர் ம்ற்றும் திணைக்களத் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.
அத்துடன் வடக்கின் அமைச்சர்களும் கலந்துகொள்வர் பக். 24

### இன்றுடன் முடிவடைகிறது பரணகம குழுவின் பதவிக்காலம்

கொழும்பு, பெப்.15
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான பக். 25

## வாள்வெட்டுக் குழு நேற்றிரவு தாவடியில் பெரும் அட்டகாசம்

### குடும்பஸ்தர் ஒருவரைக் கலைத்துக் கலைத்துத் தாக்கியது

யாழ்ப்பாணம், பெப். 15
வாள், கோடரிகளுடன் ஆயுதக் குழு ஒன்று, வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தரை துரத்தித் துரத்தி தாக்கியமையால் நேற்றிரவு தாவடியில் பதற்ற நிலை காணப்பட்டது.
குறித்த குடும்பஸ்தர் காயத்துடன் அந்தப் பகுதியிலுள்ள வீடொன்றின் மதில் பாய்ந்து ஓடித்தப்பித் துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த நிலையில் குறித்த வீட்டுக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த அடாவடிக் குழு, அவரைத்தேடி அடாவடித்தனத்தில் ஈடுபட்டது.
அதனால் அங்கு பதற்றம் ஏற்பட்ட பக். 23

## எமக்குரிய இராச்சியத்தையே நாம் திரும்பக் கேட்கின்றோம்

### சமஷ்டித் தீர்வின் மூலம் ஒரேநாடாக வாழ விரும்புகிறோம் என்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், பெப். 15
ஆங்கிலேயர் நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்னர் இலங்கையில் மூன்று இராச்சியம் காணப்பட்டது. சுதந்திரத்தின் பின்னர் ஆங்கிலேயர்கள் இவற்றை ஒன்றாக்கி தமிழர் இராச்சியத்தையும் சிங்களவர்களிடம், கையளித்துவிட்டுச் சென்று விட்டார்கள்.
எமது இராச்சியத்தையே நாம் திரும்பக் கேட்கின்றோம். சமஷ்டி அடிப்படையிலான தீர்வின் மூலம், ஒரே நாடாகவே வாழ விரும்புகின்றோம். இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் பக். 23



## 12, 000 முன்னாள் போராளிகளும் மீளக் கைது செய்யப்படவேண்டும்

### இல்லாவிடின் படையினருக்கும் பொதுமன்னிப்பு என்கிறார் சம்பிக்க

கொழும்பு, பெப்.15
போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறும் போது, புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்ட 12 ஆயிரம் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களையும் மீண்டும் கைதுசெய்யுமாறு அரசை கோருவோம் என எச்சரிக்கை விடுத்துள்ளது ஜாதிக ஹெல உறுமய.
இதனை அரசு செய்யாவிடின் படையினருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அதிகாரம் கையாளும் தகைமை தமிழ் சமூகத்திடையே இல்லை

## இராஜதந்திரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 15
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரங்களை சரிவரப் பயன்படுத்தவில்லை என்றும், அந்தத் தகைமை தமிழ் மக்களிடத்தில் இல்லாமல் போய்க் கொண்டிருப்பதாக பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் குற்றம் சுமத்துகின்றனர் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்.நகரில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை கூட்டமைப்பு 2011 ஆம் ஆண்டு கைப்பற்றியிருந்தது. இந்த உள்ளூராட்சி மன்றங்களில் ஊழல் - ஒழுக்கக்கேடுகள் இருப்பதாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அதனை கட்சி சரிவரக் கையாளவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

ஆனால் 2013 ஆம் ஆண்டு மாகாண சபையை கூட்டமைப்பு கைப்பற்றிய பின்னர், உள்ளூராட்சி மன்றங்கள் மாகாணசபைக்கு கீழ்பட்ட ஒன்றாக இருந்ததனால், மாகாண சபை உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தது. ஒரு உள்ளூராட்சி மன்றத்தை இதனடிப்படையில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த முதலமைச்சர் கலைத்திருந்தார்.

அதிகாரங்கள் எங்கள் கைகளுக்கு கிடைக்கின்ற போது நாம் அதனை எப்படிப் பாவிக்கின்றோம் என்பது தொடர்பில் பல விமர்சனங்கள் இப்போது எழுகின்றது. நீங்கள் ஆட்சி அதிகாரங்களைக் கேட்கின்றீர்கள். ஆனால் அதனை கையாளக் கூடிய தகைமை இப்போது உங்கள் சமூகத்திலே இல்லை என்று வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் எங்களிடம் சொல்கின்றார்கள். அதிகாரங்கள் உங்கள் கைகளில் கிடைத்தால் அதனைப் பாவிக்க முடியாமல் இருக்கின்றீர்கள் என்ற பெரிய குற்றச்சாட்டு எங்கள் மீது வந்து கொண்டிருக்கின்றது.

> ❝ கொடுக்கப்படுகின்ற அதிகாரங்களையாவது நாங்கள் பிரயோகிக்கின்ற போது அதனை சரியான முறையில் பிரயோகிக்க வேண்டும். மக்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையில் ஆட்சி அதிகாரங்களை உபயோகிக்க வேண்டும் என்பது அனைவரது எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. ❞

கொடுக்கப்படுகின்ற அதிகாரங்களையாவது நாங்கள் பிரயோகிக்கின்ற போது அதனை சரியான முறையில் பிரயோகிக்க வேண்டும். மக்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையில் ஆட்சி அதிகாரங்களை உபயோகிக்க வேண்டும் என்பது அனைவரது எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

ஒரு சில முறைகேடுகள் சம்பந்தமாக குற்றச்சாட்டுக்கள் எழுகின்ற போது அது ஆளும் கட்சியாக இருந்தால் ஆளும் கட்சிக்குள்ளே அது குறித்துப் பேச வேண்டும். ஆனால் அப்படியாக நடைபெறாமல் விடப்படுகின்ற போது அது உட்கட்சி விவகாரம் என்று சொல்லி மூடி மறைக்க முடியாது.

ஏனென்றால் ஒரு பொது நிறுவனத்தை நிர்வகிக்கின்ற போது, மாகாண சபையாக இருக்கலாம் உள்ளூராட்சிமன்றமாக இருக்கலாம் அது நேரடியாக மக்களுடைய நன்மைக்காக நிறுவப்பட்ட நிறுவனம். அதனுடைய பொறுப்பு எங்கள் கட்சிக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதனை நிறைவேற்றுகின்ற போது எப்படியாக நிறைவேற்றுகின்றோம் என்பதும் பொறுப்புக் கூறுவதும் கட்சிக்கு அல்ல. பொறுப்புக்கூற வேண்டியது மக்களுக்கு.

ஆகையால் அங்கே ஏதாவது ஊழல்கள் - முறைகேடுகள் இடம்பெறுகின்றது என்ற குற்றச்சாட்டு வந்தாலும் கூட அதனை சரியான முறையில் அணுக வேண்டும். சரியான முறையில் விசாரிக்கப்பட வேண்டும். மக்களுக்கு இது சரியான முறையில் விசாரிக்கப்படுகின்றது என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். எங்களுடைய கட்சி என்கின்ற காரணத்திற்காக மூடிமறைப்பதாக இருந்தால் நல்லாட்சி செய்கின்றோம் என்று சொல்ல முடியாது. நாங்கள் ஆட்சி அதிகாரங்களை கையாளத் தெரியாதவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு மீண்டும் உள்ளாகுவோம்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்துப் பிரேரணை நிறைவேற்றியுள்ளனர். ஆளும் கட்சி கூட்டத்தில் விவாதித்து அதில் பலன் காண முடியாத போது மக்கள் நலனுக்காக விசாரணை செய்யப்பட வேண்டும் என்று பிரேரணை நிறைவேற்றியுள்ளனர். விசாரணை கோருவது பொருத்தமான செயற்பாடு என்றுதான் நான் கருதுகின்றேன் - என்றார். (ற-5)

### மாவிட்டபுரத்தில் ஞானஸ்கந்த யாகம் நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், பெப்.15
மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் நாளை மறுதினம் புதன் கிழமை ஸ்ரீஞானஸ்கந்த யாகம் நடைபெறவுள்ளது. கேரளத்தைச் சேர்ந்த ஸ்ரீ சத்குரு சரவணபவபாபா முன்னிலையில் யாகம் இடம்பெறும்.

அதனையொட்டி, மாவைக் கந்தன் ஆலயத்தின் ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள் தலைமையில் ஸ்ரீ ஞானஸ்கந்த யாகம் நடைபெறவுள்ளது.

யாகபூசை, யாகஹோமங்கள், அபிஷேகம் அவற்றைத் தொடர்ந்து உச்சிக்காலப் பூசையும், மகேஸ்வரபூசையும், அகண்டநாம ஆராதனை மற்றும் பிரார்த்தனைகள் இடம்பெறும். அவற்றைத் தொடர்ந்து குருஜி ஸ்ரீ சரவணபவபாபாவின் ஆராதனை மற்றும் அவரது தரிசனமும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. (அ)

### தப்பியோடிய கைதி சிக்கினார்

யாழ்ப்பாணம், பெப். 15
தண்டனை பெற்ற கைதி ஒருவர் அதிகாரியின் இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது தப்பியோடிய நிலையில் நேற்றுக் காலை மீண்டும் அவர் பிடிக்கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்.சிறைச்சாலையிலிருந்து ஆனைக்கோட்டையிலுள்ள சிறைச்சாலை அதிகாரியின் இடத்துக்குக் கடந்த வெள்ளிக்கிழமை அந்தக்கைதியை அழைத்துச் செல்லும்போது தப்பியோடியுள்ளார். தப்பியோடிய அவர் ஆனைக்கோட்டையிலுள்ள கோயில் ஒன்றின் முன்பாக நின்றிருந்த போது பிடிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-4)

### புளொட் தலைமை அலுவலகம் வவுனியாவில் நேற்றுத் திறப்பு



வவுனியாவில் புளொட் அமைப்பின் தலைமைக் காரியாலயம் நேற்று திறக்கப்பட்டது.

வவுனியா கோவில்குளம் பகுதியில் உள்ள தோழர் உமாமகேஸ்வரனின் நினைவுத் தூபியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) வவுனியா மாவட்ட தலைமைக்கரியாலயம் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், சிவநேசன் மற்றும் சந்திரகுலசிங்கம் மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், கட்சியின் மகளிர் பிரிவினர், தோழர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் சமூக ஆர்வலர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-ஐ-21)



வவுனியா நகரில் நேற்று டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. வவுனியா பொலிஸார், நகரசபையினர், ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம், வர்த்தகர் சங்கம் ஆகியன இணைந்து சிரமதானத்தை முன்னெடுத்தனர். (ஐ-21)

### முல்லைத்தீவு அமர்வில் 87 பேரே பங்கேற்றனர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு நாள்களாக இடம்பெற்ற புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான மக்கள் கருத்தறியும் குழுவின் அமர்வில் 87 பேரே கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் புதிய அரசமைப்புத் தொடர்பான மக்கள் கருத்தறியும் அமர்வு இடம்பெற்றது. இந்த அமர்வின்போது முதல் நாளில் 50 பேர் தமது பதிவுகளை மேற்கெண்டு கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். இரண்டாவது நாளான நேற்று முன்தினம் 37 பேரே குறித்த அமர்வில் பதிவுகளை மேற்கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

இதேவேளை, கடந்த 8 ஆம், 9 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் குறித்த அரசமைப்பு தொடர்பான கருத்தறியும் அமர்வு நடைபெற்றபோது 136 பேர் இரு நாள்களாகக் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த 5 ஆம், 6 ஆம் திகதி வவுனியாவில் ஆரம்பமான குறித்த மக்கள் கருத்தறியும் அமர்வு தொடர்ச்சியாக கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மக்களுடைய கருத்துக்களைப் பதிவு செய்த பின்பு இன்றும் நாளையும் யாழ்.மாவட்டத்தில் மக்களுடைய கருத்தறியும் அமர்வை ஆரம்பிக்கவுள்ளது. (கு-21-ரி7)

## அமோக நெல் விளைச்சலால் விலையில் பெருமளவு வீழ்ச்சி

அச்சுவேலி,பெப்.15
குடாநாட்டில் காலபோக நெற்செய்கை மூலம் இந்த வருடத்தில் அமோக விளைச்சல் பெறப்பட்டுள்ளது. அதனால் நெல்லின் விலைபெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் காலபோக நெற்பயிர்ச் செய்கை ஆயிரத்து 723 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் மேற்கு வயல், தாழ்நில வயல் என்ற வேறுபாடு இன்றி சகல இடங்கலிலும் கணிசமான அளவு விளைச்சல் பெறப்பட்டுள்ளன.

நெல் கணிசமான அளவு விளைச்சல் தந்திருப்பதால் நெல்லின் விலையும் வீழ்ச்சி கண்டுள்ளது. சாதாரணமான குறுகியகால நெல் மட்டுமல்ல மரபுவழி நெல்லான மொட்டைக் கறுப்பன், பச்சைப் பெருமாள் இன நெல்லின் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் நெல்லின் விலை மேலும் குறைவடையலாம் என்ற நம்பிக்கையில் உள்ளூரில் நெல் கொள்வனவு செய் வோரின் நாட்டமும் குறைவாகக் காணப் படுகின்றது.

கடந்த காலங்களில் பாதுகாப்பு தரப்பினரின் கட்டுப்பாட்டில் இருந்து வயல் நிலங்கள் மற்றும் இராணுவ முகாம்களுக்கு அருகில் சுற்றுச் சூழலில் இருந்த வயல்களும் நெற்பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தப் பட்டமையால் நெற் பயிர்ச்செய்கையின் அளவு அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயன்படுத்தப்படாத காணிகளில் டெங்கு நுளம்புப் பெருக்கம் அதிகம்

## உரிமையாளர்களைக் கண்டறிவதில் சிரமம் என்கிறது பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, பெப்.15

பயன்படுத்தப்படாத காணிகள் மற்றும் வெளிநாட்டவரின் காணிகள் ஆகியவற்றில் டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகமான பகுதிகளாகக் காணப்படுகின்றன.

இதனால் குறித்த காணிகளின் உரிமையாளர்களைத் தேடி அறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு சிரமத்தை எதிர்கொள்வதாக, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பயன்படுத்தப்படாத காணிகள் மற்றும் வெளிநாட்டவர்களின் உரிமையிலுள்ள காணிகள் ஆகியவற்றில் டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகமாகக் காணப்படும் பகுதிகளாகக் காணப்படுகின்றன என பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

குறித்த காணிகள் பல வருடங்களாக துப்புரவு செய்யப்படாமையால், புல்கள் வளர்ந்து அவற்றுள் பழைய பிளாஸ்டிக் வெற்றுப் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் பைகள் காணப்படுகின்றன.

இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக, நாம் குறித்த காணிகளின் உரிமையாளர்களைத் தேடிய போது, அவர்களைக் கண்டறிய முடியாதுள்ளது. இந்த நிலையில் அயலில் வதிபவர்களிடம் விசாரித்த போது, குறித்த காணிகளின் உரிமையாளர்கள் வேறு நகரங்களில்அல்லது வெளிநாடுகளில் என்று தெரிவிக்கின்றனர்.

இதனால் உரிமையாளர்களைக் கண்டறியாமல் வழக்கு பதிவு செய்யமுடியாமல் உள்ளது.

இந்த நிலையில் கிராம அலுவலகள் மற்றும் உள்ளூராட்சி சபை அதிகாரிகளிடம் குறித்த காணிகளின் உரிமையாளர்களுடன் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்.

டெங்கு தடுப்புச் சட்டத்தின் பிரகாரம் நுளம்புப்பெருக்கம் காணப்படும் காணிகளை துப்புரவு செய்வதற்கு 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். தேவையேற்படின் மேலதிகமாக, 14 நாள்களை உரிமையாளர்களால் கோரிக்கை விடுக்க முடியும் – என்றார்.

இதேவேளை, யாழ்ப்பாணபொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கருத்து வெளியிடுகையில்:-

யாழ். மாவட்டத்தில் கைவிடப்பட்ட நிலையில் பல ஏக்கர் காணிகள் காணப்படுகின்றன. குறித்த காணிகளின் உரிமையாளர்கள் கொழும்பு மற்றும் வெளிநாடுகளில் உள்ளனர். குறிப்பாக, முன்பு விவசாய நிலங்களாகக் காணப்பட்ட காணிகளில் தற்போது, குப்பைமேடுகளாகக் காணப்படுகின்றன.

மேலும், நுளம்புப்பெருக்கத்துக்கு காரணமாகவுள்ள வியாபார நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்களிடம் அபராதம் விதிக்கப்படுகின்றன. எனினும் பயன்படுத்தப்படாத காணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாது –என்றார். (வ)

# வலி.மேற்கு உள்ளக வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும்

## சரபவணபவன் எம்.பியிடம் பொது அமைப்புக்கள் கோரிக்கை



வட்டுக்கோட்டை, பெப். 15

வலி. மேற்குப் பிரதேசத்துக்குட்பட்ட உள்ளூர் வீதிகள் பல நீண்ட காலமாக திருத்தப்படாமல் உள்ளது. அவற்றை விரைவாக புனரமைத்து மக்களின் இலகுவான போக்குவரத்திற்கு வழிசமைக்குமாறு வலி. மேற்கு பிரதேசத்தைச்சேர்ந்த பொது அமைப்புக்கள் பல சேர்ந்து ஒன்றாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனுக்கும், வலிகாமம் மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட பொது அமைப்புக்களுக்கும் இடையில் நேற்று மாலை வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரியாலத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே குறித்த அமைப்புக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மேற்படி கோரிக்கையை முன்வைத்தனர்.

வலிகாமம் மேற்கு பகுதியைச் சேர்ந்த, கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் சங்கங்கள், மற்றும் பொது அமைப்புகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணவபவனுக்கும் இடையில் நேற்று மாலை குறித்த கிராமங்களுடைய முன்னேற்றம், அவற்றிற்கு எடுக்கப்பட்ட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள், குறைபாடுகள் தொடர்பான பல விடையங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன் போது, குறித்த பிரதேசத்திற்குட்ப்பட்ட பல கிராமங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர். அவ்வாறு கலந்து கொண்ட அங்கத்தவர்களிடம் அவர்களுடைய கிராமத்தில் செய்யப்பட்ட வேண்டியபொதுவான அபிவிருத்திதிட்டங்கள் தொடர்பாக நாடாளுமன்றஉறுப்பினர் ஈ.சரவணபவன் கேட்டபோது, அங்குகலந்துகொண்டபலர்தமது கிராமங்களுக்கான உள்ளக வீதிகள் புனரமைக்கப்படவில்லை என்ற கருத்தையே முன்வைத்திருந்தனர்.

சுழிபுரம் காளவன் வீதி, மூளாய் தெற்கு வீதிகள், சங்கானை வீதிகள், பண்ணாகம்வீதிகள் போன்ற பல வீதிகள் நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படவில்லை எனவும்அவற்றைப்புனரமைத்துத் தருமாறும் கேட்டுக்கொண்டனர்.

மக்களுடைய குறித்த விடயங்களைக்கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், தன்னால் முடிந்த வரையில் தமக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்தும், பெரிய வீதிகளாயின் பிரதேச சபைகள், மாகாண சபையினரிடம் கலந் துரையாடி, அந்த வீதிகளை புனரமைப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

அத்துடன், மக்களுக்கு வேண்டிய பொதுவான பல அபிவிருத்தித் திட்டங்களையும்தான் முன்னின்று செயற்படுத்துவதாகவும் குறிப்பிட்டார். (வ-21)

### உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மகிந்தவுக்கு ஆதரவு

தேசிய அரசில் இணைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அதிலிருந்து வெளியேறவேண்டும், கைது வேட்டைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பது உட்பட ஐந்து தீர்மானங்களை அதிரடியாக நிறைவேற்றியுள்ளனர் மகிந்தவுக்கு சார்பான உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும் மகிந்த ராஜபக்சவுக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று நீர்கொழும்பு, கொச்சிக்கடையில் நேற்று நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மகிந்தவுக்கு விசுவாசமான முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். பசில் ராஜபக்ச உட்பட பொது எதிரணி என தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் மகிந்த அணியின் உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர். (வ-சி)

# எல்லையற்ற அநீதிகளுக்கு எதிராகவே ஆயுதம் ஏந்தினார்கள் தமிழ் இளைஞர்கள்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.15

வடக்கு–கிழக்கு தமிழ் இளைஞர்கள் எல்லையற்ற அநீதிகளுக்கு முகம் கொடுக்க முடியாமலே அதற்கு எதிராக ஆயுதம் ஏந்தியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

குறித்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போரிட்டமைக்கான காரணத்தை அறிந்து அந்த மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்கவேண்டியது அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலனறுவை வெலிகந்தைப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் முப்பது வருடங்களாக கொடிய போர் நடைபெற்றது. 26 வருடங்களுக்கு முன்னர் நான் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டபோதிருந்த பிரச்சினை இன்னும் தொடருகின்றது.

அண்மையில் இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அல்ஹூசேன் இலங்கை எழில் மிக்க நாடு என்றும் இந்த நாட்டில் முரண்பாடில்லாமல் அனைவரும் வாழ்ந்தால் எந்த அழுத்தத்தையும் தாம் கொடுக்கப் போவதில்லை என்றும் கூறியிருந்தார்.

வடக்கின் இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை முறையாகக்கண்டறியவேண்டும். எல்லையற்ற அநீதிகளுக்கு முகம் கொடுக்க முடியாதே அவர்கள் ஆயுதம் ஏந்தினர்.

வடக்கிலும் தெற்கிலும் வாழும் அனைவருக்கும் நீதியான சமூகம் ஒன்றே தேவைப்படுகிறது. சகவாழ்வும் ஒற்றுமையுமே இலங்கைக்கு இப்போது தேவை – என்றார் (வ)

# சிங்கள ஊடகத்தின் செய்தி குறித்து பிரதமர் கண்டனம்

யாழ்ப்பாணம். பெப். 15

சிங்கள தொலைக்காட்சி ஒன்றின் சொற்பிரயோகம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.



இலங்கையில் ஒபேரா இசைப் பாடகி கிஷானி ஜெயசிங்க கடந்த சுதந்திர தினத்தன்று புத்தரின் பெருமையை உணர்த்தும் "தன்னு புதுங்கே" என்ற சிங்கள பாடல் ஒன்றை சீன நளினத்தில் ஆடலுடன் பாடியுள்ளார்.

இதனைச் சிங்களத் தொலைக்காட்சி ஒன்று தமது செய்தியறிக்கையில் "பெல்லி(பிட்சி)", "பெண் நாய்"போன்று குறித்த பெண் சத்தமிட்டு பாடினார் (பெல்லியக் வாகே கேகான்னவா) என்று குறிப்பிட்டிருந்தது.

இதனை வன்மையாக கண்டித்துள்ள பிரதமர், குறித்த ஊடகம் பெண்களை கேவலப்படுத்தும் வகையில் இந்தச்சொல்லை பயன் படுத்தியமை, மோசமானது என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தொலைத் தொடர்புகள் ஒழுங்கு விதிகளுக்கு மாறான பொறுப்பற்ற செயல் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பதுளையில் வைத்து விசேட உரையொன்றை ஆற்றிய பிரதமர், வானொலிக்கு அல்லது தொலைக்காட்சிக்கு பெண்களை இழிவுப்படுத்தும் வகையில் சொற் பிரயோகங்களை பயன் படுத்துவதற்கு யார் உரிமை தந்தது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (வ-5)

இம்முறை
தனயோகம்
உங்களுடையதா?
14.02.2016 | 1942 | ஊதா
கும்பம்
09 41 48 55
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,358,000/-

Galaxy Star
வெற்றி வாரம் 034
திகதி 14.02.2016
10 07 10 23 45
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000/-

VACANCY (வேலைவாய்ப்பு)
சிறந்த தொடர்பாடல் மற்றும் அனுபவம் உடையவர்கள் பின்வரும் பதவிகளுக்கு எங்களுடைய நிறுவனத்திற்கு காலை 10.00 இருந்து மாலை 4.00 மணிவரை நேரடியாக சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.
01. அலுவலக உதவியாளர் (Female)
02. வெளிகள உத்தியோகத்தர் (Male)
வயதெல்லை 30 வரை
சிவிலிம No. 644, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 077 9494 200 www.sivilima.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி அமைச்சருக்கு எதிராக தனுன சட்ட நடவடிக்கை!

கொழும்பு, பெப்.15
தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவிடம் 250 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி, ஹைகோப் வழக்கில் குற்றஞ்சுமத்தப்பட்ட ஜனநாயக கட்சியின் அமைப்பாளர்களுள் ஒருவரான தனுன திலகரத்ன சட்ட நடவடிக்கை எடுத்துள்ளார். இராஜகிரியவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
தமது வங்கிக் கணக்கில் 800 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை வைப்பிலிடப்பட்டுள்ளது என்றும், அது ஊழல் மோசடி மூலம் கிடைக்கப்பெற்ற பணம் எனவும் விஜயதாச குறிப்பிட்டுள்ளதாக தனுன திலகரத்ன குறிப்பிட்டுள்ளார். இவ்விடயமானது, தமது நற்பெயருக்கு களங்கம் எற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் இதற்கெதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தனுன குறிப்பிட்டுள்ளார்.
குறித்த நிதி தொடர்பான விசாரணையில் இருந்து கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் தாம் விடுவிக்கப்பட்டதாகவும் தமது வங்கிக் கணக்கு தொடர்பான விவரங்கள் அமைச்சருக்கு வழங்கப்பட்டது என்றும் பின்னர் குறித்த பணத்தை விடுவிக்குமாறு அமைச்சரிடம் கோரியும் அமைச்சர் அதனை விடுவிக்காமல் குறித்த பணம் மோசடியால் வந்த பணமா என்பது குறித்து ஆராய வேண்டுமென தெரிவிப்பது தமக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.
இந்த ஆட்சி மாற்றமானது அனைவரும் ஒன்றிணைந்து கொண்டுவந்த ஒன்றென குறிப்பிட்ட தனுன திலகரத்ன, நல்லாட்சியில் இவ்வாறு நடந்துகொள்வது தவறு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# ரக்ன லங்கா நிறுவன விவகாரம் கோப் குழு அறிக்கை கையளிப்பு

கொழும்பு, பெப்.15
ரக்ன லங்கா நிறுவனமானது, கடந்த காலத்தில் பல்வேறு நிறுவனங்களுடன் கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கைகளின் சட்டரீதியான செல்லுபடித்தன்மை தொடர்பான விசாரணை அறிக்கை, சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று கோப் குழு தெரிவித்துள்ளது.
திறைசேரி ஊடாகவோ, சம்பந்தப்பட்ட அமைச்சினாலோ அல்லது அமைச்சரவையின் அனுமதியுடனோ குறித்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவில்லையென கோப் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார்.
குறித்த ஒப்பந்தங்கள் சட்டரீதியானதா, செல்லுபடியானதா அல்லது அத்தகைய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளும் உரிமை அவர்களுக்கு உள்ளதா என்பது பற்றியும் அவர் குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
குறித்த விசாரணைக்காக அரச வங்கிகள் உள்ளிட்ட ஆறு அரச நிறுவனங்கள் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள சுனில் ஹந்துன்நெத்தி, மேலும் 20 அரச நிறுவனங்களை அழைப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்தில், பல்வேறு ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாக குற்றஞ்சுமத்தப்பட்டு அது தொடர்பான விசாரணைகளை பாரிய ஊழல் மோசடி குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது. ரக்ன லங்கா நிறுவனத்துக்குச் சொந்தமான ஆயுதக் களஞ்சியசாலையொன்று, கடந்த வருடம் பெப்ரவரி மாதம் கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்டது. (ற)

# வாளிச் சின்னத்தில் போட்டியிடுவது மகிந்தவுக்கு பொருத்தமாக இருக்கும்

## அமைச்சர் பி.ஹறிசன் கூறுகின்றார்

கொழும்பு, பெப்.15
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வாளிச் சின்னமே பொருத்தமாக இருக்குமென்றும், புதிதாக அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்றும் அமைச்சர் பி.ஹறிசன் தெரிவித்துள்ளார். அநுராதபுர மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மகிந்த ராஜபக்ச என்பவர் ஒரு தனி மனிதரே தவிர, அவர் ஒரு கட்சியல்ல. மகிந்த ராஜபக்சவைப் பின்பற்றி, முன்னோக்கிச் செல்ல முடியுமென நினைத்தால் அது வெறும் கனவாகவே அமையும்.
இவர் மொட்டுச் சின்னத்தில் அல்லது தாமரைச்சின்னத்தில் போட்டியிட்டாலும் வெற்றி பெற முடியாது. இறுதியில் மலர் மொட்டு முறிந்து கீழே விழும்வரை அவர்களுக்குத் தெரியாது. வாளிச் சின்னமே இவருக்கு பொருத்தமாக இருக்குமென நான் நினைக்கிறேன். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வேலைத் திட்டங்கள் தொடர்பில் இன்னும் ஓரிரு வருடங்களில் நாட்டு மக்களுக்குப் புரியும். அதிகளவில் சத்தமில்லாவிட்டாலும், வேலைத்திட்டங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை மக்கள் புரிந்துகொள்வர். - என்றார். (ற)

INSTITUTE OF JUNIOR Spoken & Written Elocution
(எலக்கியூசன்)

பரீட்சையில் 100 புள்ளிகளைப் பெற்றவர்களைப் பாராட்டுகின்றோம்.
(கடந்த 12.02.2016 உதயனில் 7 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய விளம்பரத்தில் இவரது பெயர் தவறவிடப்பட்டிருந்தது)
T.அரிஞ்சயன்
(சி.29125) (13.18.20)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
காணிக் கட்டடம் கிணற்றடி விற்பனை அறிவித்தல்
சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான யாழ்.காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை காரியாலயத்தின் எதிர்பக்கமாகவும் சுன்னாகம் வர்த்தக வங்கிக்கு அருகில் அமைந்த "பணிக்கலாவத்தையும் வாரிகலட்டியும் கிணற்றடியும்" எனக் குறிப்பிடுகின்ற ஆதன இலக்கம் 3507 உடைய 05 பரப்பு 12.5 குளி கொண்ட காணி கட்டடம் கிணற்றடி விற்பனைக்கு உண்டு.
விற்பனை தொடர்பில் மீளளிக்க முடியாத வைப்பு ரூபா 1000/=, மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூபா 5000/= வும் சங்கத்தில் 29.02.2016ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னராகச் செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 29.02.2016 ஆம் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுன்னாகம் என்னும் முகவரிக்குத் தபால் உறையில் 'காணிக் கேள்விப் பத்திரம்' எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபால் மூலம் மட்டுமே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் 05.03.2016 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைமை காரியாலய மண்டபத்தில் திறக்கப்படும்.
மேலதிக விவரங்கள் தேவைப்படின் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
பொதுமுகாமையாளர்.
14.02.2016 021 321 2380

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
IELTS Life skills UK
ஆலோசனைகளுக்கு 777173517 யாழ்ப்பாணம் 0212224403
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
நெல்லியடி 021226 2470 | சாவகச்சேரி 021227 0775 | சுன்னாகம் 021224 1970 | கிளிநொச்சி 021228 5655

வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நல்லூர், திருநெல்வேலி மற்றும் கல்வியங்காடு பகுதிகளில் 4பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. (69302) (14,18,20)
தொடர்பு: 076 669 4884

கட்டடம் தேவை
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் ரெஸ்ரோறன்ட் நடத்துவதற்கு ஒரு கட்டடம் தேவை. (கட்டடத்திலிருந்து 500m இற்குள் பாடசாலை, வணக்கத் தலங்கள் இருத்தல் கூடாது)
தொடர்பு: 077 667 3626

மாடி வீடு, வளவு விற்பனைக்கு
கரவெட்டி தெற்கு, சரஸ்வதி வித்தியாலய வீதியில் உள்ள மாடி வீட்டுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (69307) (11,18)
076 987 2426, 077 714 7017

வீடு விற்பனைக்கு
மத்தியூஸ் வீதி கியூடெக்குக்கு அருகில் ¾ பரப்புக் காணியுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 614 6434

காணிவிற்பனைக்கு
கரவெட்டி தெற்கு, சரஸ்வதி வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு. (69307) (11,18)
076 987 2426, 077 714 7017

விற்பனையாளர் தேவை
யாழ் நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
(யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.) (69263) (14,18,20)
தொடர்பு: 077 293 5095



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ் 100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PAKED BY : Royal Industries
T.P: 077 727 7670 colombo - 13
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
- காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
1. பிறவுண் வீதி, நாவலர் வீதி, சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
14 . 04 . 1931

மறைவு
12 . 02 . 2016

## திருமதி நகுலேஸ்வரி சுப்பிரமணியம்

உள்ளம் உருகி கண்ணீர் வடிகிறது
இந்தக் காலை மட்டும் இருளாய் விடிகிறது
நாளை இருக்க வேண்டிய தாயை
நேற்றோடு அழைத்துக் கொண்டான் காலன்!
காற்றோடு கலந்த உம்மைக் காணாது தவிக்கின்றோம்
பிரிவுதனை ஆற்றாது கலங்கித் தவிக்கின்றோம்

நண்பனிடத்தில் ஆறுதலை எப்படிச் சொல்வோம்
அன்னையவள் பிரிவிற்கு ஈடாய் எதைக் கொடுப்போம்
இந்துவின் தோழர்கள் விழி வழிநிறை கண்ணீர்
மொழி வழி எழுகின்ற அஞ்சலி - மொத்தமாய்
காணிக்கை செய்கின்றோம் நித்திய ஒளியில்
அன்னையின் ஆத்மா ஆறுதல் அடையட்டும்.

யாழ். இந்து சிட்னி பழைய மாணவர் சங்க உறுப்பினர் **சுப்பிரமணியம் சுபதாசன்** (சுபா) அவர்களின் அன்னையாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அம்மாவின் ஆத்மா சாந்திக்காக நாமும் பரம்பொருளைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**யாழ். இந்து நண்பர்கள் - சிட்னி ஆஸ்திரேலியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**கந்தையா சிவராசதுரை**
(வளலாய்)



மலர்வு 27.09.1931
உதிர்வு 16.01.2016

வளலாய் எனும் பதியினிலே
விவசாயத்தை வினைத்திறனாய் செய்து
வளமாக வாழ்ந்தீரே வையகம் தனில்
விண்ணுலக வாழ்வுக்கு விரைந்த உமது
ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழைத்தோட்டம்,
நவாலி வடக்கு, மானிப்பாய். குடும்பத்தினர்.


# மாணவர்கள் எவரும் இல்லாமல் அதிபருடன் இயங்கும் பாடசாலை

யாழ்ப்பாணம்,பெப்.15
மாவிட்டபுரம் தெற்கு அமெரிக்க மிசன் பாடசாலை கடந்த ஒன்றரை வருடங்களாக மாணவர்கள் எவருமே இன்றி அதிபருடன் மட்டும் இயங்கி வருகின்றது என்று தெரிவித்துள்ள பாடசாலை அதிபர், இது குறித்து உரிய நடவடிக்கை வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அதிபர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறித்த பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் அயல் பாடசாலைகளான தெல்லிப்பழையூனியன் கல்லூரி மற்றும் மகாஜனாக் கல்லூரியில் இணைந்து கல்வி கற்கின்றனர்.

அத்துடன் அந்தச் சுற்றாடலில் வசிக்கும் குடும்பங்களில் அனேகமானோர் வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டனர். அந்தப் பாடசாலையின் குறைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி, வேறு பாடசாலைக்கு மாற்றம் செய்து தருமாறு பல முறைகோரியும், அதிகாரிகள் எந்த வித மாற்று நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

> "குறித்த பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் அயல் பாடசாலைகளான தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மற்றும் மகாஜனக் கல்லூரியில் இணைந்து கல்வி கற்கின்றனர்.
> அத்துடன் அந்தச் சுற்றாடலில் வசிக்கும் குடும்பங்களில் அனேகமானோர் வெளிநாடுகளுக்கும் சென்று விட்டனர்."

போர்க் காலப்பகுதியில் சேதமடைந்து காணப்பட்ட இந்தப் பாடசாலைக்குச் சில வருடங்களின் முன்னர் புதிய கட்டடம் மட்டும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. 27 வருடகாலமாக ஆசிரியசேவை செய்து வரும் தன்னை அந்தப் பாடசாலைக்குக் கடமை நிறைவேற்று அதிபராக நியமனம் செய்துள்ளனர். ஆனால் மாணவர்கள் ஒருவரும் இல்லை. அதனால் அந்தப் பாடசாலைக்கு மாணவர்கள் செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அல்லது வேறு உரிய நடவடிக்கை ஏதாவது எடுக்க வேண்டும். அங்கும் எனக்கு உரிய பணிகள் இன்மையால் எனதுஆசிரியர்சேவையை திருப்திகரமாகச் செய்ய முடியாமல் உள்ளது. பதவி உயர்வுகளுக்கும் இந்த நியமனம் தடையாகவும் இருக்கிறது.

இதற்குக் கல்வித் திணைக்களம் அல்லது வடமாகாண கல்வி அமைச்சு தகுந்த நடவடிக்கை எடுத்து தீர்வுகாண வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனிடம் தொடர்புகொண்டு கேட்ட போது:

இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படும் பிரதேசங்களிலுள்ள பாடசாலை களை மீளத் திறக்கவும் அதற்காக தற்காலிகமாக உரிய அடிப்படை வசதிகளை அமைக்கவும் கோரியுள்ளோம். வலி.வடக்கு, வலி.கிழக்கு உட்பட்ட பகுதிகளில் விடுவிக்கப்படும் இடங்களிலுள்ள பாடசாலைகளையும் மீளத் திறக்குமாறு கூறியுள்ளோம். மாவிட்டபுரம் அமெரிக்கமிசன் பாடசாலை தொடர்பில் இன்று நடைபெறும் கூட்டத்தில் கலந்துரையாடப்படும். உரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ற-ஐ-4,ரி)


## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 02 . 06 . 1940



இறப்பு 31 . 01 . 2016

**அமரர் வயித்திலிங்கம் தம்பிரான் துரைராஜன்**

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து எமக்கு நேரிலும், தொலைத்தொடர்புச் சாதனங்கள் மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள். இன்று (15.02.2016) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

து.வஜீசன்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (88932)(11,18) குடும்பத்தினர்.



## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கிருஷ்ணர் இராசதுரை**

உதயம் 02.10.1937
அஸ்தமனம் 15.02.2013

பரிவுடன் எம்மை அணைத்து பக்குவமாக
பண்புடன் பாசத்தையும் ஊட்டி விட்ட அப்பாவே !
திரியாண்டு சென்று மறைந்தாலும்
திரும்ப வருமா எமது அப்பாவைப் போல!
எரிகிறதே பற்றி எமது இதயம் – அணைத்திட
என்றுதான் எம்மிடம் வருவீர்கள் எமது அப்பாவே !
புரிகிறது எல்லாம் உலகமே மாயை என !
புண்ணியா ! நீர் என்றும் எம்முள்ளத்துள்ளே இருக்கின்றீரே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சோழியக்கட்டை,
மல்லாகம். (68798) (14,18,20)
அன்பு மனைவி (பிரான்ஸ்)
பிள்ளைகள், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள் (லண்டன்)


## தங்கூசி வலைகள் பயன்பாடு குறைவு

### யாழ்.குடாக் கடற்பரப்பில்

யாழ்.குடாக் கடற்பரப்பில் தற்போது தடைசெய்யப்பட்ட தங்கூசி வலையைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

அரசால் தடைசெய்யப்பட்ட இந்தத் தங்கூசி வலையைப் பயன்படுத்தி, மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதை அடுத்து, இந்தத் தொழிலில் ஈடுபடுவோர் மிக மிகக் குறைவடைந்துள்ளது என்று கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

என்றாலும் காக்கைதீவு மற்றும் பண்ணைக் கடற்பகுதியில் சிலர் இந்தத் தங்கூசி வலையைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது. இந்தக் கடற்பகுதியில் கடற்றொழில் பரிசோதகர்களால் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தங்கூசி வலையைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபடுவோரின் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (ற-ஐ-17)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1937.10.11
இறப்பு 2015.02.26

அமரர் **இரத்தினம் குமாரதாசன்**

ஆருயிர் தெய்வம் எங்கள் அறிவுக்கோர் தீபமானீர்
அரும் வழிகாட்டி நீங்கள் அன்பொடு பரிவும் காட்டி
பெருமையாய் வாழ்ந்தீர்
எம்மைப் பேணி நல்வழிகாட்டி இருப்பீர்கள் எம்முடனே
என்று எண்ணும் போதெங்கு சென்றீர்
வருந்துகிறோம் உம்மால் வாழ்வின் உண்மையும்
தெரிந்து கொண்டோம்

சிவன்கோயிலடி, கே.கே.எஸ் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில். (89256) (14,18,20)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## நீங்கா நினைவலைகள்

**31ஆம் ஆண்டு**



அமரர் முத்துவேலு தம்பி ஐயா (புங்குடுதீவு)

**21ஆம் ஆண்டு**



திருமதி இராஜலெட்சுமி தம்பிஐயா

**முதலாம் ஆண்டு**



திருமதி விஜயலெட்சுமி நடேஸ்வரன்

அன்னை மடியில் 1953.12.19
ஆண்டவன் அடியில் 2015.02.26
திதி: பூர்வபட்ச அட்டமி

ஆண்டொன்று சென்றது அக்கா எம்மை விட்டு நீங்கள் சென்று
சென்ற இடம் தெரியவில்லை திசை எதுவும் விளங்கவில்லை
கடல் கடந்து சென்ற நீங்கள்– எமைக் காண வருவீர் என்று காத்திருந்தோம்
[illegible] கண்கலங்க வைத்தது அக்கா
காலமெல்லாம் நின் நினைவில் வாழும் நாங்கள் நின் ஆத்மா
சாந்தியுற [illegible] தாள் வேண்டி நிற்கின்றோம் எந்நாளும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குறிகாட்டுவான், புங்குடுதீவு.03. (69311)(11,17,18) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஒப்புதல் வழங்கினாலே கடல் நீரை நன்னீராக்கும் திட்டம்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

மருதங்கேணியில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை அந்தப் பகுதி மக்களின் சம்மதம் – ஒப்புதல் இன்றி செயற்படுத்த முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்.நகரில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி மக்களை நான் நேற்று (நேற்று முன்தினம்) சந்தித்தேன். அவர்கள், கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்களைக் கொண்டிருக்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இரணைமடுத் திட்டம் தொடர்பில் 2014 ஆம் ஆண்டு சர்சை ஏற்பட்டது. இதன் போது, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்றிணைந்து, இரணைமடுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற தீர்மானத்தை எடுத்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு நீர் கொண்டு வருவதற்கு வேறு திட்டங்கள் பற்றி ஆராய்வது என்று இதன் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆறுமுகம் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் இதன்போது யோசனைகளாக முன்வைக்கப்பட்டது.

தற்போது தண்ணீரைக் கொண்டு வரும் திட்டத்தில், கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் கருத்திலெடுக்கப்பட்டுள்ளது. மருதங்கேணிப் பிரதேசத்தில் உவர்ப்புத் தன்மை குறைவாக இருப்பதனால் அதனை அங்கு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

> இது தொடர்பில் சுயாதீன நிறுவனம் ஒன்று ஆய்வு செய்து அதன் முடிவுகளை வெளியிட வேண்டும். தற்போது ஒரு நிறுவனம் ஆய்வுகளில் ஈடுபடுகின்றபோதும் அதன் சுயாதீனத் தன்மை குறித்து சந்தேகங்கள் உள்ளன.

ஆனால், அந்தப் பகுதி மக்களுக்கு இதில் பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன. கடல் நீரை நன்னீராக்கிய பின்னர் உப்புச் செறிவு கூடிய நீர் அந்தப் பகுதி கடலில் விடப்படும் போது மீன்வளம் அருகிவிடும் என்று அச்சம் கொள்கின்றனர்.

மக்களின் அச்சம் நியாயமானது. இது தொடர்பில் சுயாதீன நிறுவனம் ஒன்று ஆய்வுசெய்து அதன் முடிவுகளை வெளியிட வேண்டும்.

தற்போது ஒரு நிறுவனம் ஆய்வுகளில் ஈடுபடுகின்றபோதும் அதன் சுயாதீனத் தன்மை குறித்து சந்தேகங்கள் உள்ளன.

இந்த ஆய்வு முடிவில், சுத்திகரிக்கப்பட்ட பின் எஞ்சும் உப்புச் செறிவு கூடிய நீரை கடலில் நீண்ட தூரம் உள்ளே சென்றுவிடுவது என்ற ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டால் இது தொடர்பாக மக்களுடன் கூடி ஆராய்வோம். மக்களின் சம்மதமில்லாமல் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது. இந்தத் திட்டத்துக்கு நிதி வழங்கும் நிறுவனமும் மக்களின் சம்மதத்தைக் கோரியுள்ளது. எனவே, மக்களின் சம்மதமில்லாமல் திட்டம் நடைமுறைப்படுத்தக் கூடாது என்றும், மக்களுக்கு ஆதரவாகச் செயற்படுவோம்.- என்றார். (ந-5)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

சாவகச்சேரி,பெப்.15

சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்துக்கு மட்டுவில் கலாகேசரி சிற்பாலய விற்பன்னர் கி.கலாமோகன் தலைமையில் புதிதாக அமைக்கப்பட்ட நவகலச சித்திர சிற்பத் தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர் ச. திரவியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சரிய சுவாமிகள், பண்டிதர் சிவஸ்ரீது.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிக பீட முகாமைத்துவ கற்கைகள் அலகின் பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து கொள்ளவுள்ளார்.

சித்திர சிற்பத் தேர் வெள்ளோட்டத்தையடுத்து ஸ்தபதி கி.கலாமோகன் கௌரவிப்பு, வெள்ளோட்ட மலர் வெளியீடு, சிறப்புச் சால்வை வெளியீடு போன்றவை இடம்பெறும். (ந-ஜ-9)

## பெண்ணின் சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை

வடமராட்சி,பெப்.15

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுப் பின்னர் உயிரிழந்த பெண்ணின் சடலத்தை, உறவினர் எவராவது இருந்தால் பெற்றுக் கொள்ளுமாறும் அல்லது அவரைப்பற்றி தெரிந்தவர்கள் தகவல்களை வழங்குமாறும் பருத்தித் துறை பொலிஸார் கோரியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலையில் நெல்லியடி – கொடிகாமம் வீதியில் உள்ள சமுர்த்தி வங்கிக்கு அருகில் மயக்கத்துடன் வீதியில் வீழ்ந்து கிடந்த சுமார் 55 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரை, வீதியால் சென்றோர் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். அவர் அன்று மதியம் அளவில் சாவடைந்தார். தற்பொழுது அந்தப் பெண்ணின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதே அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பிரேத அறையின் குளிரூட்டிகள் பழுதடைந்தமையாலேயே சடலம் யாழ். போதனா வைத்திய சாலை பிரேத அறைக்கு மாற்றப்பட்டுள்ளது. (ந-ஜ-173,44,ரி)

## தொலைபேசி அழைப்பு மூலம் நூதனமாக கொள்ளை முயற்சி

சாவகச்சேரி, பெப்.15

வெளிநாட்டிலிருந்து இலங்கையில் உள்ளவர்களுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி அந்த நாட்டுக்கு அழைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் (நுழைவிசைவு, விமானப் பயண ரிக்கற், வதிவிடப் பதிவு) மேற்கொண்டு தரப்படும் என்றும்–அதற்காக ஒரு தொகையை வங்கியில் இடுமாறும் கூறி ஏமாற்றிப் பணம் பறிக்கும் சம்பவங்கள் நடந்துள்ளன.

வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் மூலம் யாழ்ப் பாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய உள் ளோம் என்று கூறித் தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் சிலர் இவ்வாறு நாசுக்காகப் பேசிப் பணம் பறிக்கும் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பப் பெண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்தி வெளிநாடொன்றில் உள்ள உறவினர் எனக்கூறிப் பணம் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் கூறப்பட்டது. குறித்த பெண்ணும் அதை வார்த்தையை நம்பிக் கணவன் வந்ததும் பணம் அனுப்புகின்றேன் என்று கூறியுள்ளார். கணவர் வந்ததும் பெண் விடயத்தைக் கூறியுள்ளார்.

கணவர் வெளிநாட்டில் உள்ள உறவினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவ்வாறான அழைப்பு ஏற்படுத்திப் பேசவில்லை எனத் தெரிவித்துள்ளார். அதையடுத்து இந்த ஏமாற்று நாடகம் அம்பலமாகியுள்ளது. (ந-ஜ-9)

## கரைச்சி பிரதேசசபை செயலாளரை தாக்கிய சந்தேகநபருக்கு மறியல்

கிளிநொச்சி,பெப். 15

கிளிநொச்சி- கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளரைத் தாக்கினார் எனத் தெரிவிக்கப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை செயலாளரைக் கடந்த 2ஆம் திகதி மாலை கிளிநொச்சி சந்தைப்பகுதிக்குள் வைத்து தாக்கிக் காயத்தை ஏற்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர், கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் குறித்த சந்தேகநபரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த 2 ஆம் திகதி மாலை கரைச்சிப் பிரதேச சபையினுடைய செயலாளர் கிளிநொச்சி சந்தைக்கு சென்ற வேளை ஒரு நபரைச் சிலர் தாக்குவதைக் கண்டுள்ளார். இதனை அடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்குவதற்காக தனது அலைபேசியை எடுத்துள்ளார். இதை அவதானித்த குறித்த நபர்கள் தங்களை அலைபேசி யில் படம் எடுப்பதாக நினைத்து அலை பேசியைப் பறித்து உடைக்க முற்பட்டனர், தாக்கியும் உள்ளனர்.

பின்னர் அலைபேசி யைத் தந்தனர் என்று தாக்குதலுக்கு இலக்கான பிரதேச சபை செயலாளர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தனது முறைப்பாட்டை பதிவு செய்திருந்துள்ளார். (ந-21,ரி3)

Join us for the welfare of Children

சிறுவர் நலனுக்காய் பங்களிக்க இணையுங்கள்

CCH
Centre for Children's Happiness

CCH (Centre for Children`s Happiness (GUARANTEE )Limited) சிறுவர்களின் உயரிய நலனை நோக்காகக்கொண்டு இலங்கையில் பணிபுரியும் இலாபநோக்கற்ற நிறுவனம் ஆகும். சிறுவர்களின் ஆளுமை விருத்தி, மேம்பாடு, திறன் விருத்தி, உளசமூக ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் பங்குபற்றல் என்பவற்றுக்கான வாய்ப்புக்கள், வளங்களை விரிவாக்குதலும் சிறார்களுக்கு சாதகமான சூழலை விருத்தி செய்வதும் இந் நிறுவனத்தின் பணிகளில் முக்கியமானவையாகும்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு, தன்னார்வம் கொண்ட வல்லுநர்கள், வளவாளர்கள், கல்வியாளர்கள், தொண்டர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து கீழ்வரும் வகிபங்குகளின் அடிப்படையில் தங்கள் பங்களிப்பை வழங்க விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. பகுதி நேர உத்தியோகத்தர்கள் (Part time Employees)
2. தன்னார்வப் பங்களிப்பாளர்கள் (Voluntary Supporters)
3. உள்ளக பயிற்சியாளர்கள் (Internship Students)
4. வளவாளர், பயிற்றுநர்கள் (Resource Persons & Trainers)

நீங்கள் கீழ்வரும் துறைகளை சேர்ந்தவர்களாவும், சிறுவர்களுக்காக உங்கள் பங்களிப்பை வழங்குவதில் ஆர்வம் கொண்டவருமாக இருப்பதை உறுதிசெய்து கொள்ளவும்.

a) உளவியல், உளவளத்துணை, உளசமூகம் மற்றும் சமூகவியல் துறை
b) சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமைகள்
c) மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை
d) கல்வி மற்றும் நுண்திறன், ஆக்கத்திறன் விருத்தி
e) கலைகள், சிறுவர் நாடகம்
f) தொழில் வழிகாட்டல், வாழ்க்கைத்திறன்
g) தகவல் தொழில்நுட்பம், பக்கவடிவமைப்பு, இணைய வடிவமைப்பு
h) இலக்கியம், எழுத்து, வெளியீடு மற்றும் ஊடகத்துறை
i) மொழிப்புலமை (English / தமிழ்), அறிக்கையிடல்
j) இயற்கை ஊக்குவிப்பு, சிறுவர் சூழல் வடிவமைப்பு
k) ஆய்வு

தங்களின் சுய விவரம் (CV) வகிபங்கு விருப்பொழுங்கு (1/2/3/4), துறைசார் விருப்பொழுங்கு (a to k) ஆகிய விவரங்களுடன், தாங்கள் பங்களிக்கக்கூடிய பிரதேசங்களையும் (கொழும்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மலையகம் - எமது செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்படும் இடங்கள்) தெளிவாகக் குறிப்பிட்டு கீழ்வரும், மின் அஞ்சல்/ முகவரிக்கு 25.02.2016 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும். பொருத்தமானவர்கள் மட்டும் மேலதிக கலந்துரையாடலுக்கு அழைக்கப்படுவர்.

In Jaffna
Manager
CCH
No.15, Kachcheri Nallur Road,
Jaffna.
cchforchildren@gmail.com

In Colombo
Manager
CCH
No.8, Ratnakara Place
Dehiwala
cchforchildren@gmail.com

To know more about our activities, visit www.facebook.com/cch.org

(சி.29120)
(13:18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையற்ற மாவட்டமாக முல்லைத்தீவை மாற்றுவோம்

## நேற்று பெண்கள் அமைப்பு மனிதச்சங்கிலிப் போராட்டம்



முல்லைத்தீவு,பெப்.15

பெண்களுக்கெதிரான வன்முறையற்ற முல்லை மாவட்டத்தை உருவாக்குவோம் என்ற தொனிப் பொருளில் நேற்று முல்லைத்தீவு சந்தியில் ஒன்று கூடிய சங்கமி சகோதரிகள் அமைப்பு கவனவீர்ப்பு மனிதச்சங்கலி போராட்டத்தில் ஈடுபட்டது.

இந்த எழுச்சி நிகழ்வில் பல பிரதேச பெண்கள் கலந்து கொண்டதுடன், திருகோணமலை மாவட்ட பெண்கள் அமைப்பும், மட்டக்களப்பு பெண்கள் அமைப்பினரும் இணைந்து மனிதச் சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"பெண்களுக்கெதிரான வன்முறைகளற்ற வீடுகளை, சமூகங்களை, நாடுகளை, உலகை உருவாக்குவோம்", "பெண்களுக்கெதிரான முல்லை மாவட்டத்தைக் கட்டியெழுப்புவோம்", "எங்கள் வீட்டிலும், நாட்டிலும் அன்பை நிறைப்போம்'' என்ற பதாகைகளை ஏந்திய வண்ணம் மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(ற-ஜ)

# மணற்குடியிருப்பு மதுக்கடை விவகாரம் முடிவு எட்டப்படுவதில் இழுபறி நிலைமை

முல்லைத்தீவு,பெப்.15

முல்லைத்தீவு நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள மது பானச்சாலையை மூடுமாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் தெரிவிக்க, அந்த மதுபானச் சாலையை தொடர்ந்து இயங்க அனுமதிக்க வேண்டும் என்று ஆளும் கட்சியின் மற்றொரு உறுப்பினர் போர்க் கொடி தூக்கியுள்ளார். அதனால் மது பான நிலையத்தை மூடுவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படாது கூட்டம் முடிவடைந்துள்ளது.

கடந்த மாதம் 24ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரப்பகுதியான மணற்குடியிருப்பு பகுதியில் மது பானச் சாலை அமைக்கப்பட்டது.

இதற்கு மிக அருகாமையில் சிறுவர் பூங்கா உள்ளதால் இந்த இடத்தில் மாலை நேரத்தில் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை அழைத்து வந்து மகிழ்வூட்டுகின்றார்கள் எனவும், முல்லைத்தீவு பகுதியின் சுற்றுலாப்பகுதியாகவும் இவ்வெளி காணப்படுகிறது எனவும் கூறப்பட்டது.

இதைவிட சைவ, கத்தோலிக்க மற்றும் இஸ்லாம் மத அமைவிடங்களுடன் சுனாமி நினைவாலயம், சிறுவர் முன்பள்ளி மற்றும் கச்சேரி என்பவை 500 மீற்றர் தூரத்துக்குட்பட்டதாக உள்ளன.

அதனால் குறித்த மது பானச் சாலையை மூட வேண்டும் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களான சாந்தி சிறீஸ்காந்தராஜா, சாள்ஸ் நிமலநாதன் ஆகியோராலும், பொது அமைப்புக்களாலும் முல்லைத்தீவு அரச அதிபருக்கு மனுக்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

அதையடுத்து குறித்த மது பானச் சாலையைத் தற்காலிகமாக நிறுத்துமாறு கோரி முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரால் குறித்த மதுபானச் சாலையின் நிர்வாகத்தினருக்கு கடந்த 5 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அதன் பின்னர் மதுபானச் சாலை மூடப்பட்டபோதும், மறு நாள் இரவு திடீர் என குறித்த மதுபானச் சாலை திறக்கப் பட்டது. இது குறித்து மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் மாவட்ட அரச அதிபருக்கு தெரியப்படுத்தியிருந்தார். இப்படிப்பட்ட குழப்பங்களை அடுத்து குறித்த மது பானச்சாலை தொடர்பான விசேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தலைமையில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவரான அன்ரனிஜெகநாதன் குறித்த மதுபானச் சாலை இயங்குவதற்கு சம்மதிப்பதாகத் தெரிவித்து மேலும் பல கருத்துக்களையும் முன்வைத்துள்ளார்.

எங்களுடைய மாவட்டம் கடந்த காலத்தில் இருந்து முழுப்பாதிப்படைந்து வருகிறது. சில சேட்டைக் கடிதங்களால் இங்கு மாற்றங்கள் ஏற்படுத்துவதை விரும்ப மாட்டோம். மணற்குடியிருப்பில் சட்டவிரோதமான முறையில் மது விற்பனை நிலையங்கள் நிறைய உள்ளன.

சட்ட பூர்வமான முறையில் வந்த ஒரு மது நிலையத்தை நிறுத்துவது எந்த வகையில் நியாயம்?. முல்லைத்தீவுக்கு மது விற்பனை நிலையம் தேவை. முல்லைத்தீவுக்கு மது விற்பனை நிலையம் வேண்டும் என்பதை நான் ஆதரிக்கிறேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து மதுபான நிலையத்தை மூடுவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படாது கூட்டம் முடிவுற்றுள்ளது.

(ற-ஜ-ரி7,21)

# நீங்கா நினைவில் நான்காம் ஆண்டு

மலர்வு
23.10.1952



உதிர்வு
15.02.2012



திதி: தசமி

## அமரர் கந்தையா சண்முகராசா

(உரிமையாளர் – அம்பாள் ஸ்ரோர்ஸ், வீரமாகாளி அம்மன் கோயிலடி சண் சுப்பர் மாக்கற்)

அன்பு காட்டி அறிவு ஊட்டி
இன்பமுடன் நாம் வாழ
இனிய வழி காட்டிய எம் தெய்வமே!
ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
ஆறாது உங்கள் நினைவலைகள்......
கலையாத நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

என்றும் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

34/1, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

# மக்கள் நலனைக் கவனிக்காது மதுபானச்சாலைக்கு அனுமதி

## வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் சாடுகின்றார்

> இங்கு அனுமதி எடுத்து திறக்கப்படும் குறித்த மதுபானச் சாலை மக்களுடைய வாழ்வுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியது. எனவே தான் இதை நிறுத்துமாறு கோருகின்றோம்.

முல்லைத்தீவு. பெப். 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் மணற்குடியிருப்பு என்னும் மக்கள் குடியிருப்பு பகுதியில் மதுபான விற்பனை நிலையத்தை திறப்பதற்கு அனுமதித்த முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தன்னுடைய வீட்டின் முன்னால் ஒரு மதுபான சாலை திறப்பதற்கு அனுமதிப்பாரா?. அரச அதிபர் மக்களுடைய பிரச்சினைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

– இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன்.

முல்லைத்தீவு மணற் குடியிருப்பு பகுதியில் கடந்த மாதம் 24ஆம் திகதி திறக்கப்பட்ட மதுபானச் சாலையை மூடுமாறு பலதரப்பினர் கோரிக்கை விடுத்திருந்தனர். அதையடுத்து மதுபான நிலையத்தை தற்காலிகமாக மூடுமாறு அரச அதிபர் கடிதம் அனுப்பியிருந்தார். ஆயினும் தற்போது மதுக்கடை திறக்கப்பட்டுள்ளது. மது பான நிலையத்தை மூடுவது குறித்து ஆராய நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கூட்டம் கூட்டப்பட்டபோதும் அது குறித்து முடிவேதும் எடுக்கப்படவில்லை. இது குறித்து கேட்டபோதே மாகாண சபை உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறித்த மதுபானச் சாலை தனியே மது விற்கும் இடமல்ல. ஆனால் இது அங்கேயே மது அருந்துவதான ஒரு மது பானச் சாலை. கடிதம் எழுதுபவர்கள் சட்ட விரோதமாக விற்கப்படும் மதுபானங்[illegible]தும் எழுதவில்லை என்று நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது என்று அறிகின்றேன். இவற்றை தடுப்பதற்கு தான் பொலிஸ் உள்ளது. அவ்வாறு அவர்களால் தடுக்க முடியாது என்றால் அதற்காகத் தான் எங்களிடம் பொலிஸ் அதிகாரத்தை தாருங்கள் என்று கேட்கின்றோம். சட்ட விரோதமான மதுவிற்பனைகளை பொலிஸார் தான் பார்த்து கொள்ள வேண்டும். இங்கு அனுமதி எடுத்து திறக்கப்படும் குறித்த மது பானச் சாலை மக்களுடைய வாழ்வுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியது. எனவே தான் இதை நிறுத்துமாறு கோருகின்றோம்.

இதற்கு அரச அதிபரே பொறுப்புக் கூற முடியும். மாவட்ட அரச அதிபர் கூட மக்கள் சார்ந்த பிரச்சினைகளை பற்றி சிந்திக்காமல் மதுபானச் சாலைக்கான அனுமதியை வழங்கியுள்ளார். இதே அரச அதிபரின் வீட்டின் முன்னால் ஒரு மதுபானச் சாலை திறக்கப்படுமானால் அதை அவர் அனுமதிப்பாரா? எவர் இதற்கு ஆதரவு வழங்கினாலும் இந்த மக்களுடைய நலனுக்காகவும் மாவட்டத்தின் எதிர் காலத்தை கருத்திற் கொண்டும் குறித்த பகுதியை சேர்ந்த மக்களுடனும், பொது அமைப்புக்களுடனும் இணைந்து இந்த மதுபானச் சாலையை மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு பின்நிற்க மாட்டேன்– என்றார்.

(ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவரைத் தாக்கிய கடற்படை மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வலியுறுத்து

மன்னார்,பெப்.15

மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை காலை கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் மீது இரணைதீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் சுதந்திரம் ஏற்பட்டுள்ள போதும் எமது வடபகுதி மீனவர்கள் இன்று வரை சுதந்திரமாக கடற்றொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் எமது மீனவர்கள் ஏதோ ஒரு வகையில் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த வரிசையில் பள்ளிமுனை மீனவர்கள் இருவர் மீது கடற்படையினர் இரணைதீவு கடற்பகுதியில் வைத்து மேற்கொண்டுள்ள கத்தி வெட்டுச் சம்பவமும் அமைந்துள்ளது.

குறித்த சம்பவம் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது. பாதிக்கப்பட்ட இரு மீனவர்களும் தற்போது மன்னார், யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுழியோடி மீன் பிடியில் ஈடுபட்ட இரு மீனவர்களை எந்தவித காரணங்களும் இன்றி கடற்படையினர் கைது செய்து முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மீனவர்கள் கடலில் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டால் அவர்களை கடற்படையினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைக்க முடியும். ஆனால், கடற்படையினர் அதிகாரத்தை கையில் எடுத்து மீனவர்களை கண்மூடித்தனமாக தாக்குதல்,அவர்களை வெட்டுதல் போன்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாது.

குறித்த சம்பவத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதோடு, மீனவர்கள் மீது கத்தியால் வெட்டி தாக்குதல்களை மேற்கொண்ட கடற்படையினரை உடனடியாக சட்டத்தில் முன் கொண்டு வர பொலிஸார் துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (ற-ஐ-56)

## காசோலையை பெற்றுக் கொள்ளலாம்

அச்சுவேலி, பெப்.15

வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மாற்றுவலுவுடையோர் 20 பேருக்கு, சுய தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கு வசதியாக சமூக வலுவூட்டல் அமைச்சின் அங்கவீனமுற்றோருக்கான செயலகம் நிதி வழங்கியுள்ளது.

அவர்களுக்கான காசோலையை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக சமூக சேவைபிரிவுடன்தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-11)



காதலர் தினத்தை முன்னிட்டு வடக்குக்கும் தெற்குக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வு, அன்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் பொருட்டு வடமராட்சி சக்கோட்டை கடற்கரையில் 12 புறாக்கள் பறக்கவிடப்பட்டன. இந்தப் புறாக்கள் 4 மணித்தியாலத்தில் வத்தளையை அடையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். நிகழ்வில் வடமராட்சிப்பகுதிக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.ஜவ்பர், பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யுவான் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி அதிபர் முகுந்தன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஐ-109)

# குத்தகைக்கு விடப்படாத காக்கைதீவு மீன் சந்தை

யாழ்ப்பாணம்,பெப்.15

குத்தகைக்கு எடுப்பவர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாட்டால் காக்கைதீவு மீன் சந்தை இரு மாதங்களாகியும் குத்தகைக்கு வழங்கப்படவில்லை. அதனால் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் பிரதேச சபையின் வருமானத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த இழுபறி நிலைக்கு தீர்வுகாண முன்வந்துள்ள பிரதேசசபை செயலாளர், இந்த விடயம் குறித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன் சந்தையை தற்காலிகமாக மூடுவதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள காக்கைதீவு சந்தை வருடாவருடம் குத்தகைக்கு வழங்கப்பட்டு வந்தது. வழமைபோல் இந்த வருடமும் குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி கோரப்பட்டபோது அந்த விலைக்கு சந்தையை எடுக்க எவரும் முன்வரவில்லை. இதையடுத்து இரண்டாவது தடவையாக எடுத்த முயற்சியும் பயனளிக்கவில்லை. இந்த நிலையில் பிரதேச செயலாளர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக சந்தையைக் குத்தகைக்கு எடுக்க பொது அமைப்புக்கள் முன்வந்த போதிலும், அமைப்புக்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் சந்தை குத்தகைக்கு வழங்கப்படவில்லை.

இதையடுத்து, இந்த இழுபறிநிலை குறித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்த செயலாளர் இதற்குத் தீர்வு காணும் வகையில் சந்தையை தற்காலிகமாக மூடுவதற்கான ஒழுங்குகளையும் மேற் கொண்டுள்ளார். (ற-ஐ-115)

## மாந்தை மேற்கு பிரதேச சபையில் நிலவும் அட்டவணைப் படுத்தப்படாத வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் - 2016

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வீதி/வெளிக்களத்தொழிலாளி | 01 |
| 2 | சுகாதாரத்தொழிலாளி | 03 |
| 3 | காவலாளி | 01 |

01. சுகாதாரதொழிலாளி - சம்பளத்தொகுதி
PL 1-2006 A -11730 - 10x120-10x130-10x145-12x160-17600

02. வீதி/வெளிக்களத்தொழிலாளி - சம்பளத்தொகுதி
PL 1-2006 A -11730 - 10x120-10x130-10x145-12x160-17600

03. காவலாளி - சம்பளத்தொகுதி.
PL 1-2006 A -11730 - 10x120-10x130-10x145-12x160-17600

சேவை நிபந்தனைகள்:

01. பதவி நிரந்தரமானதும் ஒய்வூதிய உரித்துடையதும் ஆகும்.
02. ஊழியர் விதவைகள் / அனாதைகள் ஒய்வூதியத்திற்கு அளிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

அடிப்படைத் தகைமைகள்:

01. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. விண்ணப்ப முடிவுதிகதியின்போது 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
03. எமது அதிகாரப் பிரதேசத்திற்குள் குறைந்தது 5 வருடங்களாவது நிரந்தரமாக வசித்திருந்ததற்குரிய கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழ் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு பெறப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது வாக்காளர் இடாப்பு பட்டியலின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். போதிய விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து பிரதேச சபை அமைந்துள்ள மாவட்டம் கருத்தில் கொள்ளப்படும்.

கல்வித் தகைமை - சுகாதாரத் தொழிலாளி, வீதி / வெளிக்களத் தொழிலாளி, காவலாளி

01. க.பொ.த.சா/த பரீட்சையில் 2 அமர்வுகளுக்கு மேற்படாதவகையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் 2 பாடங்களில் திறமைச் சித்திபெற்றிருத்தல் வேண்டும். ஒரு அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
02. போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 8/ ஆண்டு 9 சித்தி பெற்றிருத்தல் கவனத்தில் கொள்ளப்படும்.

வேறு தகைமைகள்:

01. மேலதிக தகைமைகள், அனுபவம் விசேட தகைமையாகக் கருத்தில் கொள்ளப்படும்.

தெரிவுசெய்யப்படும் முறை

01. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு தெரிவுகள் இடம்பெறும்.

விண்ணப்பிக்கும் முறை:

01. மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா.100 ஐ செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று உரிய திகதிக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. பதவிக்கு தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பமுடிவுதிகதியன்று பூர்த்தியாக்கப்பட்டிருத்தல்வேண்டும்.
04. வழங்கப்படும் தகவல்கள் பொய்யானதென உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் இரத்துச்செய்யப்படும்.

விண்ணப்பமுடிவுதிகதி - 29.02.2016

செயலாளர்,
மாந்தைமேற்கு பிரதேச சபை, அடம்பன்.

(சி.29120) (13.18.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம்

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, பெப்.15

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டாம் எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அரசிடம் மீண்டும் கோரியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் துரித கதியில் நடத்தப்பட வேண்டும் என்று அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

அதிகாரிகளின் கீழ் இயங்கி வரும் உள்ளூராட்சி மன்றங்களில் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளின் உள்ளூராட்சி மன்றங்களில் இந்த நிலையை தெளிவாக அவதானிக்க முடியும். சில உள்ளூராட்சி மன்றங்கள் இரண்டு ஆண்டுகளாக பொதுமக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு இன்றி நிர்வாகம் செய்யப்படுகின்றது.

இவ்வாறான நிலைமையானது மக்களின் ஜனநாயக உரிமை மீறலாகவே கருதப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

> "உள்ளூராட்சி மன்றங்களில் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்."

இதேவேளை- ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்தாலோசித்து விரைவில் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார். (ற)



## சிவனொளிபாதமலைக்கு 5 லட்சம் யாத்திரிகர்கள்

கொழும்பு, பெப்.15

சிவனொளிபாதமலைத் தரிசன யாத்திரைக்காக ஐந்து லட்சம் யாத்திரிகர்கள் ஹற்றன் நல்லதண்ணி ஊடாகவும், பெல்மடுல்ல இரத்தினபுரி ஊடாகவும் பயணித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் பெருந்தொகையான வாகனங்கள் சிவனொளி அடவிப் பகுதிக்கு வந்துள்ளன என்றும், நல்லதண்ணியிலிருந்து மவுஸ்ஸாகெல வரையான 10 கிலோ மீற்றர் தூரத்துக்கு வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிவனொளிபாதமலைக்கு செல்லும் பக்தர்கள் மலை உச்சிக்கு செல்லும் போது அதிகப்படியான யாத்திரிகர்களின் நெரிசல் காரணமாக மலைக்குச் செல்ல முடியாமல் திரும்புகின்றனர் என்று சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான தேரர் தெரிவித்துள்ளார்.

யாத்திரிகர்கள் பலர் இசைக் கருவிகள் சகிதம் வந்திருப்பதால் அவற்றை மஸ்கெலியா பொலிஸ் பாதைத் தடையில் விட்டுச் செல்ல பொலிஸார் அனுமதித்துள்ளனர்.

அத்தோடு மவுஸ்ஸாகெல, நீர்த்தேக்கம் உள்ளிட்ட பாதுகாப்பற்ற இடங்களில் குளிக்க வேண்டாம் என தொடர்ச்சியாக யாத்திரிகர்களுக்கு பொலிஸாரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

போதைப் பொருள்கள், மதுபானம் மற்றும் இசைக்கருவிகள் உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பொருள்களை யாத்திரிகர்கள் தம்முடன் எடுத்துவரக்கூடாது என நல்லதண்ணி பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். (ற)

## துப்பாக்கி வெடித்து இணைப்புச் செயலர் காயம்

கொழும்பு, பெப்.15

நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்கவின் இணைப்புச் செயலாளர் துப்பாக்கி வெடித்துக் காயமடைந்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்கவின் மெய்ப் பாதுகாவலர்களில் ஒருவரது துப்பாக்கியே வெடித்துள்ளது.

அநுராதபுரம் பீரிமன் மாவத்தையில் அமைந்துள்ள காரியாலயத்தில் வைத்து துப்பாக்கியை எடுத்துப் பார்த்து அதனை அங்கும் இங்கும் அசைத்துக் கொண்டிருந்தபோது தவறுதலாக துப்பாக்கி வெடித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமாரவின் இணைப்புச் செயலாளராக 49 வயதான பி.எம். அமரசிங்க என்பவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

அமரசிங்கவுக்கு, கைகள் மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும் - வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.நாடாளுமன்ற உறுப்பினர் வீர குமார திஸாநாயக்க, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் உறுப் பினராவார். (ற)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்
22 . 01 . 1928



மறைவு
17 . 01 . 2016

அமரர் பொன்னையா தங்கவேல்

(இரத்தின வாத்தியார்)

கடந்த 17.01.2016 சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு அமரர் பென்னையா தங்கவேல் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.02.2016) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி பொலிகண்டி தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன உபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சின்னக்கடை,
பொலிகண்டி கிழக்கு,
பொலிகண்டி.

077 222 9354 குடும்பத்தினர்.


## சம்பூர் அனல் மின்சார மையத்துக்கு அனுமதி

### மத்திய சுற்றாடல் துறை வழங்கியது

கொழும்பு, பெப்.15

திருகோணலை, சம்பூர் அனல் மின்சார மையத்துக்கான சுற்றாடல் அனுமதியை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழங்கியுள்ளது. எனினும் இந்த அனுமதியின் கீழ் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிபந்தனைகளை இலங்கை மின்சாரசபையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தத் திட்டம், பல்வேறு சர்ச்சைகள் காரணமாக பல வருடங்கள் பின்தள்ளிப் போயுள்ளது.

இந்தநிலையிலேயே மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதி, இந்திய வெளியுறவு அமைச்சர் சுஸ்மா சுவராஜ் இலங்கைக்கு வருவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் கிடைத்துள்ளது.

இதனையடுத்து கடந்த 11ஆம் திகதியன்று ஜனாதிபதி மைத்திரிபால சம்பூர் அனல் மின்சாரத் திட்டத்தை ஆரம்பிக்கும் முகமாகச் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - சம்பூர் மின்சார மைய ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டால், சுமார் 30 ஆயிரம் பேர் இடம்பெயர நேரிடும் என்று கூறி, ஜே.வி.பி. மனித உரிமைகள் ஆணையகத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்துள்ளது. (ற)

## மகிந்தவை சந்தித்து பேசிய உள்ளூராட்சித் தலைவர்கள்

கொழும்பு, பெப்.15

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் சந்தித்துப் பேசியுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

குறித்த சந்திப்பானது நீர்கொழும்பில் இடம்பெற்றுள்ளது என்று குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டதன் பின்னர் வலுவடைந்துள்ள நிலைமைகள் குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக் கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்தாமையால் பிரதேச நிர்வாகம் வீழ்ச்சியடைந்துள்ளமை குறித்தும் முன்னாள் ஜனாதிபதியிடம் இதன்போது அவர்கள் தெளிவுப்படுத்தியுள்ளனர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

கொழும்பில் மகிந்த ராஜபக்ச புதிய கட்சி அலுவலகம் ஒன்றை அமைத்துள்ள நிலையில் -குறித்த சந்திப்பானது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இதேவேளை- சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் ஏழு பேரின் கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷிரந்தி, நாமலுக்கு எதிராக விரைவில் வழக்கு தாக்கல்!

கொழும்பு, பெப்.15
முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ச மற்றும் மகன் நாமல் ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக விரைவில் வழக்குத் தொடரப்பட உள்ளது என்று கொழும்பு வார இறுதி பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு சொந்தமான சட்டத்தரணி சேவை நிறுவனமொன்றில் இடம்பெற்ற நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஷிரந்தி ராஜபக்சவின் சிரிலிய சவிய நிறுவனத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்த இரண்டு நிறுவனங்களிலும் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்றும் இது குறித்த விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன என்றும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு அறிவித்துள்ளது.

> நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு சொந்தமான சட்டத்தரணி சேவை நிறுவனமொன்றில் இடம்பெற்ற நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நாமல் ராஜபக்ச மற்றும் ஷிரந்தி ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக விரைவில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

நாமல் ராபஜக்சவின் நிறுவனத்தில் இடம்பெற்ற 500 மில்லியன் ரூபா கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும், ஷிரந்தி ராஜபக்சவின் சிரிலியே சவிய நிறுவனத்தில் இடம்பெற்ற பல மில்லியன் ரூபா கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது என்றும், இந்த விசரணைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்றும் பாதுகாப்பு தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை- லசந்த விக்ரமதுங்க மற்றும் வசிம் தாஜுதீன் கொலைகள் தொடர்பிலான விசாரணைகளும் இறுதிக் கட்டத்தை அண்மித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பல்கலை மாணவர் 27 பேர் விபத்தில் காயம்

கொழும்பு, பெப்.15
பதுளை, கொழும்பு பிரதான வீதியில் பண்டாரவல, கொலதன்ன ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 27 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பஸ்வண்டியும், கொன்ரைனர் ரக லொறியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பஸ் வீதியில் கவிழ்ந்துள்ளது.

விபத்துக்குள்ளாகிய பஸ் வண்டி சப்ரகமுவ பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமானது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதில் காயமடைந்தவர்கள் ஆங்கில டிப்ளோமா பாடநெறியைத் தொடரும் மாணவர்கள் எனவும் பண்டாரவல பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ற)

## மகிந்தவுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கை!

கொழும்பு, பெப்.15
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் உள்ளாக்கப்படுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுங்குகளை மீறிய குற்றச்சாட்டின்பேரில் 30 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நட வடிக்கை எடுப்பதென்று ஏற்கனவே சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு முடிவெடுத்துள்ளது. இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீதான நடவடிக்கை தொடர்பான தகவலும் வெளியாகியுள்ளது. (ற)



## தற்போதைய அரசைக் கவிழ்ப்பது சுலபம்

### அபேகுணவர்த்தன எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, பெப்.15
நாட்டில் தற்போது ஆட்சியில் இருக்கும் அரசைக் கவிழ்ப்பது சிரமமான காரியமல்ல என முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி, இரத்தினபுரி – கொடக்கவெல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஒழுங்கு செய்திருந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை- படையினர் எவரையும் போர்க் குற்ற நீதிமன்றத்தில் நிறுத்த போவதில்லை என அரசு உறுதியளித்துள்ளது என்று மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரை போர்க் குற்ற நீதிமன்றத்துக்கு கொண்டுசென்றால், தான் அரசில் தொடர்ந்தும் அமைச்சராகப் பதவி வகிக்க போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## பௌத்த மதத்துக்கு முன்னுரிமை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.15
பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பான கொள்கைகளில் மாற்றம் இல்லை என்று தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

மல்வத்து, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையில் எந்த மாற்றமும் செய்யப்படாது. பௌத்த சாசனம் தொடர்பான உத்தேச சட்டம் மகாநாயக்க தேரர்களின் வழிகாட்டல்களின் அடிப்படையிலேயே உருவாக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் உள்ளூராட்சி மன்ற அடிப்படையில் பிளவடைந்து செயற்படுவதால் எந்த நன்மையும் கிடைக்காது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## மகிந்தவின் மோசடி தொடர்பில் ஆராய வந்தது நாணய நிதியக் குழு

கொழும்பு, பெப்.15
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட 250 பில்லியன் டொலர்கள் பெறுமதியான வேலைத் திட்டங்கள் தொடர்பிலான கணக்கீடுகளை மேற்கொள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.



சர்வதேச நாணய நிதியத்தின் சட்ட ஆய்வு மற்றும் கணக்கீட்டு அதிகாரிகள் கொண்ட விசேட குழு அடுத்த வாரமளவில் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ள விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

> கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இந்த 250 பில்லியன் டொலர்கள் பெறுமதியான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இந்த 250 பில்லியன் டொலர்கள் பெறுமதியான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இதற்கான அனுமதி திறைசேரியிடம் இருந்தும் உரிய கட்டமைப்பிலிருந்தும் பெறப்படவில்லை என்ற குற்றச்சாட்டு காணப்படுகின்றது.

இந்த நிலையில் இலங்கைக்கு பயணம் செய்யும் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் இது குறித்து ஆராயப்பட விருப்பதோடு, ஆய்வுகளின் முடிவில் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை- மகிந்த ராஜபக்ச அரசின் ஆட்சியின் கீழ் இடம்பெற்ற நிதிமோசடிகள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவி வழங்க அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் முன்வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெனோவா செபமாலை



தோற்றம்
03 . 01 . 1935

மறைவு
13 . 02 . 2016

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தாளையடி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெனோவா செபமாலை 13.02.2016 சனிக்கிழமை பருத்தித்துறையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அலேஸ்பிள்ளை - விக்ரோறியா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கலிங்கத்துப்பிள்ளை - மாகிறேற் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற C.S.A செபமாலையின் (முன்னாள் பாடசாலை அதிபர்) அன்பு மனைவியும் அருள் வரதராஜன், அருள் சௌந்தரராஜன்(கொலன்ட்), அகஸ்ரின் செல்வராஜன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரிதிரேசா (கனடா), காலஞ்சென்ற வலன்ரையின், அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான மேரியோசேப்பின் பத்திநாதர், மேரிசந்தானா(ஜேர்மனி), மரியகொறற்றி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவமலர், சுரேந்தினி(கொலன்ட்), அகிலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் றொபேற்ரோ, றொகான், அனைக்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (15.02.2016) திங்கட்கிழமை பி.ப 2மணிக்கு புனிததோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனிததோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விசாரணைப் பொறிமுறை; தமிழர் கவனமாக செயற்பட வேண்டும்

நான்கு நாள் பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் சையிட் றாத் அல்ஹுசேன் இங்கு ஐ.நா. தீர்மானம் தொடர்பாக அக்கறை கொண்டுள்ள முக்கிய மூன்று தரப்புக்களும் ஆசுவாசமாக அமர்ந்து ஆலோசிக்கும்படியான சில யோசனைகளை இராஜதந்திர முறையில் வெளியிட்டு விட்டுச் சென்றுள்ளார்.

முதல் தரப்பான இலங்கை அரசுத் தலைவர்களுக்கு அவர் கூறியுள்ள கருத்தில், போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நீதி விசாரணைகள் அல்லது வெளிநாட்டு நீதிபதிகள் அதில் இணைக்கப்படுவது குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் பரிந்துரைகளைச் செய்திருந்தாலும் அதுபற்றி முடிவெடுப்பதற்கான இறைமை இலங்கைக்கே உரியதாகும் என்று தெரிவித்துப் போயுள்ளார்.

அண்மைக் காலத்தில் ஜனாதிபதி சிறிசேன போர்க்குற்ற விசாரணைகளில் வெளியாரை ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் என்று கூறிவரும் நிலைப்பாட்டுக்கு, ஆணையாளரின் கருத்து இசைவாக இருப்பதைப் பார்க்கின்றோம்.

ஆனால் இலங்கைத் தரப்புத் தெரிவிப்பதுபோன்று, உள்ளக விசாரணை என்பதையும் அவர் வேறுவிதமாக சாடியிருக்கிறார். இலங்கை நீதித்துறை உச்ச அரசியல் மயத்துக்கு ஆட்பட்டுள்ளது. சமத்துவமில்லை, நம்பகத்தன்மையற்றதாகவுள்ளது. பொலிஸார் அடிக்கடி வன்முறைகளில் இறங்குகிறார்கள். அத்தகைய ஒரு நிலைமையில் நீதியான அல்லது நம்பகமானதொரு விசாரணையை எவ்வாறு முன் நகர்த்துவீர்கள் என்பதை அவர் கேட்காமல் கேட்டிருப்பது தெரிகின்றது.

என்றாலும் வெளிநாட்டு விசாரணை ஒன்றுக்குச் சம்மதம் அளித்து நாட்டையும் இராணுவத்தையும் மைத்திரிபால-விக்கிரமசிங்க அரசு காட்டிக் கொடுத்துவிட்டது என்ற வகையில் ராஜபக்ச அணியினர் கிளப்பிவரும் புரளியை ஆணையாளரின் கருத்து தணித்துள்ளது அல்லது பிசுபிசுக்கச் செய்துள்ளது என்று கருத இடமுண்டு.

எங்கள் தரப்பிலிருந்து நாங்கள் எதையும் பார்க்கலாம். ஆனால் தீர்மானிப்பது உங்களின் இறைமைக்குரிய உரிமை. சர்வதேச விசாரணைக்கு நாங்கள் வற்புறுத்தவில்லை. அந்த நடைமுறை இலங்கையினுடையதாகவே இருக்கும் என்றார் அவர்.

ஆணையாளரின் இவ்வித கருத்துக்கள் இலங்கை அரசு விரும்புவதுபோல் உள்ளக பொறிமுறையாகத்தான் இருக்கப் போகிறது என்றால் அதிலும் அவர் ஆணி அடித்தே பேசியுள்ளார் என்பதும் தெளிவாகின்றது. சர்வதேசஉள்வாங்கல் தொடர்பில் இலங்கை அரசு தீர்மானிக்கலாம் என்று ஆணையாளர் கூறிவிட்டதால் அரசுத் தரப்பினர் ஆறுதல் கொள்ள வாய்ப்பில்லை. ஏனென்றால் -

இந்த விடயத்தை சர்வதேச நீதித்துறையின் மூலம் உறுதி செய்யலாம் என்று நாங்கள் கருதியிருந்தோம். ஆனால் இப்போது வேறு கருத்துக்களும் இருப்பது தெரியவருகிறது. கண்டிப்பாகப் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்களும் அறியப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார், ஆணையாளர். மேலும்' 'இறுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதற்காக கலந்தாலோசனைகள் அவசியப்படுகின்றன- என்றார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக முக்கிய தரப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே. அதனால் ஆணையாளரின் கருத்துப்படி அரசு விசாரணைப் பொறிமுறை குறித்து அவர்களுடனேயே கருத்துப் பரிமாறல்களைச் செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

விசாரணைப் பொறிமுறையில் ஜெனிவா தீர்மானத்தின்படியே நடைபெற வேண்டும் என்பதை த.தே. கூட்டமைப்புத் தலைவர்கள் ஆரம்பம் முதலே வற்புறுத்தி வந்துள்ளார்கள்.

இப்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் விசாரணைப் பொறிமுறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை இலங்கை அரசே தீர்மானிக்க வேண்டும். அது அவர்களின் இறைமை என்ற நிலைப்பாட்டை எடுத்திருப்பதானது தமிழ்த் தரப்பினரை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தியிருக்கிறது. எதுவானாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் நியாயமும் கிடைப்பது அவசியம். அது நம்பகமான, நேர்மையான, பாரபட்சமற்ற முறையில் இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் சம்மதத்தோடுதான் பொறிமுறை அமையுமென்றால் தமிழ்த் தரப்பினர் மிகக் கவனமாகச் செயற்பட வேண்டிய காலகட்டம், இது என்பதை மறக்கலாகாது.



# நம்பிக்கை இழந்தநிலையில் காணாமற் போனவர்களின் விவகாரம்

சேரலாதன்

இலங்கையில் காணாமற் போனவர்களின் உறவுகளுக்கு அச்சத்தையும், தீராத கவலையையும் ஏற்படுத்திவிடக் கூடியதான செய்திகள் வெளிவந்துள்ளன.

காணாமற் போனவர்களின் பிரச்சினை தமிழர்களைப் பொறுத்தவரையில் தீர்வைக் காணமுடியாததொரு கட்டத்தை எட்டிநிற்கின்றது. இவர்கள் பல ஆண்டுகளாக காணாமற்போன தமது உறவுகளின் நினைப்போடு அவர்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர். என்றோ ஒருநாள் இவர்கள் கிடைத்து விடுவார்கள் என்ற நம்பிக்கையைச் சுமந்த வண்ணம் இவர்கள் தமது கால்கள் தேய அலைந்து திரிந்தபோதிலும், இதுவரை பயன் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், நம்பிக்கையை இழந்து விடுகின்ற செய்திகள்தான் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

குடும்ப உறுப்பினர் ஒருவரின் பிரிவுத்துயரம் மிகக் கொடியது. அதிலும் அவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதை அறியாத நிலையில் இருப்பது மிகமிகக் கொடுமையானது. இந்தக் கொடுமையைத்தான் காணாமற்போன தமிழர்களின் உறவுகள் ஆண்டுக்கணக்காக அனுபவித்து வருகின்றனர். ஏதோ ஒரு நம்பிக்கையில் அவர்கள் தமது உறவுகளைத் தேடி அலைந்து கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

### காணாமற் போனவர்களைக் கண்டறியும் ஆணைக்குழு

இதேவேளை-காணாமற் போனவர்களைக்கண்டறியும் ஆணைக்குழு ஒன்றும் அரசினால் அமைக்கப்பட்டு அதன் விசாரணைகள் நீண்ட காலமாக இடம்பெற்றன. தமது உறவுகளைத் தேடித் திரிகின்ற ஏராளமானவர்கள் அந்த ஆணைக்குழுவின் முன்பாகத் தோன்றி தமது சாட்சியங்களையும் மன ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார்கள். பலர் படையினரிடம் தமது உறவுகளை ஒப்படைத்ததற்கான சான்றுகளையும் வெளிப்படுத்தியிருந்தனர். மகிந்த ஆட்சியில் இருந்தபோது காணாமற் போனவர்கள் தொடர்பாக எந்த வித அக்கறையும் கொள்ளவில்லை. காணாமற்போனவர்களின் உறவுகள் போராட்டங்களில் ஈடுபட்டபோது அதற்கும் வேறு அர்த்தம் கற்பிக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட சிலர் வேறு காரணங்களைக் கூறிக் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதும் உண்டு. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் இந்த அவலநிலைதான் ஏற்பட்டது. தமிழர்கள் என்பதால் இத்தகைய அவலங்களை எதிர்கொள்ள நேரிட்டது.

### பிரதமர் ரணில்

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்காக இங்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, காணாமற்போனவர்களை இறந்தவர்களாகவே கருத வேண்டுமெனக் கூறிப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தினார். இவரின் இந்தக் கூற்று காணாமற்போனவர்களின் உறவுகளுக்கு எத்தகைய மனத்தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒரு நாட்டின் பிரதமர் வெளியிட்ட இத்தகைய அறிவிப்புத் தொடர்பாக சாதாரணமாக எடைபோட்டு விடவும் முடியாது.

இதேவேளை-முன்னாள் பாதுகாப்புச் செயலரான கோத்தபாய ராஜபக்ச எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதைப் போன்று காணாமற்போனவர்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருக்கிறார். காணாமற்போனவர்கள் அனைவரும் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள். இவர்களில் அனேகர் போர் இடம்பெற்றபோது கொல்லப்பட்டு விட்டனர். மீதிப்பேர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர். கோத்தபாய மிகவும் இலகுவாக இதைக் கூறி முடித்துள்ளார். அவரது கூற்றிலுள்ள உண்மைத்தன்மையை ஆராய்ந்து பார்ப்பதற்குக்கூட காணாமற் போனவர்களின் உறவுகள் தயாராக இருப்பார்களென ஒரு போதுமே கூறிவிடமுடியாது. ஏனென்றால் கடந்தகால அனுபவங்கள் அவ்வாறு அமைந்து விட்டன. ஆனால், போரின் பின்னர் காணாமற்போனவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? என்பதுதான் பெரிய கேள்வியாக உருவெடுத்துள்ளது. அதிலும் படையினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டவர்களும், உறவினர்களால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களும் கொல்லப்படுவதற்கு எவர் காரணமாக இருந் தார்கள்? என்பதை முதலில் ஆராய்ந்து உண்மைகளைக் கண்டறிய வேண்டும்.

### பிடிகொடாமல் நடந்துகொண்ட ஐ.நா.ஆணையாளர்

அண்மையில் இங்கு வருகை தந்த ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல்ஹுசேன் முக்கியமான விடயங்களில் பிடிகொடாமல் நடந்து கொண்டார். அரசியல் கைதிகள் விவகாரம், காணாமற் போனவர்களின் பிரச்சினை, போர்க்குற்ற விசா ரணை ஆகியவற்றில் அவர் உறுதியான வாக்குறுதியையும் வழங்கவில்லை. இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்பவர்களின் மீள் குடியமர்வு தொடர்பாகவும் அவர் அரசுக்கு அழுத்தம் எதையும் கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொஹான் எதிரிசிங்க

*("அரசமைப்பு உருவாக்கமும் செயல் முறை சவால்களும்" என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி)*

# அனைவரதும் ஆதரவு இருந்தாலே புதிய அரசமைப்பு உதயம்

அரசமைப்பு உருவாக்கச் செயன்முறையில் பொதுமக்களின் தாக்கமான பங்கேற்புக்கு ஏற்பாடு செய்யக்கூடிய விதத்திலான ஒரு செயன்முறையை அரசு முன்வைத்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்பு உருவாக்கச் செயன்முறையின்போது தமது விசேட பொறுப்பை உணர்ந்து கொள்ளும் விதத்தில் செயற்படுவதையும், அதே நேரத்தில் தற்போதைய அரசமைப்பை திருத்துதல் மற்றும் ரத்து செய்தல் என்பன தொடர்பான ஒழுங்கு முறைகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நாடாளுமன்றம் ஒரு அரசமைப்புச் சபையாக (அதற்கென உருவாக்கப்பட்ட ஒரு சபையாக அல்ல) அமர்வுகளை நடத்தி, ஒரு புதிய அரசமைப்பின் சாராம்சத்தில் முழுமையாக கவனம் செலுத்த வேண்டுமென உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் உச்சமட்ட பரிசீலனை, பங் கேற்பு என்பவற்றுக்கு வசதி செய்து கொடுக்கும் விதத்தில் இந்தக் கலந்தாராய்வுகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். அதனையடுத்து, அரசமைப்புச் சபை அரசமைப்பின் வரைவை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும். நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் அதனை நிறைவேற்றும். இது இவ்வாறு இடம்பெற்றால், அதனையடுத்து அரசமைப்பின் வரைவுக்கு மக்களின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கென ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

மேலே, குறிப்பிடப்பட்ட செயன்முறைக்கு ஒரு சில எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கும் விடயம் கவலைக்குரியதாகும். ஒரு மாற்றுவழியை முன்வைக்காது, அவர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் 1978ஆம் ஆண்டின் அரசமைப்பு உருவாக்கப்பட்டது தொடக்கம் அதனை எதிர்த்து வந்தவர்கள் ஆவார்கள். மேலும், அவர்கள் அரசமைப்பு ரத்து செய்யப்பட்டு, அதற்கு பதிலாக ஒரு புதிய அரசமைப்பு தேவை என்ற விடயத்தை முன்னர் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அரசு உத்தேசித்திருக்கும் அரசமைப்பு உருவாக்க செயன்முறை குறித்து சந்தேகங்கள் இருந்து வந்தால் மேலே எடுத்து விளக்கப்பட்ட அரசமைப்பு உருவாக்க முதன்மை கோட் பாடுகளுடன் பொருந்திச் செல்லக்கூடிய மிகச் சிறந்த மாற்று வழிகளை முன்கொண்டு வருவது அவர்களது பொறுப்பாக இருந்து வருகின்றது.

அடிப்படையான அரசமைப்பு விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு இந்திய உச்ச நீதிமன்றத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் அடிப்படை பண்புக்கூறுகள் கோட்பாடு இலங்கைக்கும் பொருந்தக்கூடியது என்ற வாதம் நகைப்புக்குரியதாகும். இந்திய அரசியலமைப்பு அனைத்து தரப்பையும் உள்ளடக்கும் ஒரு அரசியல் ஜனநாயகத்தை உருவாக்கும் செயன்முறையாக அரசமைப்பின் சபையொன்றின் மூலம் இந்திய சுதந்திரத்தையடுத்து உருவாக்கப்பட்டது. இந்திய அரசஅமைப்பானது, அந்தச் சந்தர்ப்பத்தில் ஆட்சியிலிருந்த கட்சிக்கு சேவகம் செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட பக்கச் சார்பான ஓர் ஆவணம் அல்ல. அது கட்சி அரசியலுக்கு அப்பால் நிற்கும் ஓர் உயர் நிலை ஆவணமாக இருந்து வருவதுடன், பெருமளவுக்கு கருத்தொற்றுமையுடன் உருவாக்கப்பட்ட ஒரு ஆவணமாகவும் உள்ளது. அத்தகைய ஒரு பின்புலத்திலேயே அரசியல்வாதிகளிடமிருந்து மக்களையும், அவர் களது அரசமைப்பையும் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்துக்கென அடிப்படை கட்டமைப்பு கோட்பாடு என்ற அமைப்பை இந்திய உச்சநீதிமன்றம் உருவாக்கியது. இந்த அடிப்படை கட்டமைப்பு–கோட்பாட்டை பக்கச்சார்பான அடிப்படைகளில் குறைபாடுகளுடன் கூடிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசிய கட்சியின் நலன்களை பிரதிபலிக்கும் ஒரு அரசியலமைப்புடன் பொருத்திப் பார்ப்பது எந்த வகையிலும் பொருத்தமான ஒரு செயலாக இருந்து வர முடியாது. மேலும், இலங்கையில் அக் கருத்தை ஆதரிப்பவர்கள், இந்தக் கோட்பாட்டின் அடிப்படை நியாயத்தை சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பதனையும் அது காட்டுகின்றது.

**முடிவுரை**

அரசமைப்புவாதத்தின் முதன்மை கோட்பாடுகளுடன் பொருந்திச் செல்வது

> "அடிப்படையான அரசமைப்பு விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு இந்திய உச்ச நீதிமன்றத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் அடிப்படை பண்புக் கூறுகள் கோட்பாடுஆகியனஇலங்கைக்கும் பொருந்தக் கூடியது என்ற வாதம் நகைப்புக்குரியதாகும்."

டன், இத்தகைய பண்புக் கூறுகளையும் உள்ளடக்கக்கூடிய ஒரு அரசமைப்பு ஜனாதிபதியும் அவரது கட்சியும், பிரதமரும் அவரது கட்சியும், எதிர்க்கட்சித் தலைவரும் அவரது கட்சியும் இணைந்து செயற்பட்டு, சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவையும், மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவையும் பெற்றுக்கொண்டால் மட்டுமே நிறைவேற்றிக்கொள்ள முடியும். இந்தக் கட்சிகள் மற்றும் சக்திகள் என்பன அடுத்து வரும் சில மாதங்களில் கருத்து வேறுபாடுகளையும், பகைமைகளையும் கொண்டிருக்கும் என்பது தவிர்க்க முடியாததாகும். எவ்வாறிருப்பினும், அரசமைப்பு உருவாக்க செயன்முறைக்கு தலைமைத்துவத்தை வழங்கும் மிக முக்கியமான பொறுப்பை ஏற்கும் விடயம் தொடர்பாக அக்கட்சிகளும், குழுக்களும் தமக்கிடையில் இருக்கும் வித்தியாசங்களை மறந்து, செயற்பட வேண்டிய தேவையுள்ளது. இது புதிய அரசமைப்பு நடைமுறைச் சௌகரியத்துக்கென மேற்கொள்ளப் பட்ட ஒரு அரசியல் செயற்பாடாக இருந்து வராதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், கடந்த காலத்தின் படிப்பினைகளிலிருந்து கற்றுக்கொள்வதற்கான ஒரு உண்மையான வாய்ப்பாக இருந்து வருவதையும் உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு பொது மக்களுக்கு அறிவூட்டுதல் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்படுதல் என்பவற்றுடன் கூடிய செயன்முறையுடன் இணைந்து இது முன்னெடுக்கப்படுதல் வேண்டும். மேலும், அரசமைப்பு உருவாக்கம், ஜனநாயகம் என்ப வற்றை பலப்படுத்துவதற்கும், பல்வேறு அரசியல், இனத்துவம் மற்றும் சமயக் குழுக்களுக்கிடையில் பரந்துபட்ட ஒரு கருத்தொற்றுமையை கொண்டிருக்கக் கூடிய சமூக குழுக்களை உருவாக்குவதற்கும் இது அவசியமாக உள்ளது. 2016ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் அரசமைப்பு மாற்ற செயன்முறை 1995, 2000 அரசமைப்புச்செயன்முறை எதிர்கொண்ட அதே தலைவிதியை எதிர்கொள்ளக்கூடாது. அந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக்கட்சி பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டதுடன், இந்தச் செயன்முறைக்கு தாக்கமான விதத்தில் ஊறு விளைவித்தது.

எமது அரசியல்வாதிகள் அரசியலமைப்புடன் பகிடி விடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். உண்மையிலேயே பக்கச் சார்ப்பற்ற, கருத்தொற்றுமையுடன் கூடிய உச்சமட்ட சட்டமாக இருந்து வரக் கூடிய ஒரு புதிய அரசமைப்பு இலங்கைக்குத் தேவையாக உள்ளது.

## பயன்படுத்தப்படாத நிலையில் புதிய கட்டடங்கள்

போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் குடா நாட்டின் வர்த்தக நடவடிக்கைகள் சூடுபிடிக்கத் தொடங்கின. குறிப்பாக புதிய புதிய கட்டடங்கள் அமைப்பதில் இங்குள்ளவர்கள் ஆர்வம் காட்டினார்கள். நிதி நிறுவனங்கள் தேவையான நிதியை வழங்கியதால் வேலைகள் முழுவீச்சில் இடம்பெற்றன. வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு வசதியான கட்டடங்கள் அமைக்கப்படுவது இன்றியமையாத ஒன்றாகும்.

ஆனால், பெரும் நிதியைச் செலவழித்துக் கட்டப்பட்ட ஏராளமான கட்டடங்கள் பயன்படுத்துவார் எவருமின்றிக் காணப்படுவதுதான் வேதனையாக உள்ளது. இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. தற்போதைய நிலையில் குடாநாட்டின் வர்த்தகம் இதற்கு இறங்குமுகமாக இருப்பதாக வர்த்தகர்கள் காணப்படுகின்றனர். தென்பகுதியில் இருந்து சகல விதமான பொருள்களையும் அங்குள்ளவர்கள் எடுத்து வந்து வீதியோரங்களிலும், முக்கியமான இடங்களிலும் பரப்பிவைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதால் மக்கள் தமக்குத் தேவையானவற்றை அங்கேயே கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் இங்குள்ள கடைகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இங்குள்ள வர்த்தகர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர். சில வர்த்தகர்கள் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் தலைமறைவாகியுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. வர்த்தக நடவடிக்கைகள் சிறப்பாக இடம் பெறும் போதுதான் கட்டடங்களுக்குத் தேவையும் இருக்கும்.

தற்போதுள்ள நிலையில் புதிது புதிதாய் பெரிய, பெரிய கட்டடங்கள் அமைப்பதை விடுத்து அமைக்கப்பட்ட கட்டடங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகச் சிந்திப்பதே புத்தி சாலித்தனமானது.

ம.பரமேஸ்வரன், தாவடி

## இந்த வீதிகளும் கவனிக்கப்படுமா?

அண்மையில் பிரதேச செயலகங்கள் ரீதியாக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் இடம்பெற்றதாக பத்திரிகைகள் வாயிலாக அறிந்தேன். அதிலும் நானொரு உதயன் வாசகன் என்ற வகையில் சில விடயங்களைச் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சொல்லலாம் என எண்ணுகின்றேன்.

குடாநாட்டிலுள்ள மோசமாகப் பாதிக்கப்பட்ட வீதிகள் சில புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக அரச அதிபரால் கூறப்பட்ட செய்தியைப் படித்ததும் எனது மெய் சிலிர்த்தது. ஆனந்தப் பரவசத்தில் திளைத்தேன். இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

எமது வலிகாமம் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் ஏராளமான வீதிகள் புனரமைக்கப்படாமல் இன்னமும் மோசமான நிலையிலேயே காணப்படுகின்றன. இதனால் இந்த வீதிகளில் பயணிக்கின்ற மக்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாகக் கல்லுண்டாய் வீதி, புத்தூர் வீதி, தொட்டிலடிச் சந்தியில் இருந்து மாதகல் செல்லும் வீதி, தொட்டிலடிச் சந்தியில் இருந்து சேந்தாங்குளம் செல்லும் வீதி, தொட்டிலடிச் சந்தியில் இருந்து சங்கானை செல்லும் வீதி, சீரணிச் சந்தியில் இருந்து மூளாய்ப் பாலம் வரையான வீதி, மானிப்பாய் வீதியின் ஒருபகுதி மற்றும் சில வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. இந்த வீதிகளில் சைக்கிள் உட்பட வேறு வாகனங்களில் செல்பவர்கள் படாதபாடு படுகின்றனர்.

இந்த வீதிகளில் அரசியல்வாதிகள், அரச உயர் அதிகாரிகள் எனப்பலரும் சொகுசு வாகனங்களில் பயணிக்கின்றனர். ஆனால், அவர்கள் வீதிகளின் அவலநிலை தொடர்பாகக் கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. சிலவேளை சொகுசு வாகனங்களில் செல்வதால் வீதிகளின் அவலநிலை இவர்களுக்குத் தெரியவில்லைப் போலும்.

ஆனால், மக்களின் அவலநிலையை உணர்ந்து இந்த வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் அதிகாரிகள்தான் மனம் வைக்க வேண்டும்.



வலிகாமத்தின் மைந்தன்

## மனதை நெருடும் நடவடிக்கை

பாடசாலைகளில் விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு விழா என்பன ஆண்டுக்கொருமுறை இடம்பெறுவது சாதாரண நடைமுறை ஆகும். அவற்றுக்கு அரும்பாடுபட்டு உழைப்பதெல்லாம் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஒருசில பெற்றோர்களே. இப்போது இலவச சீருடை, இலவசபுத்தகம், இலவச உணவு என்பவற்றைப் பெற்றுக்கொண்டு மாணவர்கள் சுதந்திரமாகக் கற்கின்றனர். ஆனால், மாணவர்களை அவர்களுடைய பெற்றோர் பாடசாலைகளுக்கு அனுப்பும்போது பெரியதொரு தொகையை அவர்களுக்காக இழக்கவேண்டி ஏற்படுகிறது. இது செயற்கையாக செய்யப்பட்டதொன்று, இயல்பாக உள்ளதொன்று அல்ல, பெரியதொரு விழாவை நடத்திமுடித்து விட்டால் அதன் பின்னணியில் நின்று மகிழ்ச்சியடையும் மாணவர்கள் (தமது பெற்றோரின் அனுமதியுடன்) சில தினங்களை விடுமுறையாகவே எடுத்துக்கொள்கின்றனர். அதன்போது சில பெற்றோர்கள் படும்பாடு பெரியதொரு திண்டாட்டமாக இருக்கின்றது. இந்தப் பிரச்சினையைத் [illegible] எல்லாப் பாடசாலைகளும் ஒன்ற சேர்ந்து சிந்தித்துத் தீர்வு காண வேண்டும் என்னும் பெருநோக்கில் இந்த மடலை வரைகிறேன்.

சி.ஜெயகணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸின் வெப்பமான நகரமான ரிவியராவில் வருடந்தோறும் பெப்ரவரி மாதம் வண்ணமயமான எலுமிச்சை விழா



# சிரியாவில் போரை
# உலக நாடுகள்


முனிச்,பெப்.15
சிரியாவில் நீடித்துவரும் உள்நாட்டுப் போரை நிறுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க உலக நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன.
சிரியாவில் கடந்த 5 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் வெடித்து வருகிறது. சிரியா அரசுக்கும், கலவரக்காரர்களுக்கும் இடையே கடுமையான சண்டை நடைபெற்று வருகிறது.
இந்தப் போரில், இரண்டரை லட்சத்துக்கும் மேலான அப்பாவி மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். சிரியாவில் நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுக்கும் விதமாக அமெரிக்கா நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது.
இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் அண்மையில் பேச்சு நடைபெற்றது. அதில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஜேர்மனியின் முனிச் நகரில் வல்லரசு நாடுகள் உட்பட 17 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.
அதில் அமெரிக்காவின் ஜான் கெர்ரி, ரஷ்யாவின் செர்ஜி லவ்ரோவ் உட்பட பலர் பங்கேற்றனர்.
அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் கெரி கூறுகையில், சிரிய மக்களுக்குத் தேவையான உதவிகளை உடனடியாக அளிக்கவும், உள்நாட்டுப் போரை நிறுத்தவும், ஆலோசனையில் கலந்து கொண்ட ரஷ்யா உட்பட எல்லா நாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளன. இது உடனடியாக நடைமுறைக்கு வருகிறது' என்றார்.
இந்த ஆலோசனைக்கும், ஐ.எஸ்., அல்-கொய்தா தீவிரவாத இயக்கங்கள் உட்பட சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் பிற தீவிரவாத இயக்கங்களுக்கும் ஆலோசனை முடிவுகள் பொருந்தாது எனக் கூறப்பட்டுள்ளது. (ஐ)



# தைவான் நிலநடுக்கம் 113 உடல்கள் மீட்பு

தைபே,பெப்.15
தைவானின் தைனான் நகரை மையமாகக்கொண்டு கடந்த 6 ஆம் திகதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.4 புள்ளிகளாகப் பதிவான இந்த நிலநடுக்கத்தால் பல கட்டடங்கள் இடிந்து விழுந்த நிலையில், தைனான் நகரில் உள்ள வெய்குவான் என்ற 17 மாடிக் கட்டடம் முற்றிலும் தரைமட்டமானது. இந்தக் கட்டடத்தில் தங்கியிருந்த சுமார் 327 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். எனினும் கட்டட இடிபாடுகளில் சிக்கி ஏராளமானோர் உயிரிழந்தனர். அவர்களில் 113 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இன்னும் 4 பேரைக் காணவில்லை எனக் கூறப்படுகிறது. எனவே அவர்களின் உடல்களும் அங்கு சிக்கியிருக்கலாம் என கூறப்படுகிறது. (ஐ)


காதலர் தினத்தை முன்னிட்டு கொாங்ஹொங் நகரில் ஒளி ரும் வெள்ளை ரோஜாப் பூந்தோட்டத்தை உருவாக்கி காதல் ஜோடிகளுக்கு சமர்ப்பித்துள்ளனர். 25 ஆயிரம் ஒளிரும் வெள்ளை ரோஜாப் பூந்தோட்டத்தை இங்கு வடிவமைத்துள்ளனர். இந்த ஒளிரும் சிறப்புப் பூந்தோட்டத்தைப் பார்வையிடவும் அதன் அருகே புகைப்படம் எடுக்கவும் உலகெங்கிலும் இருந்து காதலர்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். (ஐ)



# காதலர் தி
# வேண்ட

இஸ்லாமாபாத்,பெப்.15
பாகிஸ்தான் நாட்டு மக்கள் க
தைக் கொண்டாட வேண்
அந்த நாட்டின் ஜனாதிப
ஹுசைன் வலியுறுத்தியுள்ள
காதலர் தினம் கொண்டாடுவ
யர் மரபு இல்லை என்றும்,
திய கலாசாரம் என்றும் ஹ
பிட்டுள்ளார்.
இஸ்லாமாபாத்தில் நடை
வொன்றில் கலந்து கொண்
னூன் ஹுசைன், காதலர் தி
நமது கலாசாரத்தில் இ
புறக்கணிக்கப்பட வேண்டி
இந்த மேற்கத்திய கலாசா
நாடுகளில் ஒன்றன் பின் ஒ
தற்போது பரவலாக காதல
யுள்ளது என்றும் தெரிவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




...ிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த வருடத்துக்கான விழா நேற்று முன்தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. (ஐ)

# ...ரை நிறுத்த
# ...ர் ஒப்புதல்



# சிகா நோயின் தாக்கம் பக்கவாதத்தை ஏற்படுத்தும்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

பெர்லின்,பெப்.15



சிகா வைரஸ் பரவியுள்ள நாடுகளில் முதன்முறையாக பிரேஸில், கொலம்பியா, வெனிசுலா போன்ற நாடுகளில் மட்டும் நிரந்தர பக்கவாத நோய்க்கு காரணமான நோய்த்தொற்றும் பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

டெங்கு மற்றும் சிக்கன் குனியாவுக்கு காரணமான நுளம்புகளின் வாயிலாகக் கடந்த ஆண்டு பிரேஸில் நாட்டில் தோன்றிய சிகா நோயானது 26 அமெரிக்க நாடுகளிலும், ஐரோப்பிய கண்டத்தில் உள்ள சில நாடுகளிலும் படுவேகமாகப் பரவி வருகின்றது.

தாயின் கருவில் வளரும் குழந்தைகளின் மூளை வளர்ச்சியை இந்த நோய் பாதிப்படையச் செய்கிறது. இதனால், சிகா பாதிப்புடன் பிறக்கும் குழந்தைகள் சிறிய தலைகளுடன் காணப்படுகின்றன.

இந்த நோயானது, சிக்குன் குனியா, டெங்கு உள்ளிட்ட நோய்களைப் பரப்பும் 'ஏடிஸ்' நுளம்புகளால் பரவுவதாக முதலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், பாலியல் உறவு மூலமாகவும் சிகா பரவுவதாக அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நோயைக் குணப்படுத்தும் மருந்துகளோ, தடுப்பு மருந்துகளோ இதுவரை கண்டுபிடிக் கப்படாத நிலையில் ஏற்கனவே பிரேஸில் நாட்டில் ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் சிகா நோய் பாதிப்புடன் பிறந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கர்ப்பம் தரித்த பெண்களை சிகா வைரஸ் தாக்கினால், பிறக்கக்கூடிய குழந்தைகள் பிறவிக்குறைபாடுகளைக் கொண்டிருக்கும். குறிப்பாக தலை சிறியதாக இருக்கும், மூளைப் பகுதியில் பாதிப்பு இருக்கும். பிரேஸில் நாட்டில் மட்டும் 4 ஆயிரத்து 74 குழந்தைகள் சிறிய தலைகளுடன் பிறந்துள்ளதால், அங்கு பெண்கள் கர்ப்பம் அடைய வேண்டாம் என இப்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தெற்கு அமெரிக்காவின் கொலம்பியா பகுதியில் மட்டும் 25 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் சிகா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் 3 ஆயிரத்து 177 பேர் கர்ப்பிணிப் பெண்கள் என்பதால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ளது. இங்கு மட்டும் மேலும் 6 லட்சம் பேர் சிகா பாதிப்புக்கு உள்ளாகக்கூடும் என அஞ்சப்படுகிறது.

ஆசியா கண்டத்துக்கும் வேகமாகப் பரவத் தொடங்கியுள்ள சிகா வைரஸ் தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது. சிகா வைரஸ் கிருமிகள் மிக வீரியத்துடன் பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவரான மார்கரெட் சான் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க நாடுகளைக் கடந்து ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளிலும் சிகா நோய் வேகமாகப் பரவி வருகின்றது. தெற்கு அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலாவில் சிகா வைரஸ் தொற்றுக்கு மூன்று பேர் உயிரிழந்ததாக அதிகாரபூர்வ தகவல் வெளியானது.

இதற்கிடையில், சிகா வைரஸ் பரவியுள்ள 34 நாடுகளில் முதன்முறையாக பிரேஸில், கொலம்பியா, வெனிசுலா போன்ற நாடுகளில் மட்டும் நிரந்தர பக்கவாத நோய்க்கு காரணமான நோய்த் தொற்றும் பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## ...ர் தினம்
## ...டாம்

...ப்.15
... மக்கள் காதலர் தினத்
... வேண்டாம் என்று
...ஜனாதிபதி மம்னூன்
...த்தியுள்ளார்.
...ண்டாடுவது இஸ்லாமி
...ன்றும், அது மேற்கத்
...றும் ஹசைன் குறிப்
...ல் நடைபெற்ற நிகழ்
...ு கொண்டு பேசிய மம்
...காதலர் தினம் என்பது
...தில் இல்லை, இது
... வேண்டியது.
... கலாசாரம், அண்டை
... பின் ஒன்றாகப் பரவி,
...க காதலர் தினம் பரவி
...தெரிவித்தார். (ஐ)

# காற்று மாசினால் வருடந்தோறும் இலட்சக்கணக்கானோர் உயிரிழப்பு

### இந்தியா, சீனாவில் அதிகம்

வொஷிங்டன்,பெப்.15

காற்று மாசுபாட்டினால் உலகம் முழுவதும் ஆண்டு தோறும் 55 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். அதில் அதிக உயிரிழப்புக்கள் வேகமாக வளர்ந்து வரும் சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் தான் நிகழ்கின்றன.

அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்று மாசுபாட்டினால் ஏற்படும் சிக்கல்களால், கடந்த சில வருடங்களாக, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருவதாக அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனில் உள்ள அறிவியல் மையம் எச்சரித்துள்ளது.

அதேபோன்று, உலக அளவில் இரத்தக் கொதிப்பு மற்றும் புகைப்பிடித்தல் ஆகியவற்றுக்கு அடுத்த [illegible] காரணியாக காற்று மாசுபாடு உள்ளது [illegible] அமைப்புக் கூறியுள்ளது. (ஐ)

# துருக்கிக்கு போர் விமானங்கள் அனுப்புகிறது சவூதி அரேபியா

### ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்த

இஸ்தான்புல்,பெப்.15

சிரியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்காக நேட்டோவின் உறுப்பு நாடான துருக்கிக்கு சவூதி அரேபியா போர் விமானங்களை அனுப்ப முடிவு செய்துள்ளது. இந்தத் தகவலை துருக்கியின் வெளியுற[illegible] மெவ்லத் காவுசோக்ளு [illegible].

கடந்த சில வாரங்களாக சவூதி அரேபியா, சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான வா[illegible] வெளித் தாக்குதல்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்கு அமெரிக்காவும் பாராட்டுத் தெரிவித்துள்ளது. எனினும், சிரியாவுக்குள் அமெரிக்கா தனது இராணுவத்தின் தரைப்படையைக் களமிறக்க மறுப்புத் தெரிவித்துள்ளது. ஆனால், சவூதி அரேபியா இராணுவத் தரைப்படை[illegible] துருக்கியுடன் இணைந்து களமிறக்க விருப்பம் தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

# கயவர் தம்மோடு என்ன கூட்டு இனி?

தற்கால சமூகம் கடவுளை நம்புகிறதோ இல்லையோ ஆனால் நம்பித்தான் ஆகவேண்டும் காரணம், இயற்கையின் படைப்புக்களை மனிதனால் வெல்ல முடியவில்லை. காற்றைக் கண்ணால் காணமுடியவில்லை. அவ்வாறு காணமுடியாத காற்றைப் படைத்தவனும் காண முடியாதவனாக இருப்பது தான் என்றும் உண்மை. அந்தக் காற்றின் செல்வாக்கை எவராலும் தடுக்க முடியவில்லை. புயலின் சக்தியை விஞ்ஞானத்தால் நிறுத்த முடியவில்லை. மெஞ்ஞானத்தை விஞ்ஞானம் ஒருபோதும் வெல்ல முடிவதில்லை. ஆனாலும், இயற்கையின் விந்தையை மாற்றி, அற்புதம் செய்தவரே அம்பாள் உபாசகரான அபிராமிப்பட்டராவார். அருளொழுகும், அபிராமி அந்தாதி மூலம் அமாவாசையைப் பௌர்ணமி நிலவாக் கியவர். அபிராமியின் அருட்பிரவாகத்தை அகிலமெங்கும் பரவ பக்தியால் வழிகாட்டியவர்.

**பட்டர்**

அபிராமிப் பட்டர் 1720 ஆம் ஆண்டு அவதரித்தவர். சோழமண்டலத்தில் அமைந்த திருக்கடவூர் என்னும் கிளிகள் பேசும் திருவூரில் பிறந்தவர். வேதியர் குலம். அம்பாளின் இடையறாத பக்தன். இதனால் அம்பாளே, கண் தூங்குவதில்லை. இவருடைய பக்தி திருக்கடவூரையே ஒரு கணம் மாற்றியமைத்தது. பக்தியின் உச்சக்கட்டத்தால், பட்டரைப் பித்தன் என்றும், விசரன் என்றும் சித்த சுவாதீனன் என்றும் அழைக்கலாயினர். அரசன் தொடக்கம் ஆண்டி வரையும் பட்டரைப் புரிந்து கொள்ளவில்லை. கர்ச்சனைகள் அர்ச்சனையாவதுமுண்டு அர்ச்சனைகள் கர்ச்சனையாவதுமுண்டு. இதுபோன்ற இலங்கையிலும் நடைபெற்ற ஒரு சம்பவம். அண்மையில் ஓர் அம்பாள் உபாசகருக்கு வீட்டுக்குப் போகுமாறு கட்டாய ஓய்வுப் பத்திரம் கொடுக்கப்பட்டது. (பத்திரம் கொடுத்தவர்) தான் ஒரு ஜனாதிபதி என்ற நினைப்பு. அந்தத் தலைக்கனத்தால் அவரை வீட்டுக்குப் போகுமாறு ஒரு பணிப்பு விடுத்தார். இந்தப் பணிப்பை அம்பாள் ஏற்றுக்கொள்ளவில்லை. பிறகென்ன? வெளிச்சமூகம் சும்மா விடுமா? அம்பாள்தன்னுடன்அரவணைத்துக்கொண்டாள். மீண்டும் பணிக்கு அமர்த்தப்பட்டார். இதுபோன்றே பட்டருக்கும் ஏற்பட்டது. பட்டரையும் வெளியேற்றித் துரத்திவிட நினைத்தார்கள். அவரையே விழுந்து வணங்கினர்.

**சோதனை**

தஞ்சை சரபோஜி மகாராஜாவும் இவரது சக கூட்டாளிகளும் பட்டரை ஒரு கை பார்க்கலாம் என்று சொல்லி, பட்டர் வழிபட்ட அம்பாள் கோயிலுக்குச் சென்றனர். ராஜா பரிவாரங்களோடு வருவதையறிந்ததும் பட்டர் அம்பாளையே பற்றிய வண்ணம் தியானத்திலிருந்தார். சகல கலைகளிலும் வல்லவரான பட்டரை அரசன் சோதிக்க விரும்பினான். அரசனை அம்பாள் சோதிக்க விரும்பினாள். சோதிடம் தெரிந்த பட்டரை அரசனின் ஏவலாளிகள் தியானத்தைக் குழப்பி அரசனைப் பணியுமாறு வேண்டிட, பட்டரோ மறுக்க ராஜாவின் கோபத்துக்குள்ளானார். ஓ! பட்டரே! உமக்கு அவ்வளவு திமிரோ? நான் இந்த நாட்டு மன்னன் என்னை அவமரியாதை செய்தால் அதற்குசரியான தண் டனை உமக்குத் தரப்படும்-என்றான் அரசன்.

பட்டரோ கிறுங்கவில்லை!

நாளிலும், கோளிலும் வல்ல வரான நீர், இன்று என்ன நாள் என்ன திதி என்று சொல்லி விடும். உம்மைத் தீண்டாது விட்டு விடுகிறேன் என்றான் கோபத்துடன் பட்டர்

> அபிராமிப் பட்டர் 1720 ஆம் ஆண்டு அவதரித்தவர். சோழமண்டலத்தில் அமைந்த திருக் கடவூர் என்னும் கிளிகள் பேசும் திருவூரில் பிறந்தவர். வேதியர் குலம். அம் பாளின் இடையறாத பக்தன்.



சுடாரென்று அமாவாசையென்று கூறாமல், பௌர்ணமி என்று கூறிவிட்டார். அரசன் திடுக்குற்று, எப்படி இன்று பௌர்ணமி என்று கூறினார்? அமாவாசையாக இன்றைய நாள் இருக்கும் போது, எப்படி பௌர்ண மியாக முடியும்? என்றான். பட்டரும் இன்று பௌர் ணமியே என்றுதர்க்கம்செய்து, அந்தப்பேரொளியை நிரூபித்துக் காட்டுகிறேன் என்று சபதம் செய்தார். அரசனுக்குப் பௌர்ணமியென்று கூறி விட்டேன். தாயே-நீ-எனக்கு இன்றைய நாளை பௌர்ணமியாக மாற்றிக் காட்டு வாயாக! அப்படி நீ பௌர்ணமியாக மாற்றிக் காட்டாவிடின் அக்கினியில் வீழ்ந்து உயிர் துறப்பேன் என்று அபிராமியிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

---




## மீனம்

(உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் மீன பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன)

கம்பீரமான தோற்றமும் பிறரை வசீகரிக்கக்கூடிய அழகும்கொண்ட மீன ராசி நேயர்களே! இந்த 2016 ஆம் ஆண்டு சனி பகவான் பாக்கிய ஸ்தானமான 9 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதும் 08-01-2016 முதல் ராகு 6 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யவிருப்பதும் ஓர ளவுக்கு சாதகப்பலனை ஏற்படுத்தக்கூடிய அமைப்பாகும். உங்களுக்கிருந்துவந்த மறைமுக எதிர்ப்புகள் விலகி உங்கள் பலமும் வலிமையும் கூடும். 02-08-2016 வரை உங்கள் ராசியாதிபதி குரு ருணரோக ஸ்தானமான 6ஆம் வீட்டில் சஞ்சரித்தாலும் அதன் பின்னர் சமசப்தம ஸ்தானமான 7-ஆம் வீட்டுக்குச் செல்லவிருப்பது அற்புதமான அமைப்பாகும். இதனால் பொருளாதாரரீதியாக இருந்த முடக்கங்கள் விலகி தாராள தனவரவுகள் உண்டாகும். குடும்பத்தில் சுபகாரிய முயற்சிகள் நிறைவேறி மகிழ்ச்சியளிக்கும். சிலருக்கு சிறப்பான புத்திர பாக்கியம் உண்டாகும். வீடு, மனை, வண்டி வாகனங்கள் வாங்கக்கூடிய யோகம் அமையும். பொன், பொருள், ஆடை, ஆபரணம் சேரும். கொடுக்கல்- வாங்கலில் இருந்த பிரச்சினைகள் விலகி சரளமான நிலை இருக்கும். நெருங்கியவர்களிடையே இருந்த கருத்துவேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை உண்டாகும். வம்பு வழக்குகளில் சாதகமான பயன்கள் கிடைக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த லாபம் கிட்டும். உத்தியோகஸ்தர்களுக்கு சிறுசிறு நெருக்கடிகள் நிலவினாலும் வேலைப் பளு குறைவாகவே இருக்கும். சிலருக்கு வெளியூர், வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்புகளும் அமையும்.

**உடல் ஆரோக்கியம்**

இந்த ஆண்டின் தொடக்கத்தில் உங்களுக்கு தேவையற்ற அலைச்சல், பதற்றம், ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்பட்டாலும் ஓகஸ்ட் மாதம் முதல் உடல் ஆரோக்கியம் சிறப்பாக அமைந்து எதிலும் சுறுசுறுப்பாக ஈடுபடக்கூடிய ஆற்றலுண்டாகும். அவ்வப்போது சிறுசிறு பாதிப்புகள் தோன்றினாலும் சிறிது மருத்துவச் செலவுகளுக்குப்பின் உடனே குணமடையும். குடும்பத்தில் உள்ளவர்கள் ஓரளவுக்கு ஆரோக்கியமாக இருப்பார்கள்.

**குடும்பம், பொருளாதார நிலை**

நெருங்கியவர்களிடையே கருத்து வேறுபாடுகள், குடும்பத்தில் பிரச்சினை, பொருளாதாரத் தடைகள் என ஆண்டின் தொடக்கத்தில் அவதிப்பட்டாலும் ஓகஸ்ட் மாதம் முதல் நினைத்தது நிறைவேறும். தடைப்பட்ட சுபகாரியங்கள் அனைத்தும் சிறப்பாக கைகூடி மகிழ்ச்சியளிக்கும். தாராள தனவரவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபிட்சமும் தொடரும். சேமிப்பு பெருகும்.

**உத்தியோகம்**

மேலதிகாரிகளின் கெடுபிடிகள், வேலைப்பளு போன்றவைகளால் ஆண்டின் தொடக்கத்தில் பல சங்கடங்களை சந்தித்தாலும் ஓகஸ்ட் மாதம் முதல் நீங்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள், இடமாற்றங்கள், ஊதிய உயர்வுகள் யாவும் கிடைக்கும். வெளியூர், வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிய விரும்புபவர்களின் விருப்பம் நிறைவேறும். திறமைகளுக்கேற்ற பாராட்டுதலைப் பெறுவீர்கள்.

**தொழில், வியாபாரம்**

தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு நிறைய போட்டி பொறாமைகள், தொழில்ரீதியாக மேற்கொள்ளும் பயணங்களால் அலைச்சல், பதற்றம் போன்ற யாவும் உண்டாகும். என்றாலும் ஓகஸ்ட் மாதம் முதல் தொட்டதெல்லாம் பொன்னாகும். புதிய முயற்சிகள் யாவும் வெற்றியை உண்டாக்கும். புதிய நவீன கருவிகள் வாங்கிப்போட்டு தொழிலை விரிவுசெய்வீர்கள். புதிய கூட்டாளிகளின் சேர்க்கை தொழிலை அபிவிருத்தி செய்ய உதவும். வெளியூர், வெளிநாட்டு தொடர்புடையவற்றால் இலாபம் குவியும்.

**கொடுக்கல்- வாங்கல்**

உங்களுக்கு இருக்கக்கூடிய நெருக்கடிகள் படிப்படியாகக் குறையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகிட்டும். கொடுக்கல்- வாங்கலில் ஓகஸ்ட் மாதத்துக்கு பிறகு சரளமான நிலை ஏற்படும். உங்களுக்கு இருந்து வந்த வம்பு வழக்குகள் சுலபமாகும். பெரிய மனிதர் களின் தொடர்புகள் மகிழ்ச்சி யளிக்கும். கொடுத்த கடன் களை வசூலிப்பதில் பிரச்சினை இருக்காது.

**அரசியல்**

ஆண்டின் தொடக்கத்தில் சிறுசிறு விரயங்கள் அலைச்சல், பதற்றம் ஏற்பட்டாலும் ஓகஸ்ட் மாதம் முதல் எடுக்கும் முயற்சிகளில் வெற்றியையும் பொருளாதார உயர்வுகளையும் அடைவீர்கள். மக்களின் ஆதரவும் சிறப்பாக அமையும். கட்சிப் பணிக்காக பயணங்கள் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு அமையும். மாண்புமிகு பதவிகள் தேடிவரக்கூடிய யோகம் உண்டாகும்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தைக் கையிலெடுப்பது பாரதூரமான குற்றச்செயல்

நல்லூர் நாதன்

எம்மீது எவரும் தாக்குதல் நடத்தினாலோ, அல்லது எமது பொருளை யாரும் கொள்ளையடிக்க முயன்றாலோ அல்லது எமக்கு உரித்துள்ள வீட்டிலோ, கட்டடத்திலோ, காணியின் உள்ளேயோ எவரும் அத்துமீறி நுழைய முயன்றாலோ, அந்தச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு, எமது தற்பாதுகாப்புக்காக அல்லது கொள்ளை முயற்சியைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன், நாம் சட்டப்படி ஓரளவுக்குத் தாக்குதலை நடத்தி, அந்த முயற்சிகளைத் தடுத்துக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு உரிமையுடையவர்கள். மேற்படி சுயபாதுகாப்புரிமை எல்லையை மீறும்பொழுது, நாமே மேற்படி குற்றவாளியைத் தண்டிப்பதற்காக, "சட்டத்தை எமது கையில் எடுக்கிறோம்" என்று பொருள் கொள்ளப்படும். ஏனெனில் குற்றவாளிகளை விசாரணை செய்வதற்கும் நீதிமன்றகளில் பாரப்படுத்தி தண்டனை பெற்றுக்கொடுப்பதற்குமாக சட்டத்தின் காவலர்களாக பொலிஸார், தமது நிலையங்களை அமைத்து, கடமை புரிகின்றார்கள்.

அதேபோன்று, எமது அயலில் ஏதேனும் குற்றச் செயல்கள் இடம்பெற்றால், சந்தேகநபர்களை அழைத்து நாம் ஒரு விசாரணையை நடத்தி நாமே அவர்களுக்குத் தண்டனையை வழங்க முயற்சித்தால் அந்தச் செயலுக்கு 'கட்டப்பஞ்சாயத்து' எனப்பொருள் கொள்ளப்படும். எங்கேனும் குற்றச் சம்பவங்கள் இடம்பெற்று அது பற்றிப் பொலிஸாரிடம் முறையீடு செய்யப்பட்டிருந்தால் அவர்கள் விசாரணை செய்து சந்தேகநபர்களை நீதிமன்றங்களில் முன்னிலைப் படுத்துவார்கள். நீதிமன்றத்தில் சந்தேகநபரை குற்றவாளியா? இல்லையா? என ஆராய்ந்துதீர்ப்புவழங்கும். ஆகவே, சட்டத்தைக் கையில் எடுப்பதும் கட்டப்பஞ்சாயத்து நடத்துவதும் இலங்கையில் குற்றவியல் சட்டத்தின்கீழ் பாரதூரமான குற்றங்கள் ஆகும். இவை பற்றிய சட்டம் இருப்பது எனக்குத் தெரியாது என்று கூறித் தப்பிக்க முடியாது. காரணம் சட்டத்தின் தாய்மொழியான இலத்தின் மொழியிலேயே ஒரு நீதிமொழி (மக்ஸிம்) உள்ளது. என்னவெனில் "சட்டம் பற்றிய அறியாமை மன்னிக்கப்படவே முடியாது."

**சட்டத்தைக் கையில் எடுக்கும் சம்பவங்கள்**

அண்மைக்காலங்களில் வரும் செய்திகளைப் பார்க்கும்போது இலங்கையில் விசேடமாகக் குடாநாட்டில் சட்டத்தைக் கையில் எடுக்கும் சம்பவங்கள் பரவலாக இடம்பெறுகின்றன.

புங்குடுதீவு வித்தியா கொலை வழக்குத் தற்சமயம் நீதிமன்ற விசாரணையில் உள்ளது. அந்தச் சம்பவத்தை அடுத்து மக்கள் மத்தியில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவதில் இருந்து தப்பித்து விடுவார்களோ என்ற ஐயமும் கவலையும் ஏற்பட்டது. இதற்கு ஏற்றாற்போல சில சம்பவங்கள் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது. அதனால் கொதித்தெழுந்த மக்கள் யாழ்.நீதிமன்றச் சுற்றாடலில் கூடினார்கள். அவர்கள் கூடிய நோக்கம் குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுகின்றனரோ அல்லது சிலர் ஏதோ வழியில் நழுவி விடுகின்றார்களோ என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே தான்.

இந்த நிலைமையைப் பயன்படுத் திய சிலர் கூட்டத்துடன் கூட்டமாக நின்று நீதிமன்றக் கட்டத்தின் மீது கல்லெறிந்து சேதம் உண்டாக்கியுள் ளனர். தற்பொழுது உள்ள தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாகப் பொலிஸார் தமது கைத்தொலைபேசி, சி.சி.கமராக்களில் பதிவு செய்யப்பட்ட புகைப்படங்களின் அடிப்படையில் தாக்குதல்கள் நடத்தியவர்களைத் தேடிப்பிடித்துக் கைது செய்தனர். கிட்டத் தட்ட 150 பேர் வரையில் தடுத்து வைக்கப்பட்டு நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார்கள். இன்று அவர்களில் பலர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த பொழுதும் இன்னும் சிலர் சிறைகளில் வாடுகிறார்கள். எமக்கு நீதிமன்றச் சுற்றாடல்களில் கூடியிருக்க உரிமைமு ட்டுப்படுத்தப்பட்டளவில்) இருந்தாலும் கோசம் எழுப்புவதற்கோ, கட்டடத்தைக் கல்லெறிந்து தாக்குவதற்கோ உரிமை இல்லை. இதனால்தான் சொல்வது, குற்றம் எவ்வளவு பாரதூரமாக இருந்தாலும், நாம் சட்டத்தைக் கையில் எடுத்து, குற்றவாளிகள் (சந்தேகநபர்கள்) தண்டிப்பதற்கு எமக்கு உரிமை இல்லை. அந்த உரிமை பொலிஸார், நீதிமன்றம், சிறைச்சாலை என்ற கொண்ட அமைப்புக்கே உள்ளது என்பதை நாம் மறக்கக் கூடாது.

அண்மையில் குடாநாட்டில் இடம்பெற்ற சில சம்பவங்களை இங்கு குறிப்பிடலாம். சென்ற மாத நடுப்பகுதியில் பெண்களுக்கு ஆசைவார்த்தைகூறி அவர்களை ஏமாற்றி நகைகளைக் கொள்ளையடித்த மூதூரைச் சேர்ந்த ஆசாமி ஒருவரை பாதிக்கப்பட்ட பெண்கள் திட்டமிட்டு மடக்கிப் பிடித்தனர். அந்த நபர் வந்ததும் போடப்பட்ட திட்டத்தின்படி அங்கு திரண்டிருந்த இளைஞர்கள் அவரைப் பிடித்து குளப்பிட்டிச் சந்தியில் உள்ள மின்கம்பத்தில் கட்டிய பின்னர் முறையான கவனிப்பை வழங்கினர். இதன் பின் பொலிஸா ருக்குத் தகவல் கொடுக்கப் பட்டது. அங்கு வந்த பொலி ஸார் குறித்த நபரைக் கைது செய்து பொலிஸ் நிலையத் துக்குக் கொண்டு சென்றனர். பொலிஸாருக்கு குறித்த நபர் வழங்கிய வாக்குமூலத்தில் பல பெண்களை இவ்வாறு ஏமாற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளார் எனத் தெரிகிறது. நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட மேற்படி நபரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்களாலும், பிரதேச இளைஞர்களாலும் மிக நேர்த்தியான முறையில் குறிப்பிட்டகுற்றம் இழைத்த இளைஞரைப் பொலிஸாரிடம் மேல் நடவடிக்கைக்காகப் பாரம் கொடுத்தமை ஒழுங்கு முறைமைக்குச் சிறந்த உதாரணம்.



> குற்றம் எவ்வளவு பாரதூரமாக இருந்தாலும், நாம் சட்டத்தைக் கையில் எடுத்து, குற்றவாளிகள் (சந்தேக நபர்கள்) தண்டிப்பதற்கு எமக்கு உரிமை இல்லை. அந்த உரிமை பொலிஸார், நீதிமன்றம், சிறைச்சாலை என்ற கொண்ட அமைப்புக்கே உள்ளது என்பதை நாம் மறக்கக் கூடாது.

**விபத்தில் காயமடைந்தவர்கள் செய்த காரியம்**

சென்ற நவம்பர் இறுதியில் மிருசுவில் பகுதியில் ஒரு சம்பவம் நடந்துள்ளது. ஓட்டோவில் மோதுண்டு காயமடைந்த ஒருவரின் விபத்துக் குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த நிலையில், ஓட்டோ சாரதி தனக்கு இழப்பீடு தரவில்ல எனத் தெரிவித்து, காயமடைந்தவர் ஓட்டோ சாரதியின் வீட்டுக்குள் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி யைக் கொண்டு சென்றுள்ளார். வீட்டிலிருந்த உடைமைகளையும் சேதப்படுத்தியுள்ளார். விபத்து தொடர்பான வழக்கு சென்ற நவம்பர் 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன்போது ஓட்டோ சாரதிக்கு 12 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து. காயமடைந்தவருக்கு இழப்பீடாக 30 ஆயிரம் ரூபா வழங்குமாறு உத்தரவிடப்பட்டது. அந்தவேளையில் காயமடைந்தவர், தனது வீட்டில் ஏற்படுத்திய சேதம் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டியைத் தூக்கிச் சென்றமை தொடர்பாக ஓட்டோ சாரதி நீதிமன்றத்தில் தெரிவித்தார். அதையடுத்து [illegible] வழி நடத்தும் பொறுப்பு பொலிஸாரிடம் உள்ளபோது நீங்கள் அதனை மீறிச் செயற்பட்டது தவறு' எனக்கூறிய நீதிவான் காயமடைந்தவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். நீதிவானின் பணிப்பின்பேரில், பொலிஸார் இந்த நபரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியதுடன் அவரால் கொண்டு செல்லப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியையும் நீதிமன்றத்தில் கொண்டு வந்தனர். வழக்கை விசாரித்த நீதிவான், குறித்த நபரைக் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன், விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். சம்பந்தப்பட்ட நபர் சட்டத்தைத் தனது கையில் எடுத்துச் செயற்பட்ட சம்பவத்துக்கு இது ஓர் உதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்கந்தபுரம் பாடசாலையில் சம்பவம்**

அடுத்த சம்பவம் ஸ்கந்தபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபரின் கைத் தொலைபேசி ஒன்று கடந்த மாதம் பாடசாலை நேரத்தில் காணாமற் போயுள்ளது. அதையடுத்து மேற்படி பாடசாலையில் கல்வி கற்று வரும் தரம் 6 ஐச் சேர்ந்த 4 மாணவர்கள் மீது, அதே பாடசாலையைச் சேர்ந்த தரம் 9 மாணவர்கள் இருவர் தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப் படுகின்றது. இந்தத் தாக்குதல் சம்பந்தமான முறைப்பாட்டுக் அமைய, கிளிநொச்சி நீதிமன்றத்தினால் வழக்கு விசாரணைகளை அடுத்து, குறித்த பாடசாலை அதிபர் தவிர்ந்த இரு மாணவர்களையும் தலா 50,000 ரூபா சரீரப் பிணையிலும் அதிபர் உட்பட மூவரையும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையிலும்செல்லுமாறுநீதிவான்உத்தரவிட்டுள்ளார். அத்துடன் கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவம், கைத் தொலைபேசியைப் பறிகொடுத்த அதிபரின் ஒத்துழைப்புடன்/ தூண்டு தலின் பேரிலேயே அந்த உயர்வகுப்புமாண வர்கள் சட்டத்தைத் தமது கையில் எடுத்து, அந்தத் திருட்டுச் சந்தேகநபர்களான மாணவர்களைத் தாக்கியுள்ளனர் என்பதற்கு உதாரணமாக அமைந்துள்ளது.

அடுத்ததாக சென்ற வாரம் ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவம் பற்றிய விசாரணையைக் கூறலாம். மானிப்பாய் பகுதியில் அன்பளிப்புப் பொருள்கள் விற்பனை செய்யப்படும் நிறுவனம் ஒன்றுக்குள் புகுந்து பொருள்களைத் திருடிய பெண்களை பாதுகாப்புக் கமராவின் உதவியுடன் இனங்கண்ட கடை உரிமையாளர் இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு எதுவும் செய்யாது தாமே நேரடியாக விசாரணைகளை முன்னெடுக்க முற்பட்டுள்ளார். திருடிய பெண்களை மானிப்பாய்க்குக் கடத்தி வந்து பொலிஸ் பாணியில் விசாரணை செய்துள்ளார். விசாரணை செய்த நான்கு நபர்கள் மற்றும் திருடிய பெண்கள் நால்வரையும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். குறித்த கடை உரிமையாளருக்கு எதிராக கடத்தல் குற்றச்சாட்டும் ஏனைய மூவரும் தாம் பொலிஸார் எனக்கூறி மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருடிய பெண்களையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். மக்கள் மத்தியில் இன்று பேசு பொருளாகத் திருடிய பெண்களைப் பற்றிப் பெரிதாக இல்லாவிட்டாலும் சட்டத்தைக் கையில் எடுத்துச் செயற்பட்ட மற்றையநால்வர் பற்றியேபெரிதும்பிரலாபிக்கப்படுகிறது. இறுதியாக இந்த கட்டப் பஞ்சாயத்து சம்பவத்துக்கு உதாரணமாக அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற கடத்தல் சம்பவத்தைக் கூறலாம்.

**ஹிருணிகா விடயம்**

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திராவின் பாதுகாப்பு வாகனம் ஒன்றைப் பயன்படுத்தி இளைஞன் ஒருவனைக் கடத்திச் சென்று தாக்கினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அவரது ஆறு ஆதரவாளர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேற்படி இடம்பெற்ற சம்பவங்களை எமது மக்களும் ஒருபட்டறிவு அனுபவமாகக் கருதி எந்தச்சந்தர்ப்பத்திலும் வீரத்துடனும் விவேகத்துடனும்முக்கியமாகநிதானத்துடனும்நடந்துகொள்வார்களாக!



# கடமை தவறாமை உயர்வு தரும்

வெகுகாலத்திற்கு முன்பு இந்தியாவில் வசித்த ஒரு விவசாயி தன் மகன் மோகனைக் கூப்பிட்டு மோகன் இப்போது எமக்குச் சொந்தமான வயலில் பயிர் நன்றாக வளர்ந்திருக்கிறது.
கதிர் விடுங் காலமாகிய இக்காலத்தில்தான் நாம் பயிர்களை மிகக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். நான் ஒரு அவசர காரியமாகச் சில நாள்கள் வேற்றூருக்குச் சென்று திரும்ப யோசித்திருக்கிறேன். அதுவரை நீ எமது வயலை மிகப் பத்திரமாகக் காப்பதுடன் ஒருவரும் எமது வயலைக் கடந்து செல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நான் மகிழ்ச்சியாய் வெளி ஊருக்குச் செல்வேன் " என்று கூறினான். மோகனது மனதில் தந்தையின் ஒவ்வொருசொல்லும்ஆழமாகப் பதிந்தது. கடமையுணர்ச்சி மிக்க அவன் தன் தகப்பனாரின் கட்டளையைச் சிரமேற்கொள்ள உறுதி பூண்டான். "தந்தையே! உமது கட்டளைப்படி தவறாது நடந்து கொள்வேன்" என்று வாக்குக் கொடுத்தான்.



தந்தை வேற்றூருக்குச் சென்ற நாள் முதலாய் மோகன் இரவும் பகலும் தங்கள் பயிரைப் பத்திரமாகக் காவல் காத்து வந்தான். சில நாள்கள் சென்ற பிறகு மோகனைச் சோதிக்கவல்ல ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அவர்கள் வாழ்ந்த சிற்றூரின் அரசர் சிற்சில சமயங்களில் காட்டுக்கு வேட்டையாடச் செல்லும்போது குறுக்குப் பாதையில் வயல்களைக் கடந்து குதிரையில் செல்வது வழக்கம். அன்று அரசர் தமது குழுவுடன் குதிரையில் வேட்டையாடச் சென்றார். அரசரின் பணியாள் ஒருவன் மோகனிடம் தாங்கள் அவ்வழியால் செல்ல விரும்புவதாகக் கூறினான். எவராயினும் எங்கள் பயிர்களை மிதித்து அவ்வழியில் செல்ல அனுமதிக்க முடியாதென்று உறுதியாய்க் கூறினான் மோகன். அதன் பின்பு அரசரின் செயலாளர் களில் ஒருவன் பணப்பை ஒன்றுடன் வந்து தங்கள் குழுவினர் வயலைக் கடந்து குறுக்குப் பாதையில் செல்ல விரும்புவதாகவும் அதற்கு ஈடாகப் பணத்தைக் கொடுப்பதாகவும் கூறினான். மோகன் அந்த அதிகாரியை நோக்கி "உமது பணத்தைவிட எனது தந்தைக்குக் கீழ்படிவது முக்கியமான காரியம். மேலும் பாடுபட்டு நாங்கள் வளர்த்த இந்தத் தானியப் பயிரை நீங்கள் அழிக்க நினைப்பது பெருந்தவறு" என்று கூறினான்.
அதன் பின்பு காவல் அதிகாரி ஒருவன் மோகனைக் கண்டு அவனைப் பயமுறுத்தி அரசருக்கு வழிவிடும்படி வற்புறுத்தினான். மோகன் அதற்கும் ஒப்புக்கொள்ளாததால் அதிகாரி அவனைச் சாட்டையால் வன்மையாக அடித்துத் துன்புறுத்தினான். ஆயினும் மோகன் எவரையும் வயலைக் கடக்க அனுமதிக்க மறுத்தான்.
இந்தச் செய்திகள் அனைத்தும் அறிந்த அரசர் அந்த அற்புதச் சிறுவனைக் காணப் பேராவல் கொண்டு தாமே விரைந்து அவனிடம் சென்றார். "சிறுவா! நானே இந்தச் சிற்றூரின் அரசன். நான் இவ்வழியில் வேட்டையாடச் செல்ல எனக்கு அனுமதி அளிப்பாயா?" என்று கேட்டார்.
மோகன் அரசரை அறிந்த பின்பும் வேந்தராகிய நீங்கள் கூட இவ்வயலைக் கடந்து செல்ல நான் சம்மதியேன். இது எனது தந்தையின் கட்டளை. மேலும் நீண்டகாலம் பாடுபட்டு நாங்கள் பயிர் செய்த இந்த உணவுப் பயிர்களை உமது குதிரைப்படை ஒரே நொடியில் அழித்து விடும். வேந்தே! நீர் எளியவர்களின் பாதுகாவலனாக இருக்க வேண்டியவர் அல்லவா? என்று வீரமாக உறுதியுடன் மொழிந்தான். மன்னர் அச்சிறுவனின் கடமையுணர்ச்சியை யும், கீழ்படியும் தன்மையையும் விவேகத்தையும் வீரத்தையும் கண்டு உள்ளத்தில் பெருமகிழ்ச்சி கொண்டார். அன்புடன் சிறுவனை நோக்கி, சிறுவனே! உனது கடமை உணர்ச்சியை மிகப் பாராட்டுகிறேன். உனது வீரத்தினாலும் விவேகத்தினாலும் எனது அதிகார வெறியைத் தடுத்து மேற்கொண்டாய். நீ எனது நாட்டின் ஈடில்லா சொத்து. உன்னைப் போன்ற நேர்மை குன்றா வீரமிக்க புதல்வர்களைக் கொண்ட பெற்றோருக்கு வாழ்வில் குறை எதுவும் இருக்காது. உனது தந்தையின் சொல்லைக் காப்பதற்காகப் பணத்தையும் அரசனையும் கூட நீ மதிக்கவில்லையே. அடிக்கும் அதிகாரத்திற்கும் அடங்காத உன் நீதியுணர்ச்சியை என்றும் பாராட்டுவேன் என்று சொல்லி அவனுக்கு வெகுமதியளித்துச் சென்றார். தன் சொல்லைக் காப்பாற்றுவதற்காக மோகன் செய்த வீரச் செயல்களைக் கேட்டறிந்த அவனது தந்தை எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தார்.

## வரலாற்றில் இன்றைய தினம்

590 – பேர்சியாவின் அரசராக இரண்டாம் கொஸ்ரா முடிசூடிக் கொண்டார்.

1214 – இங்கிலாந்தின் ஜோன் அரசரின் பிரான்சின் லா றோச்செல் இல் தனது படையை ஊடுருவச் செய்தார்.

1835 – நவீன சேர்பியாவின் முதலாவது யாப்பு நடைமுறைக்கு வந்தது.

1870 – இயந்திரப் பொறியியலில் பொறியியலாளர் மாணிப் பட்டம் வழங்கத்தக்கதாக அமெரிக்க நியூஜேர்சியில் ஸ்ரீபன் தொழில் நுட்ப நிறுவனம் தொடங்கப்பட்டது.

1909 – மெக்ஸிகோ அகபுல்கோ புளோர்ஸ் அரங்கு தீ விபத்தில் 250 பேர் சாவு.

1942 – இரண்டாம் உலக மகாயுத்தம்; சிங்கப்பூர் வீழ்ச்சியடைந்தது. ஜப்பானிய படையினரின் தாக்குதலில் பிரித்தானிய ஜெனரல் ஆர்தர் பேர்சிவல் சரணடைந்தார். 80000 வரையிலான இந்தியர்களும் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய படைகளும் போர்க் கைதிகள் ஆக்கப்பட்டனர்.

1961 – சபென பிளைற் 548 விமானம் பெல்ஜியத்தில் விபத்துக்குள்ளாகி, அமெரிக்க ஸ்கேட்டிங் குழுவின் அனைத்து வீரர்கள், அவர்களது பயிற்றுவிப்பாளர்கள், குடும்ப அங்கத்தினர் உட்பட 73 பேர் சாவு.

1989 – தனது அனைத்துப் படைகளும் ஆப்கானிஸ்தானிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க...





## மூளைக்கு வேலை

### புத்திசாலிப் பையன்

அந்தப் பாலம் தெற்கு வடக்காக ஒரு நதியின் மீதிருந்தது. ஒரு பையன் நதியைக் கடக்க விரும்புகிறான். படகு கிடையாது. அவனுக்கு நீந்தத் தெரியாது. பாலத்துக்கோ காவல். ஐந்து நிமிடத்துக்கு ஒரு முறை காவல்காரன் வெளி வந்து தெற்கும் வடக்கும் பார்த்து விட்டு மறுபடியும் குடிசைக்குள் புகுந்து விடுவான். பாலத்தைக் கடக்க 10 நிமிடம்தான் பிடிக்கும். காவல்காரனின் குடிசை, பாலத்தின் நடுவிலிருந்தது. பையன் காவல்காரனை ஏமாற்றிப் பாலத்தைக் கடந்துவிடுகிறான்.

எப்படி?



தெற்கு பக்கிமிருந்து பால்த்தில் வருகிறான் பையன். ஐந்தாவது நிமிடத்தில் பாதிப் பாலம் கடந்தாயிற்று. அதேசமயம் காவல்காரனும் வெளிவருகிறான். புத்திசாலிப் பையன் டக்கென்று தெற்குப் பக்கமாகப் பார்த்துத் திரும்பி நிற்கிறான். பையன் வடக்கே இருந்துதான் வந்ததாக எண்ணி காவல்காரன் அவனை விரட்டுகிறான், பையன் திரும்பி ஓடி (வடக்கு நோக்கி) அடுத்த பாதியையும் கடந்து விடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டின் முக்கியத்துவம்

தபோஜினி

முன்பெல்லாம் மாணவர்கள் அன் றைய வகுப்புகள் முடிந்ததும், நேராக விளையாட்டு மைதானத்துக்குத்தான் செல்வார்கள். சிலர் கூடைப்பந்து, வலைப்பந்து, உதைப்பந்து போன்ற விளையாட்டுக் களில் ஈடுபடுவார்கள். சிலர் ஓடுதல், தாண்டுதல், தாவு தல் போன்ற பயிற்சிகளை மேற்கொள்வார்கள். மொத் தத்தில் எல்லாருக்கும் விளையாட்டில் ஆர்வம் இருந்தது.

'மாலை முழுவதும் விளையாட்டு' என்றார் பாரதி. அந்த நியதி இன்று மாறிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

மாணவர்களில் பலரும் விளை யாட்டு மைதானத்துக்குச் செல் வதில்லை. உணவகங்களில் நேரத்தை (பணத்தையும்)ச் செலவிடுகிறார்கள். வீடு திரும் பியதும் தொலைக்காட்சி அல் லது கணினி முன்பாய் அமர்ந்து விடுகிறார்கள்.

விளையாட்டுக்கான மனோ பாவத்தை அவர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை.

தொலைக்காட்சி, கணினி, கைபேசி ஆகியவை மாணவர் களிடம் முடங்கிக்கிடக்கும் வாழ்க்கை முறையை ஏற் படுத்தி விட்டன. அவர்கள் வாரத் தில் 24 மணி நேரத்தை தொலைக்காட்சி முன்பாய் செலவிடுவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. அந்த நேரத்தை உடற்பயிற்சி அல்லது விளையாட்டில் அவர்கள் செலவிட முடியும்.

> தொலைக்காட்சி, கணினி, கைபேசி இவை மாணவர்களிடம் முடங்கிக்கிடக்கும் வாழ்க்கை முறையை ஏற்படுத்திவிட்டது. அவர் கள் வாரத்துக்கு 24 மணி நேரத்தை தொலைக்காட்சி முன்பாய் செலவிடு வதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

**விளையாட்டின் பயன்கள்**

'விளையாட்டு வகுப்பு' என்று ஒரு வகுப்பை கல்விக் கூடங்கள் அறிமுகப்படுத்தியது ஏன்? விளையாட்டின் மூலம் நாம் பெறக் கூடிய நன்மைகளைக் கருத்திற் கொண்டுதான். அவை ஒன்றல்ல, அனேகம். ஒரு பட்டியலே போடலாம்.

முதலாவது, ஆரோக்கியப்பராமரிப்பு. தசைநார்கள் வலுப்பெறவும், இரத்தச் சுற்றோட்டம் மேம்படவும் விளையாட்டு உதவுகிறது. எலும்புகளும் துரிதமாய் வளர்ச்சி பெறும்.

இரண்டாவது, இரத்த அழுத்தம், மூட்டு வலி, இருதய உபாதை போன்ற பிணிகள் அண்டாது.

மூன்றாவது, படிப்பில் சூட்டிகையாக விளங்கவும் விளையாட்டு உதவுகிறது.

மிகச் சிறந்ததும், குறிப்பிடத்தக்கதுமான நன்மை 'வெற்றி' என்கிற குறிக்கோளை ஏற்படுத்திக் கொண்டு அதை அடையும் மன உறுதியைப் பெறுகிறோம். வெற்றி கிடைக்காத பட்சத்தில் மனம் தளரத் தேவையில்லை. ஆட்டத்தில் ஒருவர் வென்றால் மற்றொரு வர் தோற்பது இயல்பு என் பதைப் புரிந்து கொள்கிறோம். தோல்வியை ஏற்கிற மனப் பக்குவத்தை அடைகிறோம். அடுத்த ஆட்டத்தில் வெற்றி பெறும் முனைப்புடன் செயற் படுவோம்.

சக மாணவர்களுடன் ஒற் றுமையாக இருப்பதன் அவ சியத்தையும் விளையாட்டு உணர்த்துகிறது. உதைப் பந்து, கூடைப்பந்து, வலைப் பந்து, கிரிக்கெட் போன்ற விளை யாட்டுக்களில் ஒரு குழுவாக ஆடுகிறோம். குழுவில் உள் ளவர்களிடையே புரிதலும், இணக்கமும் இருந்தால்தான் வெற்றி பெற முடியும். விளையாட்டு வளர்க்கிற குழு வாகச் செயற்படும் முறையும், குழு மனப்பான்மையும் நாம் பிற்பாடு ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் போதும் உதவும்.

விளையாட்டு ஆர்வத்தை வளர்க்கிறது, தன்னம் பிக்கையை ஏற்படுத்தித் தருகிறது.

ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் ஒருசேரக் கிடைக்கிற விளையாட்டை நாம் அவசியம் மேற்கொள்ள வேண்டும்.

# இயேசுவே சிறந்த உளநல மருத்துவர்

தவக்காலம் என்பது அருளின் காலம். மன்னித்து மனம்மாற அழைக்கும் காலம். எமது வாழ்வைச் சீரமைக்கும் சிறப்புமிகு காலம். இயேசு நேர்மையாளரையும் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகும் நீதிமான்களையும் மட்டும் தேடிவரவில்லை. பாவிகளை மீட்டு நல்வழிப்படுத்துவதே அவரது மனுவுருவின் நோக்கமாகும். வரிவசூலிப்பவரான லேவியை என்னைப்பின்பற்றிவா என அழைத்தது, விபசாரத்தில் பிடிபட்டபெண்ணை மன்னித்தது, சமாரியப்பெண்ணை மனம்மாற்றியது. முடக்குவாதமுள்ளவரை மன்னித்து குணப்படுத்தியது. போன்ற சம்பவங்கள் இதற்குச் சான்றாகும்.




நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. நேர்மையாளரை அல்ல பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன் (லூக் 5:31-32) என தமது பணியின் நோக்கத்தை எடுத்துரைக்கின்றார். பாவ வாழ்வை விட்டு பரிசுத்தபாதையைத் தொடர எம்மையும் அழைத்து நிற்கிறார்.

எமது அன்றாட வாழ்வில் பிறரை வஞ்சித்தல், நற் பெயருக்கு களங்கம் ஏற்படுத்த ஆவலாதி, பழிவாங்கல், புறக்கணிப்பு, பகைமை, மோகம், குறுக்கு வழிகள், உறவு முறிப்புக்களால் இறைவனை விட்டு விலகிச் செல் லும் நிலைகளுக்கு சமாதிகட்டிவிட்டு அன்பை, அமைதி யை, பரிவை, ஆறுதலைப் பரிமாறி இறைவழி தொடர்வோம். இறை அழைத்தலுக்கு செவிமடுத்து வாழும்போது தவக்காலம் பயனுள்ளதாக மாறும்.

எஸ். யேசுதாஸ், கொழும்புத்துறை

# பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்த்தல்

வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்து, நாட்டில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவது குறித்து அரசு கவனம் செலுத்தி உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகள் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங் கப்படுவது வரவேற்கப்பட வேண்டிய விடயம். எனி னும் அவர்களின் பட்டப்படிப்புக்கு ஏற்ற துறை சார்ந்ததாகவே ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பது கட்டாயமானதாகும்.

குறிப்பாக, கணிதம், ஆங்கிலம், சித்திரம், விஞ் ஞானம் ஆகிய பாடங்களுக்கே ஆசிரியர் பற் றாக்குறை நிலவுவதாக கல்வி அமைச்சு சுட் டிக்காட்டியுள்ளது.

எனவே, குறித்த பாடங்களுக்குப் பட்டதாரிகளை நியமிக்கும் போது, அந்தத் துறையுடன் தொடர் புள்ள பட்டதாரிகளை நியமிப்பதே சிறந்தது. குறித்த துறைசார்ந்த பட்டதாரிகள் வடக்கு மாகாணத்தில் தாராளமாகவுள்ளனர்.

இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் சித்திர பாடத்தில் கலைமாணிப்பட்டம் பெற்ற பட்டதாரிகள் பலர் உள்ளனர். எனினும் வடக்கு மாகாணத்தில் சித்திரப் பாடத்திற்கான ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது.

எனவே, அரசின் தற்போதைய அறிவிப்புடன் வடக்கு மாகாணத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற் றாக்குறையை மதிப்பிட்டு, அதற்குப் பொருத்த மான துறைசார்ந்த பட்டதாரிகளைத் தெரிவு செய்து, அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பு வதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும்.

மேலும் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக வடக்கு மாகாண சபையில் பலமுறை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தமிழ் பாட ஆசிரியர் நீண்டகாலமாக நியமிக்கப்பட வில்லை என அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அங்கு தமிழ் பாட ஆசிரியர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையை வடக்கு கல்வி அமைச்சு எடுக்கவில்லை எனவும் குற்றஞ்சுமத் தப்பட்டுள்ளது.

எனவே, ஆசிரியர் நியமனங்களின் போது, வெற் றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு முன் னெடுப்பது கட்டயமான தாகும்.



மேலும், பாடசாலை களுக்குத் தேவை யானவளங்களை வழங்குவதற்கு அரசு நடவடிக்கையை முன்னெடுத் துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக, கல்வி அமைச்சுக்கான நிதி வழமைக்கு அதிகமாக வழங்கப்பட்டது. எனவே, வடக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கான வளங் களைப் பெற்றுக் கொடுப்பதில் அதிகாரிகள் கவ னம் செலுத்த வேண்டும்.

இதற்கு இலகுவாக, ஜனாதிபதியிடமே திட் டங்களை முன்வைப்பதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

எனவே, வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்குத் தேவையான வளங்களை அரசிடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை உரியவர்கள் முன்னெடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## அரசியல் கதையில் ஆருஷி




"அஞ்சாதே", "கோ" போன்ற படங்களில் நடித்தவர் அஜ்மல். மாறுபட்ட கதைகளைத். தெரிவு செய்து நடிப்பவர். இவர் நடிக்கும் புதிய படத்துக்கு "நல்லவாயன் நாறவாயன்" என வித்தியாசமான தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது. காமெடித் தொனியில் தலைப்பு இருந்தாலும், இது இட ஒதுக்கீடு சர்ச்சையை அலசும் அரசியல் படமாக உருவாகிறது. பாஸ்கர்ராவ் எழுதி இயக்குகிறார். அவர் கூறும் போது,"இட ஒதுக்கீடு நடைமுறைப் படுத்தப்பட்டு 68 ஆண்டுகள் ஆன பிறகும் ஒடுக்கப்பட்ட மக்கள் இன்னும் உயர்ந்தபாடில்லை. அதற்கு காரணம் அரசியல் அமைப்பா? சமுதாயமா? அரசா? என்று அலசும் கதை. அஜ்மல் ஹீரோ. மாவட்ட அதிகாரி வேடத்தில் நடிக்கிறார் ஆருஷி. சந்தோஷ், பன்ச்சி மற்றொரு ஜோடி. நாசர், நாகபாபு, கோட்டா சீனிவாசராவ் உள்ளிட்டோர் இதில் நடிக்கின்றனர். ஆர்.பி. பட்நாயக் இசை. பேய் கதைகளுக்கு நடுவே மாறுபட்ட அரசியல் படமாக இது வெளிவருகிறது" -என்றார்.

## ஊர் வருமா?

ஒரு மாட்டு வண்டியில் தேங்காய்களை ஏற்றிக் கொண்டு வேகமாக வந்து கொண்டு இருந்தான் ஒருவன். குறுக்குப் பாதை ஒன்று வந்தது. அங்கே ஒரு சிறுவன் நின்றிருந்தான்.

"தம்பி, இந்த வீதியால் போனால் ஊர் வருமா?" என்று கேட்டான்.


"வரும்..." என்றான் சிறுவன். "போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?"

"மெதுவாகச் சென்றால் பத்து நிமிடத்தில் போய்விடலாம். வேகமாகச் சென்றால் அரை மணி நேரம் ஆகும்" என்றான். சிறுவன் சொன்ன பதிலைக் கேட்டு மாட்டு வண்டிக்காரனுக்குக் கோபம் வந்தது."என்ன கிண்டலா? வேகமாகச் சென்றால் எப்படி நேரம் அதிகமாகும்?'என்று கேட்டான். "போய்த்தான் பாருங்களேன்"என்று சிறுவன் சொன்னதும், அவன் வண்டியை வேகமாக விரட்டிச் சென்றான்.

சிறிது தூரம் போனதுமே வீதி முழுவதும் கற்கள் கொட்டி இருந்தன. வண்டி தடுமாறிக் கவிழ்ந்தது.

தேங்காய்கள் சிதறின. வண்டியை நிமிர்த்திக் கீழே சிதறிய தேங்காய்களைப் பொறுக்கி எடுத்துப் போடுவதற்கு அரை மணி நேரத்துக்கும் மேலாகிவிட்டது.

வண்டிக்காரனுக்குச் சிறுவன் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் புரிந்தது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பாராமல் வாழ்வில் நன்மை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். சுப விடயத்தில் எதிர்பார்ப்பு நிறைவேறும். பெண்கள் விரும்பிய பொருளை வாங்கி மகிழ்வர்.

**இடபம்:** செயல்களில் நிதானம் தேவைப்படும். தொழிலில் மிதமான இலாபம் கிடைக்கும். சேமிப்புப் பணம் அத்தியாவசிய செலவுக்குப் பயன்படும். ஆரோக்கியம் பலம் பெறும்.

**மிதுனம்:** பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழிலில் இருந்த தடை விலகும். இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்களுக்கு பணிச்சுமை இருக்காது. மாமன், மைத்துனர் கேட்ட உதவி வழங்குவீர்கள்.

**கடகம்:** நேர்மை எண்ணம் அதிகரிக்கும். நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி சிறந்து, எதிர்பார்த்த முன்னேற்றம் பெறும். பெண்கள் வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவர்.

**சிங்கம்:** பணியில் மட்டும் அக்கறை செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் சேமிக்கும் விதத்தில் சிக்கனமாக நடப்பர். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் கடைபிடிக்கவும்.

**கன்னி:** உறவினரின் கருத்துக்கு மாறாகப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை உருவாகி விலகும். பண விடயத்தில், பிறரை நம்ப வேண்டாம். பெண்கள் குடும்ப ஒற்றுமைக்காகப் பாடுபடுவர்.

**துலாம்:** நேர்மை வழியில் செயற்படுவீர்கள். தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும். இயந்திரப் பிரிவு பணியாளர்கள், பாதுகாப்பு தவறாமல் பின்பற்றவும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவர்.

**விருச்சிகம்:** கடந்த கால அனுபவம் கைகொடுக்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்கான, புதிய வாய்ப்பு கிடைக்கும். இலாபம் கூடும். குடும்பத் தேவை நிறைவேறும். அரசியல்வாதிகளுக்கு எதிரி தொல்லை மறையும்.

**தனுசு:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழிலில் வருமானம் சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மகரம்:** உறவினர் மீது அதிருப்தி கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்பினால் வளர்ச்சி காண்பீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். வாகனப் பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும்.

**கும்பம்:** அடுத்தவர் வியக்கும் வகையில் பணிபுரிவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். அமோக இலாபம் கிடைக்கும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** பணிகளில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | | | 3 | | | |
| | | | | | | | | |
| | 6 | | | | 2 | | | 9 |
| | | | | | | | 1 | |
| | | | | 1 | | 4 | | 6 |
| 8 | 1 | 3 | 7 | | | 5 | | |
| 4 | 9 | | | 3 | | 6 | | 5 |
| | | 8 | | | 5 | | | |
| | | | | | 6 | 7 | | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 2 | 4 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 9 | 6 | 4 | 7 | 3 | 1 | 8 | 5 | 2 |
| 3 | 5 | 1 | 9 | 8 | 2 | 4 | 7 | 6 |
| 5 | 1 | 8 | 2 | 4 | 9 | 6 | 3 | 7 |
| 7 | 3 | 6 | 1 | 5 | 8 | 9 | 2 | 4 |
| 4 | 2 | 9 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 |
| 1 | 8 | 3 | 5 | 2 | 4 | 7 | 6 | 9 |
| 6 | 9 | 7 | 8 | 1 | 3 | 2 | 4 | 5 |
| 2 | 4 | 5 | 6 | 9 | 7 | 1 | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பிரவேசிக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




அருமையான நட்பு...
அரண்போல் காக்கும்...
எவரும் நெருங்க முடியாது...
அசைக்கவும் முடியாது...
அசையாத சொத்து நட்பு...!!!

செயற்கரிய யாவுள நட்பின் அது
போல் வினைக்கரியயாவுள காப்பு.
குறள்

**செல்லகுட்டி_பிரதீபா**
உன்னை ஒருவர் தரம் தாழ்த்தி பேசுவரை எதிர்த்து சண்டை இடுவதை விட, அவர்களுக்கு முன் ஒரு படி வாழ்ந்து காட்டு போதும். கூனிக் குறுகி விடுவார்கள்.

**ஆன்டனி**
வாழ்க்கை சுவையானது.
உங்கள் அறியாமையினால்
அதைக் கசப்பாக்கி விடாதீர்கள்...!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 400 | – |
| கணவாய் | 550 | 400 | 500 | 500 | 600 | 500 | 550 |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 500 | 800 | 370 |
| சுறா | 400 | 500 | 600 | 700 | 600 | 800 | – |
| சீலா | 250 | 350 | 400 | 500 | 400 | 1200 | 400 |
| விளை | 500 | 400 | 400 | 600 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 400 | 500 | – |
| கும்பிளா | 400 | 300 | 300 | 500 | 500 | 400 | – |
| கிழாக்கன் | 500 | 800 | – | – | 500 | 400 | – |
| ஓரா | 300 | 300 | – | – | 400 | 400 | 650 |
| திரளி | 200 | 200 | 200 | 200 | 300 | 300 | 300 |
| நகரை | 150 | 200 | – | 280 | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 150 | 100 | 150 | 300 | 150 | – |
| ஒட்டி | 250 | 200 | 150 | 200 | 250 | 200 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 250 | 300 | 150 |
| மதனம் | 100 | 200 | 180 | 350 | 250 | 200 | 300 |
| கொய் | 80 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 300 | 200 | 250 | 300 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | 100 | 200 |





## லவ் கப்

லவ் குவளைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. காதலர் தின கொண்டாட்டத்துக்காக இவை அறிமுகப்படுத் தப்பட்டி ருக்கிறது. இவற்றின் விலை 200 முதல் 250 ரூபா வரை யாகும்.

**தேவையான பொருள்கள்:**
தூதுவளை மூலிகை- ஒரு கப்
சிறிய வெங்காயம்- 2
மிளகாய் வத்தல்- 3
புளி, உப்பு, எண்ணெய் - தேவையான அளவு

## தூதுவளை துவையல்

### செய்முறை:

முதலில் தூதுவளையை நன்றாகச் சுத்தம் செய்யவும். பின்னர் பாத்திரத்தில் சிறிதளவு எண்ணெயை ஊற்றி சூடாக்க வேண்டும். அதில் தூதுவளை இலையைப் போட்டு வதக்கிக் கொள்ளவும். பின்னர் வதக்கிய தூதுவளை இலையை சிறிதளவு தண்ணீர் சேர்த்து அம்மியில் அரைக்க வேண்டும்.

அவற்றில் மிளகாய் வத்தல், உப்பு, புளி, சிறிய வெங்காயம் ஆகியவற்றையும் சேர்த்து நன்றாக அரைக்க வேண்டும். தூதுவளை மூலிகையை அப்படியே சாப்பிட முடியாதவர்கள், இதுபோன்று துவையலாக செய்து உண்டு மகிழலாம்.



# சுமையலறைக் குறிப்புகள்

1. பச்சை மிளகாயில் அதன் காம்புப் பாகத்தை அகற்றி அதை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நாளகளுக்கு அந்த மிளகாயைப் பயன்படுத்தலாம்.
2. காளான்களை அலுமினியம் பாத்திரங்களில் சமைக்கக்கூடாது. ஏனென்றால் அவை பாத்திரத்தைக் கருமையாக மாற்றிவிடும்.
3. தோல் பொருள்களில் மைப்பேனா குறிகளை அழிப்பதற்கு பாலும் சிறிதளவு ஸ்பிரிட்டும் கலந்து சுத்தம் செய்யவும்.
4. எண்ணெய் கறையை அழிப்பதற்கு, எலுமிச்சம் பழத்தை இரண்டு துண்டாக வெட்டி அதை உப்பில் வைக்கவும். பின்னர் அந்த துண்டுகளை வைத்து தேய்க்கவும்.
5. மண் கறைகளை துணிகளிலிருந்து நீக்குவதற்கு, உருளைக்கிழங்குகளை வேக வைத்த தண்ணீரில் அந்தத் துணியை ஊற வைத்து சுத்தம் செய்யவும்.
6. பால் பொங்கும் போது அதை அடக்க முடியவில்லை என்றால், சிரமப்படாமல் அதை அடக்குவதற்கு சிறிது துளிகள் குளிர்ந்த தண்ணீரைத் தெளிக்கவும்.
7. பாலைக் காய்ச்சுவதற்கு முன், அந்த பாத்திரத்தை நன்கு தண்ணீரால் சுத்தம் செய்த பின்னர் காய்ச்சினால், பால் பாத்திரத்தின் அடியில் பிடிப்பதைத் தவிர்க்கலாம்.
8. முட்டையை வேக வைக்கும் போது அதனுள் இருப்பவை வெளியில் வராமல் இருப்பதற்கு, வேக வைக்கும் தண்ணீரில் ஒரு கரண்டி; வினிகரை விடவும். அவ்வாறு விட்டால், முட்டையின் ஓடு வெடித்தாலும் கூட உள்ளே இருப்பவை வெளியில் வராது.
9. ஒரு முட்டையானது கெடாமல் புதியதாக இருக்கிறதா என்பதை அறிவதற்கு, அந்த முட்டையைக் குளிர்ந்த உப்பு தண்ணீரில் முழுகும்படியாக வைக்கவும். முட்டையானது முழுகாமல் மேலே வந்தால் அதை நீங்கள் தூக்கி எறியலாம். அது தண்ணீரில் மூழ்கினால் அதை சமையலில் பயன்படுத்தலாம்.
10. வெங்காயம் நறுக்கும் போது கண்ணிலிருந்து தண்ணீர் வராமல் இருப்பதற்கு, நறுக்க வேண்டிய வெங்காயங்களை முன்பே குளிர்சாதனப் பெட்டியில் வைத்த பின்னர் ஆரம்பிக்கலாம்.
11. உருளைக்கிழங்குகளை வெங்காயங்களுடன் வைத்தால் அவை சீக்கிரமாக கெட்டுப்போய்விடும். அவ்வாறு அவை கெடாமல் இருப்பதற்கு, அந்த உருளைக் கிழங்குகள் இருக்கும் பைக்குள் ஒரு அப்பிள் பழத்தை வைக்கவும்.
12. வெங்காயத்தின் நாற்றம் உங்கள் வாயிலிருந்து போவதற்கு, பற்பசை தான் சிறந்த வழி.
13. பால் புளிக்காமல் இருப்பதற்கு, ஏலக்காயை பால் காய்ச்சும் போதே அதனுடன் சேர்க்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நேரத்துக்குப் பால் புளிக்காமல் இருக்கும்.
14. தோல் உரித்த உருளைக்கிழங்குகளைக் கெடாமல் வைப்பதற்கு சில துளிகள் வினிகரால் தெளித்து குளிர்சாதனப் பெட்டியில் அதை வைக்கவும்.
15. முட்டைகளை 30-40 நாள்கள் வரை கெடாமல் வைப்பதற்கு, அதன் மேல் ஒரு பிரால் சமையல் எண்ணையைத் தடவவும்.

**நாளை**
மாசி-04
செவ்வாய்க்கிழமை 16.02.2016
திதி: நவமி பி.இ.02.39
நட்சத்திரம்: ரோகிணி பி.இ.05.47
ராகுகாலம்: 03.33-05.03 வரை
சுபநேரம்: 11.03-12.33 வரை

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 50 | 40 | 60 | 30 | 40 | 30 | 25 |
| கத்தரி | 80 | 80 | 70 | 100 | 60 | 60 | 80 | 30 |
| கரட் | 200 | 220 | 240 | 180 | 200 | 280 | 200 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 150 | 120 | 120 | 140 | 120 | 100 | 140 | 120 |
| பாகல் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 60 | 60 | 100 | – | 60 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 60 | 70 | 60 | 80 | 50 | 50 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 80 | 90 | 80 | 120 | 70 | 70 |
| பூசணி | 60 | 80 | 100 | 100 | 80 | 100 | 70 | 80 |
| தக்காளி | 50 | 60 | 50 | 60 | 60 | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 60 | 60 | 120 | 45 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 30 | 20 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 200 | 200 | 180 | 160 | 250 | 200 | 200 |
| புடோல் | 60 | 80 | 70 | 50 | 60 | 60 | 30 | 60 |
| கோவா | 80 | 90 | 80 | 100 | 70 | 100 | 80 | 70 |
| வெண்டி | 120 | 80 | 100 | 100 | 120 | 100 | 70 | 120 |
| போஞ்சி | 80 | 80 | 70 | 120 | 80 | 120 | 70 | 120 |
| லீக்ஸ் | 80 | 120 | 100 | 100 | 70 | 160 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 50 | 50 | 40–50 | 40 | 40 | 35–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 55 | 60 | 70 | 60 | 60 | 45 | 120 |
| தேசிக்காய் | 100 | 60 | 70 | 80 | 60 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 220 | 240 | 180 | 200 | 200 | 180 | 200 |
| இராசவள்ளி | 120 | 100 | 160 | 100 | 140 | 120 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 700 | 350 | 700 | 600 | 400 | 500 |
| பனங்கிழங்கு | 04 | 02 | 04 | 02 | 05 | – | 2.50 | 03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்டேரா பிரான்ட்ஸ் சிறிலங்கா அமைக்கும் பயிற்சிப் பண்ணை

பொன்டேரா பிராான்ட்ஸ் சிறிலங்கா நிறுவனம், உள்நாட்டுப் பால் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்காக தனது நிறுவனத்தின் நீண்டகால முதலீட்டின் ஒரு அங்கமாக முதல் செயல்முறை விளக்கப் பயிற்சிப் பண்ணையை நிறுவுவதாக அறிவித்துள்ளது.

38 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் இயங்கி வரும் டெய்ரி கோப்பரேடிவ் கடந்த இரண்டு வருடங்களுக்கு மட்டும் உள்நாட்டுப் பால் உற்பத்தியின் அபிவிருத்திக்காக 380 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது. மேலும் அதன் பங்காளர்களுடன் இணைந்து செயற்பட்டு, பால் சேகரிப்பை அதிகரித்து, பாலின் தரத்தை மேம்படுத்தி, பாற் பண்ணை யாளர்களின் வருமானத்தை கூட்டுவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன் னெடுக்க அர்ப்பணிப்புடன் உள்ளது.



பொன்டேரா பிரான்ட்ஸ் சிறிலங்கா நிறு வனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் லியோன் கிளமன்ட் கூறும் போது, இலங்கையின் பால் உற்பத்தித் துறையில் சாதகமான மாற் றங்கள் ஏற்பட்டுள் ளதை நாம் காண்கின்றோம். அரசானது பசு மாடு மரபணு இறக்கு மதி செய்தல் மற்றும் பால் பண்ணையாளர்களுடன் இணைந்து செயல்படுதல் ஊடாக பால் உற்பத்தி துறையில் அர்த்தமுள்ள மாற்றங்களை மேற்கொண்டு வருகின்றது.

எனவே பால் உற்பத்தி நடவடிக்கைகளையும், கால் நடை நலப்பராமரிப்பையும் மேம் படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சிக்கான முதலீடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு, இந்த மாற்றத்திற்கு வலுச்சேர்க்க எம்மால் முடியும் என நாம் நம்புகின்றோம். என்றார்.

117 மில்லியன் ரூபா செலவில் பன்னல எனும் இடத்தில் முதல் செயல்முறை விளக்கப் பாற்பண்ணையை நிறுவி அதனை செயல்படுத்துவதே இந்த அர்ப்பணிப்பின் அடுத்த கட்ட மைல் கல்லாகும்.

பொன்டேரா பிரான்ட்ஸ் சிறிலங்காவானது உள்நாட்டு பால் உற்பத்தித் துறை யின் வளர்ச்சிக்காக அதன் முதலீடுகளைத் தொடர்ச்சியாக அதிகரிக்கும்.

மேலும் 2017ம் ஆண்டளவில், பால் பண்ணையாளர்களுடன் இணைந்து செயற்பட்டு சிறந்த பயிற்சிகளை வழங் கும் விநியோகத் தொடர்பு அதிகாரிகளை 20 இலிருந்து 40 ஆக அதிகரிக்கவும், புதிய 5 பாற் குளிர்விக்கும் நிலையங்களை நிறுவவும் எதிர்பார்த்துள்ளது. இந்த நடவடிக்கையால் பொன்டேரா பிரான்ட்ஸ் சிறிலங்காவுக்கு பால் விநியோகம் செய்ய மேலதிகமாக 2000 பால் பண்ணையாளர்களுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதுடன், நாடு முழுவதும் பரந்திருக்கும் பாற்பண்ணையாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும் உதவும். பன்னல செயல்முறை விளக்கப் பயிற்சிப் பண்ணையானது இம்மாத இறுதியில் செயற்படத் தொடங்கும்.

இதில் நிர்வாக முகாமையாளர், கால்நடை பராமரிப்பு நிபுணர்கள் மற்றும் ஏனைய பால் உற்பத்தி தொடர்பான பணிகளுக்குப் பணியாளர்கள் உள்வாங் கப்படுவார்கள். ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 2000 பாற் பண்ணையாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும். 180 நாட்கள் பயிற்சிக்காக ஒதுக்கப்படும். (தி)

**வணிகம்**

# செறிவூட்டப்பட்ட கோதுமை மா அறிமுகப்படுத்தியது '7 ஸ்டார்'



தேசத்துக்கு ஊட்டமளிக்கும் நிறுவனத்தின் நீண்ட கால அர்ப்பணிப்பின் ஓர் அங்கமாக இலங்கைச் சந்தையில் முதன் முறையாக செறிவூட்டப்பட்ட கோதுமை மாவை Serendib Flour Mills (SFML) அண்மையில் அறிமுகப்படுத்தியது.

SFML இன் செறிவூட்டப்பட்ட கோதுமை மா என்பது நிறுவனத்தின் 7 ஸ்டார் வகையின் ஒரு அங்கமாகும். இரும்புச் சத்து மற்றும் போலிக் அமிலம் போன்ற அத்தியாவசிய உயிர்ச்சத்துக்களை உள்ளடக்கிய இலங்கையில் கிடைக்கும் ஒரேயொரு கோதுமை மாவாக இதுவுள்ளது.

இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கான ஆரோக்கியமான மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த தெரிவாகவும் இது உள்ளது. 1 கி.கி, 5 கி.கி மற்றும் 750 கி. பொதிகளில் இந்த கோதுமை மா சந்தையில் கிடைக்கின்றது.

இலங்கையில் மூன்றில் ஒரு சிறுவர்களும், நான்கில் ஒரு பெரியவர்களும் இரும்புச்சத்துக் குறைபாடான குருதித்சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் மிகவும் சிக்கலான நுண்ணூட்டச்சத்து குறைபாடாக கருதப்படுகின்றது. FMCG அறிக்கைக்கு அமைய, குருதிச் சோகையானது பிரதானமாக இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படுவதுடன், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் 40 வீதமான பாடசாலைச் சிறுவர்களையும், இரண்டில் ஒரு கர்ப்பிணியையும் இது தாக்குகின்றது. இலங்கையில் ஆரோக்கியமான SFML உற்பத்திகளுக்கான தேவை அதிகரித்து வருவதை அடையாளம் கண்டு, தேசிய ஊட்டச்சத்து முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிப்பதற்கு, உயர்தரத்தில் ஊட்டச்சத்து ரீதியாக பரவலாக்கப்பட்ட மாவுக்கான அணுகும் வசதியை நுகர்வோருக்கு வழங்குவதற்கு SFML ஆனது செறிவூட்டப்பட்ட மாவை அறிமுகப்படுத்தியுள்ளது.

உள்ளூர் சந்தைக்கு செறிவூட்டப்பட்ட கோதுமை மாவை இலங்கையில் அறிமுகப்படுத்திய முதல் நிறுவனம் என்பதில் நாம் மிகுந்த பெருமை கொள்கின்றோம். அமெரிக்கா, ரஷ்யா, கனடா, ஆஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்த கோதுமை தானியங்கள் கொழும்பு துறைமுகத்தில் உள்ள எமது ஆலை வசதியில் அரைத்து கோதுமை மா ஆக்கப்படுகின்றது. எமது நுகர்வோர் மற்றும் நாட்டின் தேவைகளை SFML ஆனது தொடர்ந்து பகுப்பாய்வு செய்து, அந்தத் தேவைகளை எட்டுவதற்கான புதிய உற்பத்திகளை நாம் வழங்குகின்றோம். நாடொன்றின் ஊட்டச்சத்து மூலோபாயத்தின் ஒரு அங்கமாக செறிவூட்டல் காணப்படுகின்றது. யுனிசெப் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற உலக நிறுவனங்களும் இதற்கு ஆதரவளிக்கின்றன. சுவை மற்றும் தரத்திலும், அவர்களது ஊட்டச்சத்துசார் தேவைகளிலும் நுகர்வோரின் பல் வகைப்பட்ட கோதுமை மா தெரிவுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் உற்பத்திகளை வழங்கும் துறையாகத் திகழ நாம் எப்பொழுதும் முயற்சி செய்கின்றோம்.

சிறந்த ஊட்டச்சத்துடன் சந்தையில் மிகச்சிறந்த கோதுமை மா உற்பத்திகளுக்கான அணுகும் வசதியை எமது நாட்டு மக்களுக்கு உறுதி செய்வதே எமது பிரதான இலக்காக எப்போதும் இருந்தது என இலங்கையில் கிடைக்கும் செறிவூட்டப்பட்ட கோதுமை மா குறித்து கருத்து வெளியிட்ட SFML இன் சந்தைப் படுத்தல் மற்றும் விரிவாக்கல் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் திரு. காளிங்க விஜேசேகர தெரி வித்தார்.

இறுதி உற்பத்தியின் ஊட்டச்சத்து உள்ளடக்கத்தை பரவலாக்குவதற்கு அரைத்தல் செயற்பாட்டின் போது கோதுமை தானியங்களில் உயிர்ச்சத்துக்கள், தாதுப் பொருள்களை சேர்த்தல் கோதுமை மா செறிவூட்டல் எனப்படும். ஊட்டச்சத்து குறைவு குருதிச் சோகையை செறிவூட்டப்பட்ட உற்பத்திகள் தடுக்கின்றன. நரம்புக் குழாய் பிறப்புக் குறைபாடுகளையும், பிறக்கும் குழந்தைகளில் அபிவிருத்திசார் குறைபாடுகளையும், சோர்வு மற்றும் குறைந்த நோயெதிர்ப்புத் திறன் போன்ற வேறு பல சுகாதார பிரச்சினைகளையும் அது தடுக்கின்றது. நீண்ட கால செயற்பாட்டில், செறிவூட்டப்பட்ட உற்பத்திகள் ஒட்டுமொத்த சுகாதாரம் மற்றும் நலனை மேம் படுத்துவதற்கு உதவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## ஒரு பில்லியன் பயனாளரை உள்ளீர்த்துள்ள வட்ஸ் அப்

முக நூலின் வட்ஸ் அப் தனது பில்லியனாவது பயனரை எட்டிவிட்டதாக அறிவித்திருக்கிறது.


முக்கிய மைல்கல் ஒன்றை தாம் எய்தியிருப்பதாக பேஸ்புக் கூறியிருக்கிறது.


2014 ஆம் ஆண்டு 22 பில்லியன் டொலர்கள் கொடுத்து வட்ஸ் அப் ஐ முக நூல் வாங்கியது. தான் வாங்கியபோது இருந்த பயனர்களின் எண்ணிக்கையை இப்போது அது இரட்டிப்பாக்கி இருக்கிறது.

உலகில் யார் எங்கிருந்தாலும் தன் குடும்பத்தோடும் நண்பர்களோடும் இலவசமாகத் தொடர்பில் இருப்பதற்கான இலகுவான வழியை வாட்ஸ் அப் வழங்கி வருவதாக அதன் வலைப்பதிவுச் செய்தி தெரிவிக்கிறது.

இது தன் வருமான ஈட்டத்திற்கான புதிய திட்டங்களைத் தற்போது முன் வைக்கத் திட்டமிட்டிருக்கிறது. வியாபார மற்றும் அமைப்புக்களின் பயன்பாட்டிற்கான புதிய இணைப்புக்களை வட்ஸ் அப் இல் ஏற்படுத்த அது திட்டமிட்டுள்ளது. (த)

## விண்வெளியில் ஈர்ப்பு விசை அலைகள் கண்டுபிடிப்பு





இயற்பியல் விஞ்ஞானி ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வில், விண்வெளியில் ஈர்ப்பு விசை அலைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளாக பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் இந்திய விஞ்ஞானிகள் காலவெளியில் இருக்கும் ஈர்ப்பு விசை குறித்த ஆய்வை மேற்கொண்டனர்.

அதில், விண்வெளிப் பாதையில் உள்ள இரண்டு கரும்புள்ளிகள் இணைவதன் மூலம் ஈர்ப்பு அலைகள் அல்லது சிற்றலைகள் தோன்றுகின்றன. இவைகள் அரை ஒளிவேகத்தில் ஒன்றுடன் ஒன்று இணைகின்றன என கண்டு பிடித்துள்ளனர்.

பூமியில் இருந்து 1.5 பில்லியன் ஒளிஆண்டுகளுக்கு அப்பால் இந்த ஈர்ப்பு விசை இருப்பது தெரிய வந்துள்ளது.

இந்தப் புதிய கண்டுபிடிப்பின் மூலம் அண்டம் தோன்றிய விதம் குறித்து ஆய்வு மேற்கொள்ளவும், பிரபஞ்சத்தின் தோற்றத்தில் மறைந்துள்ள பல மர்மங்களைக் கண்டறியவும் இது துணை நிற்கும் எனக் கூறப்படுகிறது. இதேபோல் செயற்கைக் கோள் ஆய்வுகளின் போது புவியில் இருந்து ஏற்படும் ஒலி போன்ற இடையூறுகளைக் கடந்து ஆய்வுகளை எளிதில் மேற்கொள்வதற்கும் இந்த ஈர்ப்பு அலைகள் பயன்படும் எனவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (த)

## எமக்குரிய

தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன். சிங்கள ஊடகமான 'திவயின' வார இதழுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதன் போது, இரா.சம்பந்தன் மேலும் கூறியுள்ளதாவது:-

நாடு கடந்த ஒரு தசாப்த காலமாக சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டு – ஒதுக்கப்பட்டிருந்தது. போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஜெனிவா இணக்கப்பாட்டின் அடிப்படையில் தற்போது இலங்கை மீண்டும் சர்வதேச கௌரவத்தை பெற்றுள்ளது.

இது தொடர்பாக அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதான நியாயமான விசாரணை நடத்தப்படுவதன் ஊடாக மட்டுமே இலங்கை தனது கௌரவத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ள முடியும். வெளிநாட்டு நீதிபதிகளைப் பயன்படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபாலவே தீர்மானிக்க முடியும். நாம் அனைவரும் இலங்கையர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இனத்துவ ரீதியில் தனித்துவமானவர்கள். அதன் காரணமாக தமிழர்களுக்கு தனியான பிரதேச சுயாட்சி வேண்டும். அதற்கு ஈடான அதிகாரத்தை ஏனைய சிங்களப் பகுதிகளுக்கும் வழங்குவதில் தவறில்லை.

அந்நியர் இந்த நாட்டை ஆக்கிரமிக்க முன்னர் கண்டி இராச்சியம், கரையோர இராச்சியம், தமிழர் இராச்சியம் என மூன்று தேசங்களாக ஆளப்பட்டிருந்தது. 1833 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஒட்டு மொத்த நாட்டையும் ஒரே தேசமாக மாற்றி அமைத்தனர். அதன் பின்னர், இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்படும் போது, தமிழரின் நாடும் சிங்களவரின் கையில் கையளிக்கப்பட்டு விட்டது. அதனையே இப்போது நாங்கள் திருப்பிக் கேட்கின்றோம். சமஷ்டி அடிப் படையிலான தீர்வின் மூலமாக நாங்கள் தொடர்ந்தும் சிங்களவருடன் சேர்ந்து வாழவே விரும்புகின்றோம் – என்றார். (த-வ-5)

## அரசியல்

தமிழ் அரசியல் கைதிகளில் குற்றச்சாட்டு சுமத்தப்படாமல் எவருமே இல்லை என்று நான் தெரிவித்ததாக ஓர் ஊடகத்தில் செய்தி வெளியாகியிருந்தது. அது தவறான செய்தி. 11 பேர் குற்றச்சாட்டு சுமத்தப் படாமல் இன்னமும் இருக்கின்றனர்.

குற்றச்சாட்டு சுமத்தப்படாமல் இருப்பவர்கள், வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பவர்கள், தண்டனை பெற்றவர்கள் என்று தமிழ் அரசியல் கைதிகளை மூன்று கட்டமாகப் பிரிக்க முடியும். இதில் குற்றச்சாட்டு சுமத்தப்படாமல் இருப்பவர்களைப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. முதல்கட்டமாக 39 பேரும் பின்னர் 8 பேரும் விடுவிக்கப்பட்டனர். தற்போது 11 பேர் இன்னமும் இருக்கின்றனர். ஒரு சிலரைத் தவிர ஏனையோரை பிணையில் விடுவிப்பதாக' அரசு தெரிவித்திருந்தது.

நீதிமன்ற விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பவர்கள் மீதான வழக்குகளை மீளப் பெறுவது தொடர்பில் சட்டமா அதிபரே நடவடிக்கை எடுக்க முடியும். கடந்த ஜனவரி 9 ஆம் திகதிக்குப் பின்னர் சட்டமா அதிபர் இல்லாத நிலை இருந்தது. கடந்த வாரம் தான் சட்டமா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். எனவே அவருடன் இந்த வாரம் பேச்சு நடத்தவுள்ளோம்.

தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் தொடர்பில் முடிவு எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மாத்திரமே உள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால, தன்னைக் கொலை செய்ய வந்ததாக தண்டணை வழங்கப்பட்ட அரசியல் கைதியை மன்னிப்பளித்து விடுதலை செய்திருந்தார்.

ஏனையோர் தொடர்பிலும் அவர்தான் முடிவெடுக்க முடியும். தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவர் தொடர்பிலும் ஜனாதிபதி விவரங்களைக் கோரிப் பெற்றிருக்கின்றார். தனது ஆலோசகர்களுடன் இது தொடர்பில் ஜனாதிபதி ஆராய்ந்து வருகின்றார். அவர்களையும் விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் கூட்டமைப்பு பேச்சு நடத்தும் – என்றார். (த-வ-5)

## இன நல்லிணக்க

செய்துகொண்டார்.

அதன்பின்னர், தான் ஆளுநராக நியமிக்கப்பட்டது குறித்தும், தனது வேலைத் திட்டங்கள் பற்றியும் விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கருத்துரைக்கையில்:-

எனது அரசியல் பயணத்தின் போது, ஒரு போதும் இனவாதம் பேசியது கிடையாது. மதவாதமும் என்னிடமில்லை. இவற்றுக்கு எதிராக குரல் எழுப்பியவன் நான். இதற்காக பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தேன். என்னை ஒடுக்குவதற்கு முற்பட்டனர். வீடு தாக்கப்பட்டது. இப்படி பல நெருக்கடிகளை சந்தித்திருந்தாலும் கொள்கை மாறாது செயற்பட்டேன்.

இதன் காரணமாகத்தான் இன்று எனக்கு முக்கிய பதவியொன்று ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குரிய முயற்சிகள் இடம் பெற்றுவருகின்றன. ஓர் ஆளுநர் என்ற அடிப்படையில் அதற்குரிய முழு ஒத்துழைப்புகளையும் வழங்குவேன். வடக்கு மக்களையும் இணைத்துக்கொண்டு நல்லிணக்கப் பயணத்தை சிறப்பாக ஆரம்பிப்பதே எனது நோக்கமாகும்.

அத்துடன், மேல்மாகாண முதலமைச்சராக பணியாற்றிய எனக்கு, மக்களின் பிரச்சினைகளுக்கு எப்படி தீர்வு காண வேண்டும் என்பது தெரியும்.

எனவே, வடக்கு மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்குப் பாடுபடுவேன். சகல தமிழ்ப் பிரதிநிதிகளுடனும் இணைந்து செயற்படுவேன். எதற்காக இந்தப் பதவிக்கு ஜனாதிபதி என்னைத் தெரிவுசெய்தாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவேன்.

வடக்கு மாகாணத்திற்காக, மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 40 சதவீதம் மாத்திரமே கடந்த காலங்களில் செலவீடு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 60 சதவீத நிதி திறைசேரிக்கு திருப்பி வழங்கப்பட்டன.

இனிவரும் காலங்களில் அவ்வாறு நிதி திரும்புவதற்கான சந்தர்ப்பத்துக்கு இடமளியேன். வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கீடு செய்யப்படும் முழுமையான தொகையை அபிவிருத்திப் பணிகளுக்கு செலவிட எண்ணியுள்ளேன்–என்றார். (த-வ-சி)

## 12000

தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரண வக்க.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன் றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதன் போது, அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

இலங்கையின் போர்க்குற்ற விசாரணை பொறிமுறையில் சர்வதேச பங்களிப்பினை தீவிரமாக எதிர்ப்போம்.

போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறும் பட்சத்தில் புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்ட 12 ஆயிரம் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களையும் மீண்டும் கைதுசெய்யுமாறு அரசைக் கோருவோம்.

அரசு, அதனைச் செய்யாவிடின் படையினருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும். இதனைச் செய்யாவிடின் நல்லிணக்க முயற்சிகள் மிக மோசமாக பாதிக்கப்படும்.

எனினும் எமது கட்சி காணமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை ஏற்படுத்துவதையும் உடலகம ஆணைக்குழுவின் ஆலோசனைப்படி சான்றிதழ் வழங்குவதையும் ஆதரிக்கின்றது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களையும் கட்சி ஆதரிக்கின்றது,

ஆனால் அதனால் பொதுமன்னிப்பை வழங்கமுடியுமா என்ற கேள்வி முக்கியமானது. அடுத்தது மதத்தலைவர்களின் கருணைப் பேரவை தொடர்பானது. ஆனால் வடக்கில் மத சுதந்திரம் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும்.–என்றார்.

இதேவேளை, கடந்த பொதுத் தேர்தலின் பின்னரும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, முன்னாள் போராளிகளிடமும் விசாரணை செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தார் எனபது குறிப்பிடத்தக்கது. (வ-5)

## வாள்வெட்டு

நிலையில் வீட்டிலிருந்த சிறுமி அதிர்ச்சியடைந்து மயங்கி விழுந்துள்ளார்.

அத்துடன், அந்த ஆயுதக்குழு தாம் துரத்திச் சென்ற குடும்பஸ்தர் தப்பியோடியதால், அவரது மோட்டார் சைக்கிளையும் எடுத்துச் சென்றுள்ளது. இது தொடர்பில் பொலிஸ் விசாரணையின்போது மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நவாலியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படும் குடும்பஸ்தர் சிறுவன் ஒருவருடன் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். அவர் யாழ்ப்பாணம் சென்று வீடு திரும்பும் போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நேரம் குடும்பஸ்தரை மோட்டார் சைக்கிளில் ஆயுதக் கும்பல் ஒன்று துரத்திச் சென்றுள்ளது. அந்த அடாவடிக் கும்பல் அவ்வாறு துரத்தித் தாக்கியதாலும் அவர் காயமடைந்த நிலையில் தனது மோட்டார் சைக்கிளையும் நிலத்தில் போட்டு விட்டு, அந்தப் பகுதியிலிருந்த வீடு ஒன்றின் மதில் பாய்ந்து பின்னர் அதன் பின்புறமாகச் சென்று தப்பியோடி மறைந்து கொண்டார்.

ஆனால் அவரைத் துரத்திச் சென்ற அந்தக் கும்பல், அவர் முதலாவதாக மதில் பாய்ந்து சென்ற வீட்டுக்குள் நுழைந்து, தாம் துரத்திச் சென்றவரைத் தேடி அடாவடியில் ஈடுபட்டுள்ளது. அதனால் அந்த வீட்டிலிருந்து வர்கள் அலறி பயந்து அச்சத்தில் உறைந்துவிட்டனர்.

இதனைக் கண்டு அதிர்ச்சி யடைந்த அந்த வீட்டுச்சிறுமி அழுது குளறி மயங்கி விழுந்து விட்டார்.

அதன்பின்னர், அந்த வீட் டுக்கு வெளியே சென்ற அந்தக் கும்பல் தப் பியோடியவரது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முதலில் மானிப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர். பின்னர் அந்த இடம் சுன்னாகம் பொலிஸ் பிரிவு என்பதனால் சுன்னாகம் பொலிஸார் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

குறித்த ஆயுதக்கும்பலில் நவாலியைச் சேர்ந்த ஒருவர் உட்பட்ட குழுவினர் அடங்கியுள்ளனர் என்று அங்கு நின்றவர்களால் கூறப்படுகிறது. சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்றிரவு கைதடி கிழக்குப்பகுதியில் இளைஞர்களை வெட்ட முற்பட்ட கும்பலை மக்கள் துரத்தியடித்தனர். மோட்டார் சைக்கிளில் வாளுடன் வந்த 15 பேர் கொண்ட கும்பல் ஒன்று அந்தப் பிரதேச இரு இளைஞர்களை வெட்ட முற்பட்ட போது, ஒன்று கூடிய பொதுமக்கள் துரத்திய நிலையில் அவர்கள் தமது மோட்டார் சைக்கிளில் ஒன்றை போட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டனர். இவர்கள் கைதடியில் இடம்பெற்ற பல வாள் வெட்டுச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தை அறிந்த சாவகச்சேரிப் பொலிஸ் பொறுப்பதிகாரி, உடனடியாக குறித்த இடத்திற்குச் சென்று சம்பந்தப்பட்ட கும்பலை கைது செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்.

கடந்த வருடம் சுன்னாகம் பொலிஸ் பிரிவில் வாள் வெட்டு அதிகரித்த நிலையில் அவற்றை விசேட பொலிஸாரைக் கொண்டு அடக்குமாறு, பொலிஸ் உயர் அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பித்திருந்தார் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.

அத்துடன், மேலதிகமாக விசேட அதிரடிப் படையினரையும் கடமையில் ஈடுபடுத்துமாறும் நீதிபதி குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-4,288)

## அரசமைப்புக்குக்

ணத்துக்கான அமர்வு 5 ஆம் திகதி வவுனியாவில் ஆரம்பமாகியது. தொடர்ந்து கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவில் அமர்வுகள் இடம் பெற்றன.

இதன் போது, தமிழ் மக்கள் தமது கருத்துக்களை முன் தெரிவித்திருந்தனர். தென் பகுதியில் பெரும்பான்மையின மக்கள் பங்கேற் புடன் ஒப்பிடுகையில் இது குறைவானது என்று கருத்தறியும் குழுவின் உறுப்பினர் கள் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, மக்கள் கருத்தறியும் குழுவின் வடக்கு மாகாணத்துக்கான கடைசி அமர்வு யாழ்.மாவட்டத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. யாழ்.மாவட்டச் செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு இந்த அமர்வு ஆரம்பமாகவுள்ளது. தமிழ் மக்களை இதில் பங்கெடுத்து தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கு வடக்கு மக்களின் கருத்துக்கள் மிகவும் அவசியம் எனக் குறிப்பிட்டுள்ள மக்கள் கருத்தறியும் குழுவின் சட்டத்தரணி லால் விஜயதுங்க, யாழ்ப்பாணத்தில் இன்றும் நாளையும் இடம்பெறும் அமர்வில் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைக்குமாறு அழைப்புவிடுத்துள்ளார்.

(த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### மேரியோசேப் யேசுரட்ணம்

(கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை - பாதுகாப்பு உத்தியோகத்தர்)



புனித யாகப்பர் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும், கணேஸ்வரம், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி யோசேப் யேசுரட்ணம் நேற்று (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மேரியோசேப் - வெரோணிக்கா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் வள்ளிநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரபிரபாவின் அன்புக் கணவரும், அஸ்வின் வில்லியத்தின் (மாணவன்- அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை) பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.02.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கணேஸ்வரம்,** **தகவல்:**
**அளவெட்டி.** (69310)(11,18) **குடும்பத்தினர்.**

### அருளானந்தம் எட்வேட் றமேஸ்குமார்
### (வாகனசாரதி)



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் எட்வேட் றமேஸ்குமார் 13.02.2016 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அருளானந்தம் காலஞ்சென்ற விக்ரோறியா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற கணபதி கோபால் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சுகந்தினியின் (கோமதி) பாசமிகு கணவரும் சரோமி(நல்லாயன் மகளிர் வித்தியாலயம் - கொழும்பு), சரோன்(லாசியாஸ் கல்லூரி - கொழும்பு), அங்கிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிறிஸ்ரி (பிரான்ஸ்), ஜோஜ், ஜெஸி ஆகியோரின் அருமைச் சகோதரனும் மோகனராஜ்(லண்டன்), மகேந்திரராஜ், கலா, வேணி ஆகியோரின் மைத்துனரும் டினேஸ், கீர்த்தி, யது, யஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.02.2016) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அன்னாரின் வாகையடி வீதி, மட்டுவில் தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்து வரப்பட்டு கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வாகையடி வீதி,** **தகவல்:**
**மட்டுவில் தெற்கு.** **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண

சபை உறுப்பினராகவும் பின்னர் முதலமைச்சராகவும் பதவி வகித்தார். அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகி ஆரம்பத்தில் பிரதி அமைச்சராகவும் பின்னர் அமைச்சராகவும் பதவி வகித்த ரெஜினோல்ட் கூரே, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராவார்.

**இதேவேளை, வடக்கு மாகாண ஆளுநராகப்பதவி வகித்த ஏச்.எம்.ஜி.எஸ்.பளிகக்காரா, இன்றுடன் பதவி விலகிச்** செல்வதனை முன்னிட்டே புதிய ஆளுநராக, ரெஜினோல்ட் கூரே நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக ரெஜினோல்ட் கூரே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இந்த நிலையில்,அவர் தனது கடமையை நாளை செவ்வாய்க்கிழமை ஏற்றுக் கொள்வார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (வ-5)

## வடக்கு


எனத்தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப் படும்அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராயப்படுமெனக் குறிப்பிடப்பட்டது.

குறிப்பாக, வடக்கு-கிழக்கு அபிவிருத்தி தொடர்பான சர்வதேச மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் நடத்த அரசு திட்டமிட்டுள்ள நிலையில்,அதற்கான முன்னேற்பாடுகளை பிரதமர் மேற்கொண்டு வருகின்றார்.அதன் ஓர் அங்கமாகவே இன்றைய கூட்டம் அமையும் எனப்பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன. (வ -101)

## மரண அறிவித்தல்

### அருளம்மா அருளப்பு



பலாலி செபஸ்தியார் வீதியைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பு பற்றிமா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்மா அருளப்பு 13.02.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுமுத்து - விக்ரோறியா தம்பதியரின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்ற அருளப்புவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, பெனடிக்ற், பேரின்பம் மற்றும் வின்சன், செபஸ்தியாம்பிள்ளை (குஞ்சு), ராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் மாகிறேற், விமலா, குமார் ஆகியோரின் மைத்துனியும், லில்லி, ரதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சேகர், ரஞ்சன் ஆகியோரின் மாமியாரும், றொஜர், றொசானி, றோசன், நிறோ லொய்ஸ், றொய்ஸ், ஜொய்ஸ்,ரெறோமி ஆகியோரின் பேர்த்தியும், றொசானா, றிகானா, ஸ்ரெபானா ஆகியோரின் பூட்டியும், செல்வா, ஜீன், மமான்ஸ்,பெனற், நிறோஜன், செருஜா, கிறிஸ்ரி, ஏஞ்சல் ஆகியோரின் மாமியாரும் உதயன், சரீனா ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (15.02.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித பற்றிமா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பண்டத்தரிப்பு.** (69315) (11,18,20) **தகவல்:குடும்பத்தினர்.**

**021 205 1926, 077 656 9105**

## மரண அறிவித்தல்

### இளையதம்பி அருளம்பலம் சோமசுந்தரம்

*[ஓய்வுநிலை பிரதம எழுதுவினைஞர் - யாழ் போதனா வைத்தியசாலை]*

**பிறப்பு** 23 . 05 . 1932



**இறப்பு** 14 . 02 . 2016

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், நாவற்குழி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இ.அ.சோமசுந்தரம் நேற்று (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - தங்கம் தம்பதியின்ரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் (மகேஸ்வரி) அன்புக்கணவரும் காந்தி, கஸ்தூரி, காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலரஞ்சன், சிவா (கிராம அலுவலர்- J/26, புங்குடுதீவு தெற்கு), துஸ்யந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் சந்திரிக்கா, சீராளன், அட்சயன்,அஷ்சயா, அம்சயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.02.2016 புதன் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்குழி மேற்கு,
கைதடி. (69316) (15,17)

**தகவல்: மருமகன்**
**செ.சிவா (கிராம அலுவலர் J/26)**

## மரண அறிவித்தல்

### திருமதி கோமேஸ்வரி துரைசிங்கம்



திருநெல்வேலி காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வண். மேற்கு, பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோமேஸ்வரி துரைசிங்கம் 13.02.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், கிருத்திகா, கிருசாந், துஷாந், யானுஷாந், தனுஷாந் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சி.69314) (13.18.17)

# மரண அறிவித்தல்

## திருமதி நகுலேஸ்வரி சுப்பிரமணியம்



**தோற்றம்** 14.04.1931 **மறைவு** 12.02.2016

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி சுப்பிரமணியம் 12.02.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் இராஜயோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌரிதேவி (ஆஸ்திரேலியா), சந்திரகுமார் (கொழும்பு), சுபதாசன் (ஆஸ்திரேலியா), சுமிதா (கோண்டாவில்), சுதர்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற வள்ளிமணாளன், சித்திரா (ஆஸ்திரேலியா), விக்னராஜா (கோண்டாவில்), மாலகுமாரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களான தக்சாயினி, காயத்திரி, புவனா, பிரகதீஸ், சுகாஸன், சுகானன், நிருஷா, பிரவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களான மகிபனா, மகிஜனா, சிகாஸ், சிராஸ்னா, சிராஸ், அபிஷா, நிகாஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ந.விக்னராஜா (விக்னா)**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**
**தொ.பே. 021 205 3967** (69318) (15,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதியாகும் வாய்ப்பு தமிழருக்கு



நீண்டகாலமாகப் பதவியிலிருந்த அமெரிக்க உச்சநீதிமன்ற பழைமைவாத நீதிபதி ஆண்டொனின் ஸ்கேலியா சாவடைந்தமையை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பாகத் தேர்தலில் போட்டியிடும் ஆறு வேட்பாளர்களுக்கும் இடையே ஒரு மோதல் வெடித்திருக்கிறது.

அடுத்த நீதிபதி நியமனம் குறித்து வொஷிங்டனில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நீதிபதியாக பரிந்துரைக்கப்பட்டிருக்கும் பெயர்களில் இந்தியாவில் பிறந்த தமிழரான ஸ்ரீகாந்த் ஸ்ரீநிவாசனின் பெயரும் உள்ளது. இந்த நிலையில், அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதியாக ஸ்ரீகாந்த் நியமிக்கப்படுவாரா என்ற எதிர்பார்ப்பு தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

நீதிபதி ஸ்கேலியா மேற்கு டெக்ஸாஸில் வேட்டையாடச் சென்றிருந்தபோது, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உறக்கத்திலேயே உயிரிழந்தார்.

79 வயதான ஸ்கேலியா முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரேகன் ஆட்சியில் 1986 ஆம் ஆண்டு நீதிபதியாக நியமிக்கப்பட்டார். (அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதிகள் இறக்கும் வரை பதவியில் இருக்கலாம் என்பது அமெரிக்கச் சட்டம்).

காலஞ்சென்ற நீதிபதிக்கு அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி ஒபாமா, அவருக்குப் பதிலாக புதிய நீதிபதியை நியமிக்கப்போவதாக அறிவித்திருக்கிறார். இது அவரது எதிர்க் கட்சியான குடியரசுக்கட்சியின் எதிர்ப்பைத் தூண்டியிருக்கிறது. புதிய நீதிபதியை நியமிக்க தனக்கும், அவரை விசாரித்து அவரது நியமனத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த செனட்டுக்கும் ஏராளமான காலஅவகாசம் இருப்பதாக ஒபாமா கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னோட்டமான பிரதான கட்சிகளின் ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளர் தேர்வுக்கான கட்சி பிரைமரிகள் நடந்துகொண்டிருக்கும் தற்போதைய சூழலில், இந்த நீதிபதியின் மறைவு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தனது பதவிக்காலம் முடிவடைய இன்னும் 11 மாதங்களுக்குக் குறைவான காலத்தையே கொண்டிருக்கும் ஜனாதிபதி ஒபாமா, உச்சநீதிமன்ற நீதிபதியை நியமிப்பதைத் தடுக்க அமெரிக்க செனட்டில் உள்ள குடியரசுக் கட்சியினர் திட்டமிடுவார்கள்.

உச்சநீதிமன்றத்தில் இருக்கும் மொத்தம் ஒன்பது நீதிபதிகளில் தற்போது நான்குபேர் தாராளவாதக் கொள்கைகளை உடையவர்கள். நான்கு பேர் பழைமைவாதக் கொள்கைகளைக் கொண்டிருப்பவர்கள். (ஐந்தாவது பழைமைவாத நீதிபதி, தற்போது இறந்த ஸ்கேலியா). எனவே, தற்போது வெற்றிடமாகும் ஓர் இடத்தை ஒரு தாராளவாதக் கொள்கையுடையவரை நியமித்து நிரப்பினால் உச்சநீதிமன்றம், அமெரிக்காவின் பெரும் சமூகப் பிரச்சினைகளில் சற்று மிதவாதப் போக்கைக் கடைப்பிடிக்கும் என்று கருதப்படுகிறது.

ஒபாமாவின் தேர்வு ஒரு தமிழரா?

அடுத்த நீதிபதி நியமனம் குறித்து வொஷிங்டனில் எதிர்வரும் வாரங்களில் பெரும் முயற்சிகள் நடக்கலாம்.

உச்சநீதிமன்றத்துக்கு அடுத்த மட்டத்தில் இருக்கும் மாகாண சர்க்கியூட் நீதிமன்ற நீதிபதிகளிலிருந்தே பெரும்பாலும் உச்சநீதிமன்றத்துக்கு நீதிபதிகள் பிரேரிக்கப்படுவது வழக்கம்.

இந்த முறையை ஒபாமா தற்போது பின்பற்றினால், நீதிபதியாக பிரேரிக்கப்படவிருக்கும் பெயர்களில் இந்தியாவில் பிறந்த தமிழரான ஸ்ரீகாந்த் ஸ்ரீநிவாசனின் பெயரும் ஒன்று.

ஸ்ரீகாந்த் அல்லது ஸ்ரீ ஸ்ரீநிவாசன் கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் பணியாற்றுகிறார். கடந்த 2013ஆம் ஆண்டில் அவர் கொலம்பியா நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தமிழகம் திருநெல்வேலி மாவட்டத்தைப் பூர்விகமாகக் கொண்டவர் . ஒபாமாவால் இவர் நியமிக்கப்பட்டால், அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவிவகித்த பெருமையும் தமிழர்களைச் சாரும்.

---

## இன்றுடன்

ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் இன்றுடன் நிறைவடைகின்றது.

இந்தநிலையில், தமது பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்குமாறு, பரணகம குழு ஜனாதிபதியிடம் விடுத்துள்ள கோரிக்கைக்கு இன்னும் ஒப்புதல் வழங்கப்படவில்லை.

எனினும், ஜனாதிபதியிடமிருந்து இன்றைய தினம் சாதகமான பதில் கிடைக்கும் என தாம் நம்புவதாக ஆணைக்குழுவின் செயலாளர் நேற்று 'உதயனிடம்' தெரிவித்தார்.

தான் நியமிக்கும் ஆணைக்குழுவொன்றின் பதவிக்காலத்தை நீடிப்பதா அல்லது அதை கலைப்பதா என்பது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கிறது.

அந்தவகையில், பரணகம குழுவுக்கு அவர் பதவி நீடிப்பு வழங்கமாட்டார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. குறித்த குழு கலைக்கப்படவேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கருத்து வெளியிட்டிருந்தார்.

பரணகம ஆணைக்குழு கலைக்கப்பட்ட பின்னர், அதற்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் காணாமற்போனோர் தொடர்பில் அமைக்கப்படவுள்ள அலுவலகத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும் அறியமுடிகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு வகுத்துள்ள நான்கு திட்டங்களில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, தனி அலுவலகமொன்று அமைக்கப்படும் என்ற உறுதிமொழியும் இருக்கிறது.

போர்க்காலத்தில் வடக்கு, கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக தமது ஆட்சியின் போது ஓய்வுபெற்ற நீதிபதி மக்ஸ்வெல் பரணகம தலைமையில் மூவரடங்கிய குழுவொன்றை மகிந்த ராஜபக்ச அமைத்திருந்தார்.

இந்த விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில், உள்ளக போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையில் அதன் விடயப்பரப்பை மகிந்த விஸ்தரித்ததுடன், சர்வதேச சட்டதிட்டம் தொடர்பில் பரணகம குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக டெஸ்மன் டி சில்வா தலைமையில் ஆறு நிபுணர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவொன்றையும் அமைத்திருந்தார்.

ஆட்சிமாற்றத்தின் பின்னரும் பரணகம குழுவுக்கு பணிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புதல் வழங்கினார்.

அந்தவகையில் விசாரணைகளை முன்னெடுத்த பரணகம ஆணைக்குழு போர்க்குற்றங்கள் தொடர்பிலான தமது இறுதி விசாரணை அறிக்கையை கடந்த ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதியிடம் கையளித்தது.

எனினும், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை. அண்மையில்கூட யாழ்ப்பாணத்தில் பொது அமர்வு நடத்தப்பட்டது. அதன்பின்னர் அடுத்த அமர்வை எங்கு நடத்துவது என்பதுபற்றி முடிவெடுக்கப்படவில்லை. அடுத்தகட்ட நவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக பரணகம ஆணைக்குழு காத்திருந்தது.

எனினும், இன்று பதவிக்காலம் முடிவடைகிறது. ஜனாதிபதியிடமிருந்து இன்னும் ஒப்புதல் கிடைக்கவில்லை.

ஜனாதிபதியிடமிருந்து பதவி நீடிப்பு உத்தரவு கிடைத்தால் தமது அடுத்தகட்ட அமர்வை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு பரணகம குழு தயாராகவே இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-சி)

## இன்று

ஜனாதிபதி எதிர்வரும் 23ஆம் திகதியே, பெர்லினுக்குப் பயணம் மேற்கொள்ள முன்னர் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், தற்போது அவரது பயணம், திட்டமிட்டதை விட ஒரு வாரம் முன்னகர்த்தப்பட்டுள்ளது. இதன்படி அவரது மூன்று நாள் பயணம் இன்று ஆரம்பமாகிறது.

ஜனாதிபதியுடன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமைச்சர்கள் ரவி கருணாநாயக்க, மலிக் சமரவிக்கிரம, மகிந்த சமரசிங்க, பௌசர் முஸ்தபா ஆகியோரும் ஜேர்மனி செல்லவுள்ளனர்.

இந்தப் பயணத்தின் போது, ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மார்க்கலுடன், மைத்திரிபால சிறிசேன இருதரப்பு பேச்சுக்களை நடத்தவுள்ளார். அத்துடன், பல்வேறு இருதரப்பு உடன்பாடுகளும் கையெழுத்திடப்படவுள்ளன.

ஜேர்மனிக்கான மூன்று நாள் பயணத்தை முடித்துக்கொண்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆஸ்திரேலியா செல்லவும் திட்டமிட்டுள்ளார். (வ)

## வடக்கில்

எனவே, மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் விசேட குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஜனாதிபதி ஆராய்ந்து இந்த மாத இறுதிக்குள் முடிவை அறிவிப்பார்.

இதற்கு அமைவாக மக்களின் மீள்குடியேற்றம் துரிதமாக மேற்கொள்ளப்படும். இதன்மூலம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களில் மீதமுள்ள குடும்பங்கள் அனைவரும் மீள்குடியேற்றப்பட்ட செய்தி விரைவில் வரும் - என்றார். (வ)

---


## கண்ணீர் அஞ்சலி



யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த இசை ஆசிரியர்
**பகீரதி சுப்பிரமணியக்குருக்களின்**
(யா/கனகரத்தினம் ம.ம.வி) தாயார்

**ஸ்ரீமதி சுப்பிரமணியக் குருக்கள் அமிர்தகுணவல்லி**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தின ருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

(69320)(15,17) **இசை ஆசிரியர் கழகம் - யாழ் கல்வி வலயம்**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**சின்னத்தம்பி துரைராசா**

தோற்றம் 05.07.1925 — மறைவு 16.01.2016

திதி: வளர்பிறை சப்தமி

16.01.2016 அன்று இறைபதமடைந்த எமது தெய்வத்தின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (15.02.2016)திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இணுவில். (69313)(11,18,20) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை
**(காசாளர் - ப.நோ.கூ.சங்கம்)**



நாவாந்துறையைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை நேற்று 14.02.2016 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் மேரி றோகினியின் (கங்கேஸ்வரி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கமலேஸ்வரன், விஜயகுமார், மாதுனி, ஜெக்காந் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜமுனா, பவா, தயான், ஜெனி ஆகியோரின் நேசமிகு மாமனாரும் ஜான்சியா, ஐனுஜா, தனுஜா, ஆன், தரண்ஜா, ஷேர்னிஹனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.02.2016) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து புனித நீக்கலார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(69321)(15,17) **தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி சரஸ்வதி கனகரத்தினம்



முருகன் கோவிலடி, புலோலி வடமேற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி கனகரத்தினம் நேற்று (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும் அமிர்தகலா (ஆசிரியை - புலோலி மெ.மி.த.க பாடசாலை), ஸ்ரீகாந்தரூபன் (காணிப்பதிவகம் - பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தவேல், ஜெயந்தி ஆகியோ ரின் மாமியாரும் செந்தூரன், நிதுர்சன், கிரிதரன், ப்வுசிகா, தர்சிகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.02.2016) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முருகன் கோவிலடி,**
**புலோலி வடமேற்கு, புலோலி.** (c/29137)(15,17) **தகவல்: குடும்பத்தினர்.**

## புதுக்குடியிருப்பை வீழ்த்தியது முல்லை

யாழ்ப்பாணம், பெப். 15
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் சீனியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்று புதுகுடியிருப்பு ஆர்.சி. பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்றது. முல்லைத்தீவு லீக் அணியும் கிளிநொச்சி லீக் அணியும் மோதிய இந்த ஆட்டத்தில் முல்லைத்தீவு லீக் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)




## மாஸ்டர்ஸ் சம்பியன் லீக் தொடரில் சம்பியனானது ஜெமினி அரேபியன்ஸ்


மாஸ்டர்ஸ் லீக் தொடரின் இறுதி ஆட்டத்தில் லியோ லயன்ஸ் அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது சேவாக்கின் தலைமையிலான ஜெமினி அரேபியன்ஸ் அணி.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற லியோ லயன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஜெமினி அரேபியன்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப வீரரான சேவாக் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமையும், பின்வரிசை அடுத்தடுத்து தடுமாற்றமடைந்தமையுமே ஜெமினி அரேபியன்ஸின் இந்த வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. அதிகபட்சமாக கெம்ப் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும், சங்கக்காரா 30 ஓட்டங்களையும், லிவி 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் லியோ லயன்ஸ் அணி சார்பாக எட்டவாட், ஸ்றைறிஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், பீற்றர்சன், யாவீஸ், போத்தா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
லியோ லயன்ஸ் இலக்கை எட்டிவிடும் என்று நம்பப்பட்ட போதிலும் அந்த அணியின் முன்வரிசை வீரர்களான காட்டர், ரெயிலர், பிராங்லின் மூவரும் ஒற்றையிலக்கத்துடன் வெளியேற அணியின் ஆரம்பம் ஆட்டம்கண்டது.
மத்தியவரிசை வீரர்களை அச்சுறுத்தினார் முரளி. நேற்றைய ஆட்டத்தில் முரளிதரன் பெரிதளவான இலக்குகளை கைப்பற்றவில்லையாயினும் ஓட்டங்களை வழங்கவில்லை. மத்தியவரிசை, பின்வரிசை வீரர்களும் அடுத் தடுத்து ஆட்டமிழக்க 114 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது லியோ லயன்ஸ் அணி. அதிகபட்சமாக மார்சல் 46 ஓட்டங்களை எடுத்தார்.
பந்துவீச்சில் அரேபியன்ஸ் சார்பாக நவீட் அல் கசன் 4 இலக்குகளையும், மில்ஸ் 2 இலக்குகளையும், ஒனியன்ஸ், முரளிதரன், முஸ்டாக் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக நவீட் அல் கசனும், தொட ராட்ட நாயகனாக சங்கக்காரவும் தெரிவானார்கள். (ம)

## சென்.ஹென்றிஸ் – திருச்சிலுவை நாளை அரையிறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், பெப். 15
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான கொத்மலை சொக்ஸ் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பு குதிரைச் சவாரித் திடலில் இடம் பெறவுள்ளது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து களுத்துறை திருச்சிலுவைக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம)

## கரவெட்டி கழகங்களின் கால்பந்தாட்டத் தொடர்

கரணவாய், பெப். 15
கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை முதல் இடம்பெறவுள்ளது.
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
(ம-108)



## ஆசாத்துக்கு தடை

பாகிஸ்தானைச் சேர்ந்த கிரிக்கெட் நடுவர் ஆசாத் ரவுப்புக்கு. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை 5 ஆண்டுகள் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. ஊழல் மற்றும் தவறான நடத்தை களுக்காக அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபை நேரடியாகத் தொடர்புபடும் தொடர்களில் ஆசாத் ரவுப் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நடுவராகப் பணியாற்ற முடியாது.
கடந்த 2013ஆம் ஆண்டு ஐ.பி.எல். ரி-20 தொடரில் நடைபெற்ற சூதாட்டம் தொடர்பான வழக்கில் மும்பை காவற்றுறையினர் ஆசாத் ரவுப்பை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்திருந்தனர். மேலும் இந்தத் தொடரின் போது சூதாட்டத் தரகர்களிடம் இருந்து ஆசாத் ரவுப் விலை உயர்ந்த பொருள்களைப் பரிசாக பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு விசாரணை நடத்தியது. மேலும் நேரில் விளக்கம் அளிக்கும்படி ஆசாத் ரவுப்பை ஒழுங்கு நடவடிக்கை குழு இரு முறைகேட்டுக்கொண்டது.
ஆனால் ஆசாத் ரவுப் நேரில்வர மறுத்து விளக்கக் கடிதம் ஒன்றை அனுப்பினார். இதனை ஏற்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மறுத்தது. இந்த நிலையில் மும்பையில் நேற்றுமுன்தினம் கூடிய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு ஆசாத் ரவுப்பிற்கு 5 ஆண்டுகள் தடைவிதித்து உத்தரவிட்டது. (ம)

## ஆஸியின் பிடியில் நியூசிலாந்து

நியூசிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று ஆஸ்திரேலியாவின் இன்னிங்ஸ் 562 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்ததுடன் பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து நாள் முடிவில் 178-4 என்ற நிலையில் உள்ளது.
வெலிங்டன் மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்த ஆட்டத்தில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கசில்வூட் 4 இலக்குகளையும், சிடில், லையன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா இரண்டாம் நாள் முடிவில் 463-6 என்ற நிலையில் இருந்தது. வோக்ஸ் 176 ஓட்டங்களுடனும், சிடில் 29 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். வோக்ஸ் – சிடில் இணைப்பாட்டம் நேற்றும் சிறிது நேரம் நிலைபெற்றிருந்தது. ஓர் ஓட்டத்தால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் சிடில். ஆனால் தொடர்ந்தும் நிதானித்து இரட்டைச்சதம் கடந்தார் வோக்ஸ். பின்வரிசை வீரர்கள் பெரிதளவு நிதானிக்கவில்லை. 239 ஓட்டங்களுடன் வோக்ஸ் ஆட்டமிழக்க ஆஸ்திரேலியாவின் இன்னிங்ஸ் 562 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக சவுத்தி, போல்ட், அண்டர்சன், கிறைக், பிரேஸ்வெல் ஐவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினார்கள்.
இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 379 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது நியூசிலாந்து. இம்முறை ஆரம்பம் சிறப்பாக அமைந்தது. இலக்குச்சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது நியூசிலாந்து. 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குப்தில். அரைச்சதம் கடந்தாலும் லாதத்தால் தொடர்ந்து நீடிக்க முடியவில்லை. வில்லியம்சன், மக்கலம் இருவராலும் இன்னிங்ஸைக் கட்டமைக்க முடியவில்லை. நாள் முடிவில் நியூசிலாந்து 178-4. நிக்கொல்ஸ் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளார். (ம)

## நாவலர், ஞானம்ஸ் அடுத்த சுற்றுக்கு சோளங்கன், கழுகுகள் வெளியேறின



கரணவாய், பெப். 15
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் மற்றும் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**சோளங்கன் - நாவலர்**

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் கரண வாய் சோளங்கன் விளையாட்டுக் கழ கமும் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நாவலர் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக செயன் 18 ஓட் டங்களையும், சின்னா 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சோளங்கன் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் கீதன், நகுலேஸ் மற்றும் துவிசன் மூவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.
68 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சோளங்கன் அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களை மட்டும் பெற்று 5 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவி தொடரிலிருந்து வெளியேறியது. அவ்வணி சார்பாக கோகுலன் 25 ஓட்டங்களையும், துவிசன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நாவலர் அணி சார்பாக பானு மற்றும் சுலக்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக நாவலர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சின்னா தெரிவானார்.

**ஞானம்ஸ் - கழுகுகள்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கழுகுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக றஞ்சித் 22 ஓட்டங்களையும் வனஜன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.
82 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஞானம்ஸ் அணி 6.5 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்து, 6 இலக்குகளால் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. அதிகபட்சமாக பிரகாஸ் 30 ஓட்டங்களையும், துவி 15 ஓட்டங்களையும், ரஜீவ் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கழுகுகள் சார்பாக அனோஜன், பவன் மற்றும் விதுசன் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ஞானம்ஸ் அணியின் பிராகாஸ் தெரிவு செய்யப்பட்டார். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் லீக் அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 15
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் சீனியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் தாழ்வுப்பாடு ஆயர் ஜோசப் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற மன்னார் லீக் அணிக்கும் மடு லீக் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மன்னார் லீக் அணி 14:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 15
**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து பீனிக்ஸ் அணி மோதவுள்ளது.
**உதயசூரியனின் தொடர்**
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து அணி மோதவுள்ளது. (ம-23)




# 19வயதினருக்கான உலகக்கிண்ணத்தை வென்றது மேற்கிந்தியத் தீவுகளின் அணி

## இறுதியில் இந்தியாவை வீழ்த்தி

இந்திய அணியை 5 இலக்குகளால் வீழ்த்தி 19 வயதினருக்கான உலகக்கிண்ணத்தை கைப்பற்றியது மேற்கிந்தியத் தீவுகள் அணி. 19வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்றுவந்தது. இதன் இறுதியாட்டத்தில் இந்தியாவும் - மேற்கிந்தியத் தீவுகளும் நேற்று பலப்பரீட்சை நடத்தின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய இந்தியாவின் ஆரம்ப வீரர்களாக பான்ற் மற்றும் கிசான் இருவரும் களமிறங்கினார்கள். முதல் பந்துப்பரிமாற்றத்தில் பான்றை எதிர்பாராத விதமாக ஸ்டம்பிங் செய்து வெளியேற்றினார் இமாலச். புற்கள் நிறைந்த ஆடுகளம் என்பதால் பந்துவீச்சாளர்களின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. இந்தியாவின் முன்வரிசை அடுத்தடுத்து சரிய 50 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது அந்த அணி. ஒரு முனையில் இலக்குகள் சரிந்தாலும் மறு முனையில் நிலைத்து நின்றார் சர்பராஸ்கான். லொம்ரொர், பதம் இருவரும் சர்பிரஸுக்கு உதவியாக இரட்டை எண்களில் ஓட்டம் குவித்தனர். அரைச்சதம் கடந்தார் சர்பராஸ் கான். 51 ஓட்டங்களுடன் சர்பராஸ் கான் ஆட்டமிழக்க முடிவில் இந்தியா 145 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.
பந்துவீச்சில் தீவுகளின் சார்பாக ஜோசப், ஜோன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், பவுல் 2 இலக்குகளையும், கோல்டர், ஸ்பிரிஞ்சர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகளுக்கும் ஆரம்பம் சோதனையாகவே அமைந்தது. அணி முப்பது ஓட்டங்களை எட்டுவதற்கு முன்னர் ஆரம்ப வீரர்களான போப், இமாலச் இருவரும் ஆட்டமிழந்திருந்தனர். கெட்மையர், கார்ட்டி இருவரும் நிலைத்தாலும் அளவுக்கு அதிகமான பந்துகளை வீணடித்தனர். கெட்மையரின் ஆட்டமிழப்புக்குப் பின்னர் வந்த ஸ்பிரிங்கர், கூக்லி இருவரும் அடுத்தடுத்து வெளியேறினாலும் கார்ட்டி தொடர்ந்தும் நிலைத்துநின்று நம்பிக்கை கொடுத்தார். பவுலும் நிலைக்க இணைப்பாட்டம் ஆரம்பமானது. பந்துகளை இருவரும் தாராளமாக வீணடித்ததால் இறுதி வரை ஆட்டம் திரிலாகவே நகர்ந்து கொண்டிருந்தது. இருப்பினும் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் மூன்று பந்துகள் மீதமிருக்க இலக்கை அடைந்து உலகக்கிண்ணத்தை தனது பெயரில் எழுதியது மேற்கிந்தியத் தீவுகள். (ம)

## யங்ஸ்ரார் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 15
சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யங்ஸ்ரார் அணி வெற்றி பெற்றுள்ளது.
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 19 ஆவது வருடமாக வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து சண்சையின் அணி மோதிக் கொண்டது. இதில் யங்ஸ்ரார் அணி 3:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



## ஹென்றிஸ் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், பெப். 15
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவுக்கு அணிகளுக்கு இடையிலான கொத்மலை சொக்ஸ் கிண்ணத்துக்கான தொடரில் ஹென்றிஸ் கல்லூரி அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.
கொழும்பு குதிரை சாவாரித் திடலில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கண்டி தர்மராஜா கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

# கரவெட்டி விளையாட்டுக் கழகங்களின் பெருவிளையாட்டுக்கள் இன்று ஆரம்பம்


கரணவாய், பெப். 15
கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் பெருவிளையாட்டுக்கள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.
இதன்படி ஆண்களுக்கான கால்பந்தாட்டம் இன்று திங்கட்கிழமை முதல் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் மற்றும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானங்களிலும் ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடர் 20ஆம் 21ஆம் திகதிகளில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம், கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானங்களிலும், வலைப்பந்தாட்டத் தொடர் 20ஆம் 21 ஆம்



திகதிகளில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலும், பெண்களுக்கான துடுப்பாட்டத்தொடர் 22 ஆம் திகதி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளன.
ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் 27ஆம்திகதி இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்திலும், பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தொடர் சிவகுமரன் விளையாட்டுக் கழக மைதானத்திலும், பெண்களுக்கான கால்பந்தாட்டம் 28ஆம் திகதி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்திலும், இருபாலாருக்குமான எல்லே தொடர் மார்ச் மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்திலும், இருபாலாருக்குமான கபடித் தொடர் 12ஆம், 13ஆம் திகதிகளில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளன. இறுதி நிகழ்வான தடகளத் தொடரும் பரிசளிப்பு நிகழ்வும் 20ஆம் திகதி நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே.தீவுகளில் கலக்கப்போகும் சங்கா, வில்லியர்ஸ், மக்கலம்



கரீபியன் பிரிமியர் லீக் ரி-20 தொடரில் விளையாட சங்கக்கார, வில்லியர்ஸ் உள்ளிட்ட பல நட்சத்திர வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடர் மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைகளும் தாங்கள் நாட்டில் ரி-20 தொடரை நடத்தி வருகின்றன. அந்த வரிசையில் தற்போது மேற்கிந்திய தீவுகள் நடத்தி வரும் கரீபியன் பிரிமியர் லீக் தொடரும் பிரபலமடைந்து வருகிறது.

இந்நிலையில் இதில் விளையாடும் பார்படோஸ் டிரிடென்ட்ஸ் அணி தென்னாபிரிக்காவின் தலைவர் வில்லியர்ஸை ஒப்பந்தம் செய்துள்ளது. அதே போல் இலங்கை அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்கார ஜமைக்கா டாலாவாஸ் அணிக்காக விளையாடுகிறார். தவிர பிளாசிஸ், குப்தில், மக்கலம், வற்சன் உள்ளிட்ட பலரும் இதில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். (ம)



# இலங்கையைப் பந்தாடியது இந்தியா தரப்படுத்தலில் மீண்டும் முதலிடம்

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் இலங்கை அணியை 9 இலக்குகளால் வீழ்த்திய இந்திய அணி,தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆரம்ப வீரர்களாக டிக்வெல மற்றும் டில்சான். முதல் பந்துப்பரிமாற்றத்தை அஸ்வினிடம் ஒப்படைத்தார் டோனி. மூன்றாவது பந்தில் டிக்வெலவும் இறுதிப்பந்தில் டில்சானும் ஆட்டமிழக்க,முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே ஆரம்ப வீரர்களை இழந்து தவித்தது இலங்கை. ஆட்டத்தை மாற்றும் முனைப்பில் அடித்தாட முற்பட்டார் சந்திமல். அவரையும் வழியனுப்பி வைத்தார் அஸ்வின். டெஸ்ட் பாணியில் விளையாடிக் கொண்டிருந்த குணரத்னவும் அஸ்வினிடம் சிக்கினார். மொத்தத்தில் இலங்கையின் முன்வரிசை அஸ்வினின் சுழலில் கேள்விக்குறியானது. சிறிவர்த்தன நான்கு ஓட்டங்களுடனும் சானக 19 ஓட்டங்களுடனும் முறையே நெக்ரா, ஜடேயாவின் பந்துகளில் போல்ட் ஆனார்கள். ரெய்னா வீசிய பந்து சேனநாயக்காவின் துடுப்பு மட்டையின் அருகால் சென்றது. ஹொட்ஸ்பொட் முறையிலும் அது ஆட்டமிழப்பு இல்லை என்று பின்னர் தெரிய வந்தாலும் நடுவரின் தவறான தீர்ப்பால் ஆட்டமிழந்தார் சேனநாயக்கா. பின்வரிசை வீரர்களாலும் ஆட்டத்தின் போக்கை மாற்ற முடியாதுபோக,முடிவில் 82 ஓட்டங்களில் சுருண்டது இலங்கை. பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக அஸ்வின் 4 இலக்குகளையும், ரெய்னா 2 இலக்குகளையும், நெக்ரா, பும்ரா, ஜடேயா மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கியது இந்திய அணி. டோனி அஸ்வினிடம் முதல் பந்துப்பரிமாற்றத்தை கொடுத்தது போல சந்திமல் சேனநாயக்கவிடம் ஒப்படைத்தார். ஆனால் எவ்வித பயனும் இல்லை. சமீரவின் பந்தில் 13 ஓட்டங்களுடன் ரோகித் ஆட்டமிழந்தார். தவான், ரகானே இருவரும் இணைய,இலங்கையின் பந்துவீச்சாளர்களால் இயலவில்லை. சிறு வாய்ப்புக்களேனும் வழங்காமல் அடித்து நொறுக்க 37 பந்துகள் மீதமிருக்க ஓர் இலக்கை மட்டும் இழந்து இந்தியா வெற்றி பெற்றது. தவான் 46 ஓட்டங்களுடனும், ரகானே 22 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். ஆட்டநாயகனாகவும், தொடராட்ட நாயகனாகவும் அஸ்வின் தெரிவானார். (ம)




# சகலதுறை அசத்தலினால் தொடர் தெ.ஆபிரிக்காவிடம்

இங்கிலாந்து தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக்கொண்ட ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா,5 ஆட்டங்களைக் கொண்ட தொடரை 3:2 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய இங்கிலாந்துக்கு கேல்ஸ் ஒரு முனையில் நிலைத்துநின்று சதம் கண்டாலும்,மறுமுனையில் இலக்குகள் சரிய அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கேல்ஸ் 112 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 29 ஓட்டங்களையும், ரூட் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ரபாடா, தாகிர், வீஸ் மூவரும் தலா மூன்று இலக்குகளையும் அப்பொட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கு ஆரம்பம் சொல்லிக்கொள்ளும்படியாக சிறப்பாக அமையாவிட்டாலும்,வில்லியர்ஸ் சிறந்த இன்னிங்ஸை கட்டமைக்க அந்த அணி 6 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருக்க இலக்கை அடைந்தது. வில்லியர்ஸ் இறுதிவரை ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களைப் பெற்றார். அம்லா 59 ஓட்டங்களையும், வீஸ் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக ரொப்லி மூன்று இலக்குகளையும், ரசிட், மொயின் அலி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

5 ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் முதல் இரண்டு ஆட்டங்களில் தென்னாபிரிக்க அணி தோற்றிருந்த போதிலும் இறுதி மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.